பக்கங்கள்: முப்பத்து இரண்டு + VI

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 11 ஞாயிற்றுக்கிழமை (24.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 149



03 மகிழ்வித்துப் பார்ப்பதில் திருப்தி



08 உடைபடும் கனவுகள்



17 அரசியல் நடத்துவோரை வரலாறு மன்னிக்காது



23 வீடுக்குள்ளும் வந்துவிட்டார் புத்த பெருமான்...?



25 திசைமாறி வீசும் காற்று...!

## கடந்த மூன்றரை மாதங்களில் மட்டும் வடக்கில் 35 வன்புணர்வுக் குற்றங்கள்

### பெரும்பாலானோர் 16 வயதுக்குக் குறைந்த சிறுமிகள்



யாழ்ப்பாணம், ஏப். 24

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் வடக்கில் கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களில் மட்டும் 35 பாலியல் வன்புணர்வுக் குற்றங்கள் புரியப்பட்டுள்ளன என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 16 வயதுக்குக் குறைந்த சிறுமிகளாவர். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கிளிநொச்சியிலும் இக்குற்றங்கள் பதிவாகி உள்ளன.

பாதிக்கப்பட்டவர்களில் (29 ஆம் பக்கம் பார்க்க)

## 60 வயது முதியவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

தென்மராட்சிப் பிரதேசத்தில் 10 வயதுச் சிறுமி ஒருத்தியை வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 60 வயது முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி சிறு (29 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழு அறிக்கையை எதிர்கொள்ள புது வியூகம்

## தூதுவர்களை அழைத்து கொழும்பு ஆலோசனை

கொழும்பு, ஏப்ரல் 24

ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் பான் கீ - மூனினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்ட போர்க் குற்ற அறிக்கையை எதிர்கொள்ள இலங்கை அரசு புதிய வியூகங்களை இராஜதந்திர மட்டத்தில் தீவிரப்படுத்தி உள்ளது. அறிக்கைக்கான இலங்கையின் உத்தியோகபூர்வ பதிலுக்காக ஐ.நா. காத்திருக்கின்றது. எனினும், இதுவரை அந்தப் பதிலை அரசு வழங்கவில்லை. பதிலாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்த விவகாரம் விவாதத்துக்குக் கொண்டுவரப்பட்டால் அதனை எப்படிச் சமாளிப்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மேற்கு நாடுகளில் உள்ள தனது தூதுவர்களை உடனடியாகக் கொழும்பு வருமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

(29 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலையான முன்னாள் போராளி அவரது பிள்ளைகளுடன்

## கொழும்புக்கு வரும் பிளேக்கை மஹிந்த சந்திக்கமாட்டார்

கொழும்பு,ஏப்.24

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆகிய பிரிவுக்கான துணைச் செயலர் றொபேட் ஒ பிளேக் அடுத்த மாதம் 3 ஆம் திகதி கொழும்பு வருகிறார்.

அவர் தனது விஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.24

கொழும்பில் உள்ள ஐ.நாவின் அலுவலகத்துக்கு நேற்று முதல் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் கோரிக்கையை ஏற்று அரசு பொலிஸ் பாதுகாப்பை வழங்கி யுள்ளது.

பெரும் எண்ணிக்கையான பொலிஸார் அலுவலகத்தைச் சுற்றி பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-ஐ)

## ஐ.நா. அறிக்கை: கருணாநிதியும் திருவாய் மலர்ந்தார்

சென்னை, ஏப். 24

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இந்திய மத்திய அரசு தாமதமின்றி பொருத் (29 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்கள் மழை தொடரும்

கொழும்பு,ஏப்.24

நாடு முழுவதும் அடுத்த இருவாரங்களுக்கு மழை பெய்யும் சாத்தியம் உள்ளது என்று வளி மண்டலவியல் திணைக் (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நட்பு நாடுகளுக்குச் சென்று ஐ.நாவின் சதியை முறியடிக்க வேண்டும்

### சீறுகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு,ஏப்.24

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக விளக்கமளிக்க இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகச் செல்ல வேண்டும்.

ஜாதிக ஹெல உறுமய இப்படி யோசனையை முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு எதிராக ஐ.நா. தொடுத்துள்ள சதி நடவடிக்கையை முறியடிக்க வேண்டும். இதற்கு சகலரும் ஒன்றுபட்டு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

ஐ.நா. அறிக்கையில் உள்ள தவறுகளையும் ஜோடிக்கப்பட்டுள்ள தகவல்களையும் இலங்கை (29 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையிலிருந்து 81 பேருடன் சென்ற படகு ஆஸ்திரேலியக் கடலில் பிடிபட்டது

### அவர்கள் விசாரணைக்காக கிறிஸ்மஸ் தீவுக்கு

மெல்பேர்ன், ஏப்.24

இலங்கையில் இருந்து 81 பேருடன் ஆஸ்திரேலிய கடற்பரப்பை நோக்கி நேற்றுக் காலை வந்த படகு கொக்கோஸ் தீவில் மறித்து பிடிக்கப்பட்டதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்தது.

இலங்கையில் இருந்து புகலிடம் கோரி வந்ததாகக் கருதப்படும் இவர்கள் விசாரணைக்காக கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சட்டவிரோதமான முறையில் அகதி அந்தஸ்து கோரிய 600 (29 ஆம் பக்கம் பார்க்க)

எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைணடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.





இன்றே விரையுங்கள்


ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 021 224 0555
ஆலடிச் சந்தி, மானிப்பாய். 021 225 5343
பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 4937
கண்டி வீதி, சாவகச்சேரி. 077 9508957

சிங்கர் – யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

# புத்துயிர் பெற்றது டெல்லி





-டிலீப்-

ஆட்டத்தை நனைத்தனர் அதிரடிகளால். ரசிகர்களின் உள்ளங்கள் குளிர்ந்தன இவர்களின் சரவெடிகளால். சளைப்பில்லாது போராடியது இரு அணியும். இருந்தும் வெற்றி சென்றது டெல்லியின் வசம்.

டெல்லியில் நேற்று 26 ஆவது ஐ.பி.எல்லின் ஆட்டம். கில்கிறிஸ்ட்டுக்கு வெற்றி நாணயச் சுழற்சியில். முடிவு களத்தடுப்பு. அழைப்பு டெல்லிக்கு துடுப்பெடுத்தாட.

வோர்னர் - சேவாக் வருகை களத்துக்கு. பிரவீன் குமார் பந்து வீச்சு ஆரம்பிப்பு. வோர்னரின் அதிரடி தொடக்கம். முதலாவது ஓவரில் இரண்டு பவுண்டரிகளுடன் தொடங்கியது டெல்லியின் ஆட்டம். ஐந்தாவது ஓவர் மீண்டும் பிரவீனின் கையில். அடுத்தடுத்து சென்றது மூன்று பவுண்டரிகள். எட்டியது ஐம்பது ஓட்டங்கள். ஓவருக்கு ஒரு சிக்ஸர், பவுண்டரி தவறாமல் சென்றது.

எல்லைக்குள் பந்து நிற்கவில்லை. டெல்லியின் அதிரடியில் அடிக்கடி பந்து முட்டியது எல்லைக் கோட்டை. 12 ஆவது ஓவர் பந்து வீசினார் டேவிட் ஹஸி. சேவாக் வெளுத்தார் சிக்ஸர்கள். முதல் மூன்று பந்துகளும் எல்லைக்கு மேலாக சென்று தஞ்சமடைந்தது ரசிகர்களின் கையில். அடுத்த பந்தில் சேவாக்கின் ஆட்டம் வந்தது முடிவுக்கு.

டெல்லி 146 ஓட்டங்களில் இழந்தது முதலாவது விக்கெட். 35 பந்துகளில் பெற்றார் 77 ஓட்டங்கள். 4 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் சேவாக்கின் கணக்கில் வைப்பு. யோகேஸ் நாகர் களத்துக்கு வருகை. அதிரடியாய் சிக்ஸர், பவுண்டரி வெளுவை. அத்துடன் முடிக்கப்பட்டது ஆட்டம். மறு முனையில் போட்டுத்தாக்கினார் வோர்னர். எகிறியது ஓட்ட வேகம்.

ஆட்டம் நெருங்கியது இறுதிக்கட்டத்தை. பிரவீன் மீண்டும் அழைப்பு பந்து வீச. வந்தவர் வோர்னரின் ஆட்டத்தை முடித்து வைத்தார். பின் வரிசையில் வேணுகோபால் ராவ் - நமன் ஓஜா அதிரடிகளை அள்ளிப் பொழிந்தனர். வெற்றிகரமாய் நிறைவேறியது இறுதிக் கட்ட தாக்குதல். நொந்து நூலானது பஞ்சாப் பந்து வீச்சு. இருபது ஓவர்களில் இறுதியில் பெற்றது 231 ஓட்டங்கள். இழந்தது 4 விக்கெட்டுக்கள்.

சவாலான இலக்கை கலைத்தது பஞ்சாப். அதிரடிகளின் மன்னர்கள் கில்லி - வல்த்தாட்டி வந்தனர் களத்துக்கு. முதல் பந்திலேயே கில்லியின் வாய்ப்பை கோட்டை விட்டது டெல்லி. இரண்டாவது ஓவரில் வல்த்தாட்டியின் வாய்ப்பையும் விட்டது கோட்டை. பரிகாரமாய் அடுத்திரு பந்துகளிலும் பறந்தது சிக்ஸர்கள். அதனுடன் முடிவை அடைந்தது வல்த்தாட்டியின் ஆட்டம். மறுமுனையில் கில்லியின் ஆட்டம் தூள் கிளப்ப மார்ஷ் இணைந்தார். மார்ஷின் அதிரடி. கலங்கியது டெல்லி.

பதிலுக்கு பதிலடி கொடுத்தது பஞ்சாப். விக்கெட் வீழ்த்துவதற்கு பாடாய்பட்டது பாடு. அதிரடிகளைக் குறைவில்லாது பொழிந்தது பஞ்சாப். ஏட்டிக்குப் போட்டியாய் பறந்தது சிக்ஸர்கள் - பவுண்டரிகள். நீண்ட இடைவெளியின் பின்னர் வந்தது முடிவு. கில்லியின் ஆட்டத்துக்கு வைக்கப்பட்டது முற்றுப்புள்ளி. சளைக்கவில்லை மார்ஷ். வேகம் தணிக்காது சூடு தொடர்ந்தார் மார்ஷ். மறு முனையில் ஒத்துழைப்பு இல்லை.

இறுதி வரை போராடிய மார்ஷ் இறுதியில் 5 ஓட்டங்களால் தவறவிட்டார் சதத்தை. பின்வரிசையின் அதிரடி போதாது ஆட்டத்தின் வெற்றிக்கு. இருபது ஓவர்களில் முடிந்தது 202 ஓட்டங்கள். பறிகொடுத்தது 6 விக்கெட்டுக்கள்.

ஆட்டநாயகனாக வோர்னர் தெரிவு.

## ஐ.பி.எல் இருபத்தி ஆறாவது ஆட்டம்

ஆட்டம்: பஞ்சாப் கிங்ஸ் லெவன் எதிர் டெல்லி டெயாடெவில்ஸ் நாணயச் சுழற்சி: பஞ்சாப் கிங்ஸ் லெவன்

முடிவு: 29 ஓட்டங்களால் டெல்லி டெயாடெவில்ஸ் வெற்றி ஆட்டநாயகன்: வோர்னர்

டெல்லி டெயாடெவில்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வோர்னர் | c ஹரிஸ் b பிரவீன் குமார் | 77 | 48 | 07 | 4 |
| சேவாக் | c டினேஸ் கார்த்திக் b டேவிட் ஹஸி | 77 | 35 | 08 | 4 |
| யோகேஸ் நாகர் | c ஹரிஸ் b அபிஷேக் நாயர் | 11 | 09 | 01 | 1 |
| வேனுகோபால் ராவ் | ஆட்டமிழப்பில்லை | 28 | 15 | 03 | 1 |
| வின்ச் | c டினேஸ் கார்த்திக் b சாவ்லா | 03 | 05 | 00 | 0 |
| நமன் ஓஜா | ஆட்டமிழப்பில்லை | 19 | 08 | 01 | 2 |
| இப்ரான் பதான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹோப்ஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அகாகர் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மோர்னி மோர்கல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 14, lb 2) | 16 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பிரவீன் குமார் | 04 | 45 | 1 | 0 |
| ஹரிஸ் | 04 | 48 | 0 | 0 |
| சிறீ வாஸ்ரவா | 04 | 46 | 0 | 0 |
| அபிஷேக் நாயர் | 02 | 22 | 1 | 0 |
| சாவ்லா | 04 | 36 | 1 | 0 |
| வல்த்தாட்டி | 01 | 13 | 0 | 0 |
| டேவிட் ஹஸி | 01 | 19 | 1 | 0 |

TOTAL - 231/4 (20)
1-146 (சேவாக்), 2-164 (யோகேஸ் நாகர்), 3-179 (வோர்னர்), 4-184 (வின்ச்),

கிங்ஸ் லெவன் பஞ்சாப்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | b அரன் | 42 | 33 | 08 | 1 |
| வல்த்தாட்டி | c நாகர் b பதான் | 14 | 10 | 00 | 2 |
| மார்ஷ் | c சேவாக் b மோர்கல் | 95 | 46 | 09 | 6 |
| டினேஸ் கார்த்திக் | c சேவாக் b அகாகர் | 06 | 05 | 01 | 0 |
| ஹஸி | c சேவாக் b ஹோப்ஸ் | 20 | 10 | 00 | 2 |
| அபிஷேக் நாயர் | ஆட்டமிழப்பில்லை | 17 | 13 | 03 | 0 |
| சுனி சிங் | c ஹோப்ஸ் b அகாகர் | 02 | 04 | 00 | 0 |
| ஹரிஸ் | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 00 | 0 |
| சாவ்லா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிரவீன் குமார் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சிறீ வாஸ்ரவா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, lb 2, nb 2) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மோர்னி மோர்கல் | 04 | 32 | 1 | 0 |
| இப்ரான் பதான் | 03 | 26 | 1 | 1 |
| அரன் | 04 | 36 | 1 | 0 |
| நாகர் | 01 | 16 | 0 | 0 |
| அகாகர் | 04 | 47 | 2 | 0 |
| ஹோப்ஸ் | 04 | 43 | 1 | 0 |

TOTAL - 202/6(20)
1-25 (வல்த்தாட்டி), 2-97 (கில்கிறிஸ்ட்), 3-117 (டினேஸ் கார்த்திக்), 4-153 (டேவிட்ஹஸி), 5-184 (மார்ஷ்), 6-195 (சுனி சிங்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

சென்னை, மும்பை, கொல்கத்தா அணிகளுக்கு எதிராக 'ஹட்றிக்' வெற்றி பெற்றதற்கு அணியின் கூட்டு முயற்சியே முக்கிய காரணம் என கொச்சி ருஸ்கேர்ஸ் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

சென்னை, மும்பை அணிகளை வீழ்த்திய கொச்சி ருஸ்கேர்ஸ் கேரளா அணி கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை வீழ்த்தி 'ஹட்றிக்' வெற்றியைப் பதிவு செய்தது.

இதுகுறித்து கொச்சி அணித் தலைவர் ஜெயவர்தன கூறியதாவது:

நான்காவது ஐ.பி.எல் தொடரின் முதல் இரண்டு லீக் போட்டிகளில் தோல்வி கண்ட எங்கள் கொச்சி அணி அடுத்து நடந்த போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகளை அடுத்தடுத்து வீழ்த்தி 'ஹட்றிக்' வெற்றியைப் பதிவு செய்தது.

இதற்கு அணியின் கூட்டு முயற்சியே முக்கிய காரணம். வீரர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து முழுத் திறமையை வெளிப்படுத்தியதால் சுலப வெற்றி பெற முடிந்தது. தவிர எதிரணியின் பலம், பலவீனம், ஆடுகளத்தின் தன்மைக்கு ஏற்றவாறு விளையாடும் பதினொரு பேரும் தேர்வு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு போட்டிக்கு முன் சரியான திட்டமிடல் மற்றும் அதனை போட்டியில் சரியான இடத்தில் செயற்படுத்தியதால் எளிதில் வெற்றி பெற முடிந்தது. நான் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் பங்கேற்க சென்ற பின் கொச்சி அணியின் அணித்தலைவராக முன்னாள் இந்திய கப்டன் கங்குலி செயல்பட உள்ளார் என்று செய்திகள் வெளியாகின்றன.

ஆனால் நான் எப்போது இலங்கை செல்ல உள்ளேன் என்று தெரியவில்லை. ஐ.பி.எல் தொடரில் முழுமையாக பங்கேற்க விரும்புகிறேன். இதுகுறித்த அதிகாரபூர்வ தகவல் ஏதும் கிடைக்காததால் உறுதியாக எதையும் கூற முடியாது. தவிர கங்குலியின் தெரிவு கொச்சி அணி நிர்வாகத்தின் முடிவைப் பொறுத்தது. என் கையில் எதுவும் இல்லை. இவ்வாறு ஜெயவர்தன கூறினார். (15)

# பாகிஸ்தானுக்கு வெற்றி இலக்கு 222



பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 221 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பாக அதிகபட்சமாக டரன் பிராவோ 67 ஓட்டங்களையும் அணித்தலைவர் சமி 29 ஓட்டங்களையும் எட்வேட்ஸ் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.அதில் சமி 17 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். மூன்று பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் இந்த 29 ஓட்டங்களுள் அடங்கும்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பத்தில் இருந்து மெதுவான ஆட்டத்தையே வெளிப்படுத்தி வந்தது. இறுதி 50 பந்து வீச்சுக்களில் அதிரடியாக ஆடி 71 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுகள் இழப்புக்கு 221 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக வகாப் ரியாஸ் [illegible] பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி 13 ஓவர் நிறைவில் [illegible] இழந்த நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வருகின்றது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹசி வீழ்ந்தது ஆட்டத்தின் திருப்புமுனை



நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் சென்னையை வீழ்த்தி மும்பை வெற்றி பெற்றது.

இதில் ஆட்ட நாயகன் விருது பெற்ற மும்பை இந்தியன்ஸ் வீரர் ஹர்பஜன் சிங், சென்னை அணி பலம் வாய்ந்தது என்பதால் நாங்கள் 15 முதல் 20 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டதாக கருதினோம்.

மலிங்க பந்தில் மைக் ஹஸி அடித்த பந்தை பொலாட் மிகவும் அபாரமாக பிடியெடுத்தார். அவரது விக்கெட் இழப்பு தான் ஆட்டத்தின் திருப்பு முனையாக இருந்தது.

இதே போல டோனியின் பிடியெடுப்பை ரோகித் சர்மா சிறப்பாக எடுத்தார். ஹஸி, டோனி அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால்தான் எங்களுக்கு வாய்ப்பு வந்தது என்று தெரிவித்தார்.

ஹர்பஜன் சிங் 18 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் சாய்த்தார். (15)



# 52 ஆவது இடத்தில் டோனி

உலகின் பிரபலமான 100 பேர்கள் கொண்ட பட்டியலை 'ரைம்ஸ்' வார இதழ் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனியின் பெயர் இடம் பெற்றுள்ளது.

மேலும் ஒபாமா, ஆர்ஜென்ரீனா கால்பந்து நட்சத்திரம் மெஸ்ஸி ஆகியோரைக் காட்டிலும் டோனி அதிக செல்வாக்கு பெற்ற நபரானார். டோனி தலைமையில் 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா உலகக் கிண்ணத்தை வென்ற நிலையில் அவருக்கு 52 ஆவது இடம் கிடைத்துள்ளது.

இதேபோல் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி உட்பட 5 இந்தியர்கள் இடம் பிடித்துள்ளனர். (15)

# அபாரமான களத்தடுப்பு வெற்றிக்குக் காரணம்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் 8 ஓட்டங்களில் சென்னை சூப்ப கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்த வெற்றி குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் சச்சின், எங்களது களத்தடுப்பு நம்ப முடியாத வகையில் மிகவும் அபாரமாக இருந்தது. ரோகித் சர்மாவின் துடுப்பாட்டமும், ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சும் சிறப்பாக இருந்தது. ஆனால் களத்தடுப்பில் அதைவிட சிறந்ததாக இருந்தது என்று கருதுகிறேன்.

களத்தடுப்பு மூலம் நிறைய ஓட்டங்களை கட்டுப்படுத்தி



னோம். களத்தடுப்பு மிகவும் அபாரமாக இருந்தது. 10 முதல் 15 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்ததாக நினைத்தேன். என்றாலும் 165 ஓட்டங்கள் என்பது நல்ல 'ஸ்கோர்' தான். பந்து வீச்சும், களத்தடுப்பும் சிறப்பாக அமைந்ததால் வெற்றி பெற முடிந்தது. சில பிடியெடுப்புக்கள் மிகவும் அபாரமாக இருந்தது என்று அவர் தெரிவித்தார்.

தோல்வி குறித்து சென்னை சூப்ப கிங்ஸ் அணித்தலைவர் டோனி, எங்களது துடுப்பாட்டம், பந்து வீச்சு நன்றாகவே இருந்தது. ஆனால் களத்தடுப்பில் தான் வேறுபாடு ஏற்பட்டது. மும்பை இந்தியன்ஸ் வீரர்களின் களத்தடுப்பு அபாரமாக இருந்தது. அவர்கள் 2 முக்கிய பிடியெடுப்புக்களை எடுத்தனர். ஒரு கட்டத்தில் ஓட்ட விகிதம் அதிகமாகி சென்ற போது விக்கெட்டுக்களும் சரிந்தன. இதனால் எங்கள் இறுதி வரை வெற்றிக்காக போராட இயலாமல் போனது.

பந்துவீச்சில் பலவீனம் இருப்பது உண்மை தான். பகுதி நேர பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களை கொடுத்து விட்டனர். ரெய்னாவின் முதல் பகுதி நன்றாக இருந்தது. 2 ஆவது பகுதியில் ஓட்டங்களை வாரி கொடுத்து விட்டார் என்று டோனி தெரிவித்தார். (15)

# இலங்கை இந்திய மோதல் வேறு வடிவில்

## ஐ.பி.எல் போல் எல்.பி.எல்!

இந்தியாவில் ஐ.பி.எல். போட்டிகள் நடத்தப்படுவது போல், எல்.பி.எல். என்ற பெயரில் கிரிக்கெட் போட்டிகளை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எல்.பி.எல். போட்டிகளில் வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களும் கலந்து கொள்கின்றனர். இதற்கான வீரர்கள் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுவிட்டனர் என்று இலங்கைத் தமிழ் இணையத் தளங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

கிழக்கு இலங்கை அணியின் தலைவராக பாகிஸ்தான் வீரர் அப்ரிடி தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. எல்.பி.எல். கிரிக்கெட் போட்டிகளின் ஒளிபரப்பு உரிமையை 'ஈ.எஸ்.பி.என். ஸ்டார்' நிறுவனம் பெற்றுள்ளதாகவும் இணையதளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜுலை 18 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 17 ஆம் திகதி வரை எல்.பி.எல். போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

# டெஸ்ட் ஆட்டத்தில் யுவராஜ்



இந்திய டெஸ்ட் அணியில் யுவ ராஜ்சிங்குக்கு இதுவரை நிரந்தர இடம் கிடைக்கவில்லை.

ஆனால் உலகக் கிண்ண போட்டியில் அவர் சிறப்பாக ஆடி இருந்ததால் அவருக்கு இனி நிரந்தர இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவுக்கு உலகக் கிண்ணம் கிடைப்பதற்கு யுவராஜ்சிங்கும் முக்கிய காரணமாக இருந்தார். 8 இன்னிங்சில் ஆடிய அவர் 362 ஓட்டங்கள் குவித்தார். அதிகபட்சமாக ஒரு போட்டியில் 113 ஓட்டங்கள் குவித்தார். எனவே யுவராஜ் சிங்குக்கு டெஸ்ட் போட்டியில் இடம் அளிக்க கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

ஐ.பி.எல். போட்டி முடிந்ததும் இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுகள் செல்கின்றது. அங்கு 5 ஒரு நாள் போட்டி, 3 டெஸ்ட் போட்டிகள் ஆடுகின்றது. அதில் டெஸ்ட் அணியில் யுவராஜ்சிங்கும் இடம் அளிக்கின்றனர்.

6 வீரர்கள் மேற்கிந்தியத்தீவுகள் செல்லாமல் ஓய்வு எடுக்கப் போவதாகவும் இதனால் யுவராஜ் சிங்குக்கு ஒரு நாள் போட்டி தலைவர் பதவி வழங்கப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சச்சின், டோனி இருவர் மட்டுமே ஓய்வு எடுப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எனவே யுவராஜ் சிங்குக்கு அணித்தலைவர் பதவி வழங்கப்படும் என்பதை உறுதி செய்ய முடியாது என்று கிரிக்கெட் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (15)

# இந்தியப் பயிற்சியாளர் நியமனம் எப்போது?

இந்திய கிரிக்கெட் அணிக்கு உடனடியாக புதிய பயிற்சியாளரை நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) ஆர்வம் காட்டவில்லை. இதனால் புதிய பயிற்சியாளரின் நியமனம் தாமதமாகும் என்று தெரியவந்துள்ளது.

மும்பையில் வரும் 27 ஆம் திகதி நடைபெறும் பி.சி.சி.ஐ கூட்டத்தின் பல்வேறு துணைக் குழுக்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்க உள்ளதால் புதிய பயிற்சியாளர் நியமனம் செய்வது குறித்து முடிவெடுக்க பி.சி.சி.ஐ விரும்பவில்லை. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய பி.சி.சி.ஐ தலைவர் ஷாங்க் மனோகர், புதிய பயிற்சியாளர் நியமனம் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்திய அணி ஜூன் 1 ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகளுக்கு விளையாடச் செல்கின்றது. அதற்குள் பயிற்சியாளரை நியமிக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

இப்போதைய இங்கிலாந்து பயிற்சியாளர் அன்டி பிளவர், சிம்பாப்வேயின் துங்கன் பிளெட்சர் உள்ளிட்ட ஏராளமானோரின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளது. மேற்கிந்தியத்தீவுகள் தொடரின்போது புதிய பயிற்சியாளரை நியமிக்க முடியாத பட்சத்தில், இடைக்கால பயிற்சியாளரை நியமிப்பது குறித்து பேசப்பட்டு வருகின்றது என்றார். இலங்கை வீரர்கள் வரும் 18 ஆம் திகதி வரை ஐ.பி.எல் போட்டியில் விளையாடுவர் என்பதையும் அவர் உறுதி செய்தார். ஆனால் 18 ஆம் திகதி இலங்கை வீரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கால நீட்டிப்பு லசித் மலிங்கவுக்கு பொருந்துமா என்பதை அவர் உறுதிசெய்யவில்லை.(15)

# மகிழ்வித்துப் பார்ப்பதில் திருப்தி




மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடித் துடுப்பாட்டக்காரர் கிறிஸ் கெய்ல். ஐ.பி.எல் ஏலத்தில் விலை போகாத அவரை பெங்களூர் றோயல் சலஞ்ர்ஸ் அணி சமீபத்தில் ஒப்பந்தம் செய்தது.

கொல்கத்தா அணிக்கு எதிரான நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கெய்ல் விளையாடினார். இந்த ஐ.பி.எல். போட்டியில் தான் பங்கேற்ற முதல் ஆட்டத்திலேயே கெய்ல் அதிரடியாக விளையாடி ரசிகர்களை மகிழ்வித்தார். கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் அவர் கொல்கத்தா அணியில் விளையாடினார். தற்போது பெங்களூர் அணியில் உள்ள அவர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பந்து வீச்சை விளாசி தள்ளி ஓட்டங்கள் குவித்தார்.

கெயல் 55 பந்தில் 102 ரன்கள் எடுத்து முத்திரை பதித்தார். இதில் 7 சிக்சரும், 10 பவுண்டரியும் அடங்கும். இந்த அதிரடியான ஆட்டம் குறித்து கிறிஸ் கெய்ல், ரசிகர்களை மகிழ்விப்பதே எனது வேலை. ரசிகர்கள் சந்தோஷம் அடைவதற்காக போட்டியை காண வருகிறார்கள். அவர்களை மகிழ்ச்சிபடுத்தும் விதமாக ஆடியதில் எனக்குத் திருப்தி அளிக்கிறது. எனது ஆட்டம் மகிழ்ச்சியை தருகிறது.

ஐ.பி.எல். போட்டி என்பது ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்துவதுதான். அதற்கு ஏற்றவாறு நான் அதிரடியாக விளையாடினேன். ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு மிகவும் சாதகமாக இருந்தது. அதே நேரத்தில் ஈடன் கார்டன் ஆடுகளம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கணிக்க இயலாது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் எப்போதுமே விளையாடுவதில் நான் பெருமைப்படுகின்றேன் என்று அவர் தெரிவித்தார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யு.கே விசாவுக்காக அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

இலக்கண வேதனையு... மிகவும் இலகுவான, வீடியோ,ஓடியோ முறை மூலம் ,தனிப்ப... முறையில் கல்விவெளிநாடுகளில் சர்வதேச பல்கலைகழ...வகளில் பணியாற்றிய இங்கிலாந்து ஆங்கிலக்கல்வி முறை...ல் கற்பிக்கும் பட்டதாரி பயிற்றுனரின் பயிற்சிகள்.ஒரு முறை வருகை தந்து KU ஏன் வித்தியாசமானது என்பதையும் பல நூறு மாணவர்கள் நம்புவதற்கு காரணம் என்ன என்பதையும் அறியுங்கள். KU-UK Visa English Specialists

திருமணம் மூலமாக யு.கே செல்வோருக்கான (Settlement Visa )A1 சான்றிதழுக்கான பரீட்சைக்கும் பயிற்சிக்கும் யாழ்நகரில் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம்.

Ku's Spoken English© ESOL | IELTS | Key Exam
(No Grammar) (A College Managed by Qualified people)



அழையுங்கள் :077-6458253 www.kugroup.info

City & Guilds Approved Centre

நொலிட்ஜ் யூனிவேர்ஸ்

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை சொர்ணலிங்கம்

(பிரபல புகையிலை வர்த்தகர்)



வேலணை 4 ஆம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகச்சபை சொர்ணலிங்கம் நேற்று (23.04.2011) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும் சோபனா (ஜேர்மனி), முகுந்தன் (லண்டன்), மகீபன் (இலங்கை), சுதர்வினா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகுமார் (ஜேர்மனி), புஸ்பலோஜி (லண்டன்), மனோஜா (இலங்கை), ஸ்ரீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் மல்லிகாதேவி,காலஞ்சென்ற சிவமணி மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவநிதி, காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சரவணபவன், மதியாபரணம் மற்றும் லலிதா, மகாலிங்கம், மஞ்சுளாதேவி ஆகியோரின் மைத்துனரும் கௌசிகா (ஜேர்மனி), அக்ஷயன் (லண்டன்), அஷ்விகா (இலங்கை), அபிஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் கோபினி, கஜன், தர்ஷன், துவாரகன் ஆகியோரின் அன்பு ஆசையப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.22/2, கலாசாலை வீதி,* தகவல்:
*திருநெல்வேலி.* (3485) மகன்-மகீபன்.

## திருமதி இராமச்சந்திரன் இந்திராணி



புதுத்தோட்டம், அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கம்பர்மலை, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமச்சந்திரன் இந்திராணி 22.04.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் தம்பிராசா இராமச்சந்திரனின் அன்பு மனைவியும் துசிகரன், திவாகரன், கிருஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் தேவராசா, தேவராணி, கமலாதேவி, மகாதேவா (ஆசிரியை, யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலச்சந்திரன், தங்கக்கிளி (கனடா), உதயவரிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புதுத்தோட்டம், அல்வாய் தெற்கில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுத்தோட்டம்* தகவல்:
*அல்வாய் தெ ...* த.இராமச்சந்திரன் (கணவர்).

# இதய அஞ்சலிகள்

எமது அன்புத் தோழன் ச.பிரதீபன் (நெதர்லாந்து)
அவர்களின் பாசமிகு தந்தையார்



## சண்முகநாதன் சதானந்தன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இதய அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலம்பெயர் நண்பர்கள்

# இலக்கியக் கலந்துரையாடல்

வடமராட்சி இலக்கிய அவையால் மாதாந்தம் நடத்தப்படும் இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு எழுத்தாளர் தெணியான் தலைமையில் அல்வாய் கலாசார அவையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கலாமணி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் கந்தசாமி, ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.கணேசன், உள்ளூராட்சித் திணைக்கள உதவி உள்ளூராட்சி ஆணையாளர் இ.இராசையா, ஜி.வரதராஜன் ஓய்வுபெற்ற நிர்வாக அலுவலர் எஸ். இராசநாயகம் உட்படப் பலர் கலந்துகொள்வர்.

யப்பான் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பெரிய பூகம்பத்தின் பின்னர் யப்பான் நாட்டிற்குச் சென்று அதன் விவரங்களை ஆய்வு செய்து வந்த யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ராஜேஸ்கண்ணனின் அனுபவப்பகிர்வும் மற்றும் உள்ளூராட்சிச் சேவையில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து இறுதியாக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற வே.சிவராஜலிங்கத்தின் பிரிவுபசார விழாவும் பிற்பகல் நடைபெறவுள்ளன. இந்த இலக்கிய அவையின் 34 ஆவது அமர்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-131)

# கிரிக்கெட் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 24

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கிரிக்கெட் இறுதிப்போட்டி காலநிலை சீரின்மையால் பிற்போடப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ஓ-323)

**விற்பனையாளர் தேவை (பெண்)**

யாழ். நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு வியாபாரம் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 0772850753

**TOYOTA Belta கார் விற்பனைக்கு**

1.3cc, Pearl white color, 2008/12 New Shell model, Plm, Pls, 9500 km Digital A/C RPM meter, KL-xx 17 கையில், மீதி லீசிங் 30000x50 Doctor இடம் உள்ளது.
0771267222

**பணிப்பெண் தேவை**

வீட்டுவேலைகளைக் கவனிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:-0718474312

**வேலைக்கு ஆள்கள் தேவை**

Pizza, Chinese உணவு வகைகள் தயாரிக்கும் அனுபவமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தொடர்புக்கு: 021 2220456/0773732160
Thas Pizza Pizza
118, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**உடன் தேவை**

உலர் உணவு அல்லது ஐஸ்கிறீம் உற்பத்தியில் முன் அனுபவம் உள்ள திருநெல்வேலிப் பகுதியை அண்டிய பெண் பணியாளர்கள் உடன் தேவை.
தொடர்பு: 0750687310

**மணமகன் தேவை**

இந்து, 1984 கேட்டை, 8 இல் செவ்., விருட்சய ஆட்சி, பாவம் 80, B.Sc. அரச சேவை, தேவை பட்டதாரி அதற்கு மேல் தொழில் செய்யும் மணமகன் தேவை.
தொடர்பு: 021 3008263

**தேவை**

- விநியோக பையன்கள் (டேன்ரி ரொபி வகை)
- Bill கிளாக்
- உணவு பரிமாறுவோர்
- ... மேக்கர்

... ஹவுஸ்,
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி**

- சகல விதமான சளி, இருமலுக்கும் சிறந்த நிவாரணி
- தொடர்ச்சியாக பாவித்துவரும்போது ஆஸ்மா நோய்க்கு சிறந்த நிவாரணி
- 100 வீதம் மூலிகை கொண்டது
- ஆயுர்வேத சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

(109685)

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்
AY/MF/JA/295, உசன், மிருசுவில்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## மனோகரன் கலைவாணி

கடந்த 12.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது மகள் கலைவாணியின் 45 ஆம் நாள் நினைவு தினம் நாளை (25.04.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், மாணவிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சதாசிவம் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.
தொடர்புக்கு: 0778456585, 021 3209592 (3487)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மயில்வாகனம் நேசம்



தாவளை, இயற்றாலையைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் நேசம் நேற்று (23.04.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கணேசுவின் அன்புச் சகோதரியும் திருமதி அமிர்தரஞ்சினி (ஆசிரியர், வரணி மகா வித்தியாலயம்), திருமதி விமலரஞ்சினி (அபிவிருத்தி உதவியாளர், புத்தளம்), சசிகரன் (திட்டமிடல் நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கௌரிகரன், ரமேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொடிகாமம் சோனகன்புலவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவளை, இயற்றாலை,* தகவல்:
*கொடிகாமம்.* (சி/577914) குடும்பத்தினர்.

## அல்பேட் றெஜிஸ் யூட் யூஜின் (ரவி)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் றெஜிஸ் யூட் யூஜின் (ரவி) கடந்த (21.04.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பேட் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மலக்கியாஸ் - மரியமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் எமிலி அஞ்சலாவின் பாசமிகு கணவரும் பேட்சன் (பிரான்ஸ்), மரிய பேட்சலா, மரிய யூட்சலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரன் அருள்ராஜ் - குஞ்சாவின் அன்புச் சகோதரனும் அருட்சகோதரி மேசியின் (திருக்குடும்ப சபை) அன்பு மருமகனும் காலஞ்சென்ற டக்ளஸ் நீயூட் டன் - சுமதி (பிரான்ஸ்), டெனிஸ் கனிசியஸ் - சாந்தி, மேரி மேசிடஸ் டொறிஸ் - டென்சிங் (அமெரிக்கா), அன் ரனிஸ் ஸ்ரீபன் - ஜெயா (சுவிஸ்), அன்ரனிஸ் காந்தன் - பிறேமினி (பிரான்ஸ்), கிளமன்யூட் - வதனா (பிரான்ஸ்), றெஜி இராஜேஸ்வரன் - தேவி (இந்தியா), அருட்சகோதரி விக்ரறின் செல்வதி (திருக்குடும்ப சபை), றஜனி, செல்வகுமாரி - புஸ்பராசா, செல்வநாயகி - அகிலநாயகம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி இரங்கல் வழிபாட்டு நிகழ்வுகள் நாளை (25.04.2011) திங்கட்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பின்னர் அங்கிருந்து பூதவுடல் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, காலை 9 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.27, கோயில் ஒழுங்கை,* தகவல்:
*நாவாந்துறை,* றெ.எமிலி அஞ்சலா
*யாழ்ப்பாணம்.* (3489) (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கால் தடக்குப் போடாதீர்கள்!

★ வன்னிப் பிரதேசப் பாடசாலைகளில் பெருமளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. போர் நடைபெற்ற பின்னரும் மீள்குடியேற்றம் இடம்பெறுவதற்கு முன்னரும், செல்வாக்கு, அதிகாரிகளின் முகமன் என்பவற்றைப் பயன்படுத்தி வசதிகள் நிறைந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள் உண்டாக்கிய வெற்றிடங்களுக்கு இன்னும் எவரும் நியமிக்கப்படவில்லை.

★ கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால், அவர்கள் தமது நகைகளை அடகு வைத்தும், பெரு வட்டிக்குக் கடன் எடுத்தும் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

★ வன்னிப் பகுதியின் பல பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆமைவேகத்தில் நடைபெறுவதால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக சுண்டிக்குளம், கல்லாறு, பேய்ப் பாரைப்பிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

★ வன்னிப் பிரதேச வைத்தியசாலைகள் பலவும் குண்டு வீச்சுக்கும் எறிகணை வீச்சுக்கும் உள்ளாகிச் சேதமடைந்தன. அவற்றில் பல இன்னும் திருத்தப்படவில்லை. கிராம வைத்தியசாலைகளில் ஆளணியினர் பற்றாக்குறை, மருந்துத் தட்டுப்பாடு என்பன மக்களைப் பெரிதும் பாதித்துள்ளன.

★ மீளக்குடியமர்ந்த மக்களில் மிகப் பலர் தமது சுயதொழிலான விவசாயத்தை மேற்கொள்வதற்குப் போதிய பணவசதி மற்றும் உதவிகள் இல்லாத நிலையிலும் இளம் வயதினர் உரிய வேலை வாய்ப்புக்கள் இன்றியும் அல்லாடுகின்றனர்.

★ தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வன்னியில் நடைபெற்ற போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. போரின் இறுதிக் கட்டத்தில் மக்கள் தமது உயிரைக் காப்பாற்றப் பட்டபாடு, கஷ்டங்கள், துன்பங்கள், உறவுகளைப் பறி கொடுத்ததால், பலி கொடுத்ததால் உண்டான உளத்தாக்கங்கள் ஆழமானவை; உயிர் பிரியும் வரை உள்ளத்தை மெதுமெதுவாக அரித்து எடுப்பவை.

அல்லற்பட்டு, அல்லற்பட்டு ஆற்றாது பல மாதங்கள் வாழ்க்கையில் வாடி வெதும்பிய பின்னர், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் சிறை வைக்கப்பட்டு, முட்கம்பி வேலிகளுக்குள் முடங்கிக் கிடந்து எட்டு மாதங்கள் உழன்ற பின்னர், மீளக்குடியமர்வு என்ற பேரில் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி வாழத் தொடங்கியவர்களே வன்னி மக்கள்.

மீளக்குடியமர்வு வெகு மந்தகதியிலேயே நடைபெற்றது. இன்னும் சுமார் 50,000 குடும்பங்கள் மீள்குடியமர இதுவரை எவ்வித வசதியும் செய்யப்படவில்லை. கண்ணிவெடி அகற்றும் வேலைகள் பூர்த்தி அடையவில்லை என்பது கூறப்படும் பிரதான, மேல் முகப்புக் காரணம். அதற்கும் மேலதிகமாக இராணுவ (பாதுகாப்பு) நலன் நாடிய தேவைகளுக்காகவும் வன்னியின் பல பிரதேசங்களில் மீளக் குடியமர மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

மேலும் சிங்கள மக்களைக் குடியேற்றும் இரகசியத் திட்டங்களுக்காகவும் அந்தந்தப் பிரதேச மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவ தில்லை என்ற தகவல்களும் கசிந்து வருகின்றன. இவற்றுக்கும் மேலதிகமாக -

வன்னிப் பிரதேசத்தில் போர்க்காலத்துக்கு முன்னர் அப்பகுதி வாழ் மக்களுக்குக் கிடைத்த அளவுக்குக் கால்வாசி தானும் இன்னும் மருத்துவ வசதிகள் செய்யப்படவில்லை. அதனால் மக்கள் நோய்கள், தொற்று நோய்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு உயிராபத்துக்களும் மலிந்து வருகின்றன.

மீளக் குடியமர்வு இன்னும் வன்னியில் பல பிரதேசங்களில் தகரக் கொட்டில்களுடனேயே ஸ்தம்பித்துவிட்டது. நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் குறித்தொதுக்கிய உதவு தொகை போதாமையால் அவை அரைத் திட்டத்தோடு ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. மேற்கொண்டு அவற்றைப் பூர்த்தி செய்து வசிக்க முடியாத நிலை.

அடுத்து, படித்த வாலிபர்களுக்கு தொழில் வசதிகளைச் செய்வதற்கான திட்டம் எதுவும் வன்னிப் பகுதியில் ஆரம்பிக்கப்படவில்லை. விசாலமான வன்னிப் பிரதேசத்தில் விவசாயம், கைத்தொழில் துறைகளை மீளக் கட்டி எழுப்பும் சிந்தனை இன்னும் அரசுக்குப் பிறந்திருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் வன்னிப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. அங்கிருந்து இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்படவில்லை.

புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற சொற்பதங்கள் வெறும் புனுகு பூசப்பட்ட கவர்ச்சிச் சொற்களாக இருக்கின்றனவே அன்றி நடைமுறையில் வெறும் கோதாகவே உள்ளன. கொழும்பு அரசாங்கம் அவற்றைத் தனது அரசியல் விற்பனைப் பண்டங்களாக வைத்திருக்கிறது.

மாகாண, மாவட்ட மட்ட உயர் அதிகாரிகளும் தங்களுக்குள்ள தமது மக்களுக்கான சேவையை, கடமையை பகுத்துணர்ந்து ஆற்றாமல், தமது சுய நலன்களுக்காகவும் தமக்கு வேண்டியவர்களுக்காகவும் சுயசேவை ஆற்றி வருகிறார்கள். இது எமது இனத்தைப் பிடித்த சாபக்கேடு.

மொத்தத்தில் அரசாங்கமும் அதன் மந்திரிப் பிரதானிகளும் ஏன் அவர்களின் கீழ்ப் பணிபுரியும் எம்மூர் அதிகாரிகளும் நொந்துபோயுள்ள எமது வன்னி மக்களின் நலன் நாடி உண்மையான விசுவாசத்துடன் உழைப்பதாக இல்லை என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றது.

வன்னியில் வாழ்பவர்கள் என்பதற்காக அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒன்றைச் சொல்லி இன் னொன்றைச் செய்யும் போக்கு இனியும் வேண்டாம் என்று அரசையும் அதன் கீழ்ப் பணிபுரியும் அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஒரேநாடு ஒரே மக்கள் என்ற கோஷத்தைக் கூவிக்கொண்டு, வன்னி மக்கள் தமது முந்தைய நிலைக்குத் திரும்புவதற்குக் கால் தடக்குப் போடாதீர்கள்!

அபிவிருத்தி, சமாதானம் என்ற அலங்காரச் சொற்களை உச்சரித்து உலக நாடுகளிடம் உதவிகளும் நற்பெயரும் பெறும் இலக்கை மாற்றி, உள்ளார்ந்த ரீதியாக விசுவாசமாகப் பணியாற்றச் சிந்திக்க வேண்டும்.

சிந்தையும் செயலும் ஒன்றாக இருந்தால் மட்டுமே எந்தச் செயலும் கடமையும் முழுமை பெறும். அத்திசை நோக்கிச் செயற்படுவது எப்போதோ?

ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம்,
அதன் உள்ளே இருப்பது ஈரும் பேனாம்
என்ற நிலையைத் தொடராதே அரசே!

# வடக்கு - கிழக்கில் சிறப்பாக சேவையாற்ற தமிழ் பேசும் பொலிஸார் அவசியம் தேவை

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நோயல் பிரான்சிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 24

தற்போது பொலிஸ் சேவையில் 2 வீதமான தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களே உள்ளனர். எனவே தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை மேலும் இணைத்துக் கொள்வதன்மூலமே தமிழ்ப் பகுதிகளில் சிறப்பான சேவையை வழங்க முடியும்.

இலங்கை பொலிஸ் பயிற்சிக் கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.நோயல் பிரான்சிஸ் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

பொலிஸ் படைக்குத் தமிழ்ப் பொலிஸாரை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது யாழ்.மாவட்டத்திலிருந்து 656 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்தனர்.

அவர்கள் அனைவரும்உடற் தகுதிகாண் நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதில் தேறியவர்களுக்கு விரைவில் எழுத்துப் பரீட்சை இடம்பெற வுள்ளது. எழுத்துப் பரீட்சையிலும் தேறுபவர்களுக்கு முக்கிய பதவி களுக்கு நியமனம் வழங்குவதற்கே நேர்முகத் தேர்வு இடம்பெறுகிறது.



யாழ்.மாவட்டத்திலிருந்து நாம் எதிர்பார்த்த அளவு திருப்தி அளிக்கக்கூடிய விண்ணப்பங்கள் எமக்குக் கிடைத்தன. எனினும் தற்போது இலங்கை பொலிஸ் சேவையில் 12 வீதமான தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் இருக்கவேண்டும். ஆனால் தற்போது 2 வீதமான தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களே சேவையில் உள்ளனர். எனவே மேலும் அதிக எண்ணிக்கையான தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. பொலிஸ் சேவைக்கு விண்ணப்பம் கோரப்படும்போது தமிழ் மக்களும் விண்ணப்பிக்கவேண்டும்.

தமிழ் பேசும் பொலிஸாரை அதிகளவில் இணைத்துக்கொள்வதன் மூலமே வடக்கு, கிழக்கில் சிறப்பாக பொலிஸ் சேவையை வழங்கக்கூடியதாக இருக்கும்.

பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான நேர்காணல் இரண்டாவது தடவையாக இங்கு இடம்பெறுகின்றது - என்றார். (த-14)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் விருப்பு வாக்குகளை மீள எண்ணக் கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் மனு

கொழும்பு, ஏப். 24

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின், விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு கோரி, மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 15 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினாலுமே, இந்த மனுக்களில் பெரும்பாலானவை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பேருவளை மற்றும் பஸ்கொட பிரதேச சபைகளின் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன், கலிகமுவ மற்றும் மடோல்ல பிரதேச சபைகளுக்காக போட்டி யிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் இருவர், மீண்டும் தமது விருப்பு வாக்குகளை எண்ணுமாறு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் இதற்கு முன்னரும் 10இற்கும் மேற்பட்ட இவ்வாறான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மனுக்களில், பிரதிவாதிகளாக, தேர்தல்கள் ஆணையாளர்கள், தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, நீதிமன்ற நடவடிக்கைகளால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் மீள் தேர்தல் தொடர்பான தீர்ப்பு, மே மாதம் 5ஆம் திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு தமிழ் பேசும் நீதிவான்கள்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் நீதிவான்களை நியமிக்க தாம் தீர்மானித்துள்ளார் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் கூறினார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நீதிவான்கள், சட்டத்தரணிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிந்துள்ளதால் நீதித்துறையின் செயற்பாடுகள் இப்போது வடக்கு, கிழக்குக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் நீதித்துறைச் செயற்பாட்டை துரிதப்படுத்தவும் தேங்கியுள்ள வழக்குகள் மீதான விசாரணையைத் துரிதப்படுத்தவும் நாம் நடவடிக்கை எடுக்க வுள்ளோம்.

தமிழபேசும் நீதிவான்கள், மொழிபெயர்ப்பாளர்கள், இதர ஊழியர்கள் ஆகியோரை விரைவில் நியமிக்க நான் தீர்மானித்துள்ளேன். வடக்கு, கிழக்கில் நீதித்துறையை விஸ்தரிப்பதற்கு வாய்ப்பாக தமிழ்பேசும் பொலிஸாரையும் நியமிக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

தமிழ்பேசும் பொலிஸாரின் தட்டுப்பாடு காரணமாக வழக்குகள் பிழையாகப் பதியப்பட வாய்ப்புகள் உள்ளன. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ்பேசும் சட்டத்தரணிகள் வடக்கு, கிழக்குக்குச் சென்று சேவையாற்ற வேண்டும் என்று நான் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வழக்குகளின் தேக்கத்தைக் குறைப்பதற்காக சட்டத்தரணிகளுக்கு உயர் பொலிஸ் உத்தியோகத்தர் நியமனம் வழங்கவும் நான் தீர்மானித்துள்ளேன். இதுதொடர்பாக நான் சட்டமா அதிபருடனும், பிரதம் நீதியரசருடனும் பேசியுள்ளேன் - என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியும் நல்லிணக்கமும் நாட்டின் சவால்கள்

''கோழிக்குஞ்சோ, கோழி முட்டையோ'' முன்னது என்பதற்கு ஒப்பாகவே ''நல்லிணக்கமும் நல்லாட்சியும்'' அமைந்துள்ளன. இவற்றுக்குச் சரியான விடை காண்பது கடினமாகும். நாட்டில் நல்லிணக்கம் நிலவினால் நிச்சயமாக நல்லாட்சி அமையும். நல்லாட்சி நிலவினால் நல்லிணக்கம் பொங்கிப் பெருகும். இதுவே இன்று நமது நாட்டின் பெருஞ் சவாலாக அமைந்துள்ளது. எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் இறைமை நாட்டு மக்களிடமே அமைந்துள்ளது. அவர்கள் தங்கள் தலைவிதியை நாட்டின் எதிர்காலத்தை தமது வாக்குப் பலம் மூலமே தீர்மானிப்பர். மக்கள் தீர்ப்பே மகேசுவரன் தீர்ப்பாகும்.

அண்மையில் இடம் பெற்ற 234 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மூலம் மக்கள் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சி 205 இடங்களைக் கைப்பற்றி தேசிய ரீதியில் வென்றது போன்று, உள்ளூராட்சி ரீதியிலும் பலம் பெற்றது போல, தமிழர் தரப்பும் இரண்டாவது கூடுதலான 12 இடங்களை பெற்றுத் தம்மை வலுப்பெறச் செய்துள்ளனர். மேலும் 70இற்குக் கிட்டிய எஞ்சிய தேர்தல்களிலும் இதே போக்குத் தொடருமென்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையில் இரு தரப்பினருக்கும் நாட்டின் எதிர்காலம், ஒற்றுமை, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியனவற்றில் பெரும் பொறுப்புகள் உள்ளன என்பது சொல்லி விளக்க வேண்டியதில்லை.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் கொழும்பிலுள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களைக் கூட்டான அமைப்பாக்கி, அந்த அமைப்பைக் கண்காணித்து வழி நடத்த ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு குழுவை (Corporation) அமைக்கும் புதிய முறையானது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆணை அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் ஜனநாயகத் தடைக் கல்லாக அமையுமா? அல்லது செயற்திட்டங்களை ஒருங்கிணைத்து சீரான நிர்வாகத்தை அமைக்கும் நோக்கமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். நாட்டின் நிர்வாகத்தில் அதிகாரப் பகிர்வு வலுப்பெறும் வேளையில் இத்திட்டம் மேலும் ஓர் அதிகாரக் குவிதலுக்கு வழிசமைப்பதாகக் கருத இடமுண்டு.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அரசியல் வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன; பிரிக்க முடியாதன; ஒன்றுக்கு மற்றது மாற்றாகவும் அமையாது. ஒன்றின் வளர்ச்சி மாத்திரம் நிறைவாகாது. இரண்டின் சமகால வளர்ச்சியே பூரணத்துவமான வளர்ச்சியாகக் கொள்ளலாம். எல்லா மாவட்டங்களும் ஒரே மாதிரியான வளர்ச்சியை வேண்டுவதில்லை. இடத்துக்கிடம் தேவைகள், வளர்ச்சிப் பாதைகள் உள்ளூர் வளங்களுக்கு அமைவாக வேறுபடும்.

மலையகத்தில் அடிப்படை மனிதாபிமானத் தேவைகள் அதிகம் உண்டு- வீட்டு வசதி, வைத்திய வசதி, கல்வி வசதி போன்றன முக்கியமானவை. உதாரணமாக வலப்பனைப் பிரதேசத்தில் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் 5.3% மாத்திரமே சித்தி பெற்றுள்ளனர்.

கிழக்கிலோ நிலப் பிரச்சினை அதிமுக்கியமானதொன்று; சொந்தக் குடியிருப்புகளை மீளப்பெறுதல், விவசாய, கடல்வள அத்துமீறல்களுடன் 40,000 இற்கு மேற்பட்ட விதவைப் பெண்களின் மீள்வாழ்வளிப்பு பெரும் சவால்களாகும். இதற்கு மேலாக இயற்கை அனர்த்த நிவாரணப் பணி முக்கியத்துவம் பெற்றுள்ளது. வடபிரதேசத்திலோ பெரும் உட்கட்டமைப்பு, மீள்பணிகள் மீள்குடியேற்றம், மீள்வாழ்வளித்தல், கடல் வள அத்துமீறல்கள், உயர் பாதுகாப்பு வலய மக்கள் மீள்குடியேற்றம், முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றம், உள - உடல் பாதிப்புக்குள்ளான அதிக எண்ணிக்கையிலான சிறார்களைப் பராமரித்தல், பெருந்தொகையிலான விதவைகளின் வாழ்வைச் சீர்செய்தல் போன்ற வன்னி மாநிலத் துன்ப துயரங்கள் கணக்கிலடங்காதன.

இப்பேற்பட்ட சொல்லொணாத் துயரங்கள் நிறைந்த சமூகத்தில் நல்லெண்ணத்தை வளர்ப்பது சுலபமான காரியமல்ல. பாரபட்சமற்ற, தூரநோக்கோடு கூடிய அந்தந்தத் தேவைக்களுக்கேற்ப வழிமுறைகளை வகுத்து வழங்கக் கூடிய நல்லாட்சி மாத்திரமே நல்லெண்ணத்தை மேம்படுத்தும்.

இப்பணிகளை பூரணமாகச் செயற்படுத்துவதற்கு அந்தப் பகுதிகளின் தேவைகளையும் உணர்வுகளையும் நன்கறிந்த உள்ளூராட்சி, மாகாண, நாடாளு மன்ற மக்கள் பிரதிநிதிகளை ஈடுபடுத்தி ஆலோசனைகளைப் பெற்று மக்களின் ஈடுபாட்டுடன் செயற்படுத்தும் போது அவநம்பிக்கை தணிந்து, சமூகங்களிடையே நம்பிக்கை வளர்ந்து நல்லிணக்கம் மேலோங்கும்; நல்லாட்சிக்கு வழிகோலும், மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயகத்தை வளர்க்கும் பெரும் பொறுப்புடையவர்கள். அவர்களது கடமை உணர்ச்சி மிக்க பொறுப்புடையது; அவர்கள் சம்பந்தமாகப் பக்கச்சார்போ வேறுபாடோ காட்டக்கூடாது. அவர்கள் முழு நாட்டுக் குமுரியவர்கள். இதற்கு மேற்கோளாக சில நூற்றாண்டுகளுக்கு முன்பு பிரித்தானிய நிகழ்வு ஒன்று எமக்குப் பொருத்தமானதாகும். "The moment I am elected the M.P. for Bristol, I do not belong to Bristol alone; As an M.P. I belong to the whole country" - Edmund Burke. இது ஒரு புகழ் பூத்த அரசியலாளரின் கருத்து. ''நான் ஒரு தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவுடன், நான் எனது தொகுதிக்கு மாத்திரம் உரியவனல்ல; நான் முழு நாட்டுக்கும் உரியவனாகின்றேன்''

இக்கூற்று எவ்வளவு ஆழமானதும் பரந்துபட்டதுமான கருத்தைப் புலப்படுத்துகின்றது. எமது ஆட்சியாளரும், மக்கள் பிரதிநிதிகளும் குறுகிய அரசியல் லாபங்களைத் தவிர்த்து தூரநோக்குடன் நாட்டு மக்களின் முன்னேற்றமே தமது இலட்சியமாகக் கொண்டு புரிந்துணர்வோடும் அர்ப்பணிப்போடும் செயற்பட்டால் நல்லிணக்க, நல்லாட்சி மலர்வுக்கு வித்திட்ட பெருமையைப் பெறுவர். அடுத்த தேர்தலில் கண் வைக்கும் அரசியல்வாதியாக இல்லாது. அடுத்த சந்ததியில் கண் வைக்கும் நாட்டுப்பற்றாளராக (Statesman) மிளிர்ந்தால் நாடு சுபீட்சமடைவது உறுதியாகும்.

தமிழ்த் தரப்புப் பிரதிநிதிகள்- உள்ளூர் சபைகள் முதல் நாடாளுமன்றம் வரை - தத்தம் வட கிழக்கு வட்டத்தினுள் மாத்திரம் தம்மை மட்டுப்படுத்தாமல் மற்றும் பிரதேச தமிழர், மலையக தமிழர் மற்றும் முஸ்லிம்களுடனும் இணைந்து, உயர்ந்த புரிந்துணர்வுடனும், இணக்கப்பாட்டுடனும், தமிழ்த் தரப்பின் ஒற்றுமையான ஒரே குரலில் கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தம் கொடுப்பது காலத்தின் கட்டாயமாகும். வரலாற்றுத் தவறுகள் தொடராமல் இன ஒற்றுமைக்கும் சுபீட்சத்துக்கும் தமிழ், முஸ்லிம், மலையகத் தரப்பினர் யாவருக்கும் பெரும் பொறுப்பும் கடமையும் உண்டு. இந்த அணுகுமுறை பல தரப்பான தீர்வுகளுக்கும் வழிவகுக்கும்.

நல்லிணக்கம் ஒரு போதும் மேலிருந்து திணிக்கப்படுவதில்லை. இந்த எண்ணம் அடிமட்ட மக்கள் மனதிலிருந்து எழுந்தால் மாத்திரமே நிலையானதும் உண்மையானதும், உறுதியானதுமாக அமையும். ஆட்சியாளர் தங்கள் ஒவ்வொரு செயல்கள் மூலம் நல்லெண்ணத்தை வளர்க்கலாம் அல்லது தகர்க்கலாம். அண்மையில் கூறப்பட்ட விக்கிரமபாகு கருணரட்ணவின் கூற்று ஒரு சிறந்த உதாரணமாகும்.

''அண்மையில் நான் பத்தரமுல்லையில் உள்ள செத்சிரிபாயவுக்குச் சென்றிருந்தேன். விருந்தினர் தகவல்களைத் திரட்டும் படிவம் எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்தப் படிவத்தில் சிங்கள, ஆங்கில மொழிகளே இடம்பெற்றிருந்தன. தமிழ் மொழிக்கு அங்கு இடம் வழங்கப்படவில்லை. சிங்களம், ஆங்கிலம் தெரியாத பல தமிழ் மக்கள் அங்கே வந்திருந்தனர். அவர்கள் தமது கருமங்களை நிறைவேற்ற படும் கஷ்டங்களை என்னால் நேராகவே பார்க்கக் கூடியதாக இருந்தது. இந்த நிலை செத்சிரிபாயவில் மட்டுமல்ல நாடு முழுவதும் இதே நிலைதான்.'' - *வீரகேசரி*

இந்த நிலைக்கு தீர்வு கண்டு நல்லெண்ணத்தை சிறுபான்மையினரிடம் வளர்ப்பது மனம் இருந்தால் கடினமான காரியமில்லை. அரச படிவங்கள் யாவற்றையும் சிங்களம், ஆங்கிலத்தில் மாத்திரமல்லாது சிங்களம் - தமிழில் மாத்திரம் அச்சிட்டு விநியோகித்தால். 95 வீதமானோர் மன விரக்தியற்றுப் பயன் பெறுவர். இது 1988 மொழிச்சட்ட வரைவுக்குள் அமையும். பல படிவங்கள் மும்மொழியில் 'புழக்கத்தில் உள்ளன. ஒரு சில மாத்திரமே குட்டையைக் குழப்பி வளரும் நல்லெண்ணத்தைத் தகர்க்கின்றன.

அண்மையில் நியமிக்கப்பட்ட பழம் பெரும் முற்போக்கு வாதியான வாசுதேவ நாணயக்கார தேசிய மொழிகள் அமுலாக்கம் மற்றும் நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பதும் அவரது கூற்றுக்களும் செயற்பாடுகளும் இதுவரை ஆரோக்கியமானவையாகும். 'ஒரு கோழி கூவி விடிவதில்லை!'. ஒட்டு மொத்தமாக ஆட்சியாளரது போக்கில் மனமாற்றம் ஏற்பட்டால் இன நல்லிணக்கம் பெருக வழி பிறக்கும்.

நிதி ஒதுக்கீடுகளில் வன்னிப் பிரதேச மீள்குடியமர்வு, புனர்வாழ்வுக்கான ஒதுக்கீடுகள் அப்பகுதி பாதுகாப்பு ஒப்பீடுகளுடன் பார்க்கும் போது மிகவும் குறைவானதும் அக்கறையற்றதாகவும் காணப்படுவது சந்தேகத்தை ஏற்படுத்தி ஈற்றில் நல்லெண்ணத்தையும் தகர்த்து விடும்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் போர்ச்சூழல் ஒழிந்து அமைதி ஏற்பட வேண்டிய சூழ்நிலையில் முழுமையான சிவில் நிர்வாகத்தை அமைப்பது மக்களிடையே பயம், பீதி, சந்தேகம் யாவற்றையும் நீக்கி, அமைதியான அன்றாட வாழ்வை உறுதிப்படுத்துவது நல்லெண்ணத்தைச் சிறப்புற உதவும். பாதுகாப்புக் கடமைகளை மற்றைய பிரதேசங்களைப் போல் காவல்துறையினர் புரிந்துணர்வுடன் சீர்செய்ய முடியும். இராணுவத்தினர் வீடு வீடாகப் பதிவுகளைச் செய்வது கூட மேலும் யுத்தச் சூழ்நிலையை தொடரச் செய்கின்றது.

அண்மையில் எழுந்துள்ள ஒரு நாடு, ஒரு தேசம், ஓர் இனம் என்ற நிலைப்பாடு ஓர் உன்னத இலட்சியமாகும். அது இங்கு நடைமுறைச் சாத்தியமானதா? எங்கு? எவ்வாறு? எவ்விதத்தில் பொருந்தும்? ஒரே மொழி, மதம், இனம் வாழும் நாட்டிலேயே இந்த நிலை அடைவது அவ்வளவு சுலபமல்ல. அப்படியாயின் பல் கலாசாரம், பல்மத, இரு மொழி பேசும் எமது நாட்டுக்கு இது பொருந்துமா? என்ற சந்தேகமே மேலோங்குவது இயற்கை தானே! சுவிற்ஸர்லாந்தில் நான்கு மொழிகள் சம உரிமையுடையதாக அங்கீகரிக்கப்பட்டு, கன்ரன்(Canton) முறை ஆட்சி மூலம் பிராந்திய உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டு ''நாம் சுவிஸ் நாட்டு மக்கள்'' என்ற உள்ளார்ந்த உணர்வு சுயமாக எழுந்து உலகுக்கு ஒரு முன்னுதாரணமான நாடாக விளங்குகின்றது. ஆஸ்திரேலியா ஆறு மாநிலங்களைக் கொண்டதாக மாநிலச் சுயாட்சியுடன் கூடிய இணைப்பாக ''நாம் ஆஸ்திரேலியர்'' என்ற பெருமிதத்துடன் வாழ்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ பல்மொழி, பல் மதம், பல் கலாசார நாடாக மாநிலச் சுயாட்சி காரணமாக ''நாம் இந்தியர்'' என்ற எண்ணம் நிலைத்துள்ளது.

இந்நிலை ஒரு போதும் மேலிருந்து பலவந்தமாக மக்கள் மேல் திணிக்கப்படுவதில்லை. இந்த எண்ணம் அடி மட்டமாக மக்களிடமிருந்து சுயமாக எழுந்தால் மாத்திரமே பலமாக நிலை கொண்டு நாட்டின் ஒற்றுமைக்கும் செழிப்புக்கும் உரமேற்றும்.

எங்கு மத, மொழி, இன, கலாசார வேறுபாடுள்ள சிறுபான்மையினர் வாழ்கின்றார்களோ, அங்கு அவர்கள் தாம் சிறுபான்மையினர் என்ற ரீதியிலான எண்ணம் இல்லாதபோதுதான், ஒரு நாட்டவர் என்ற எண்ணம் தோன்றும். சிறுபான்மையினர் அரசால் நடத்தப்படும் முறை, பெரும்பான்மையினரின் தாம் பெரும்பான்மையினர் என்ற மிடுக்கு ஒழிந்து சக வாழ்வுப் போக்கு ஆகியன இந்த உயரிய நிலையை உருவாக்கும். இதற்கு மாறாக ஆட்சியாளரின் இரு மொழிச் செயற்பாட்டுக் கொள்கை அமுலாக்கல் அண்மைய நிகழ்வான தேசிய கீதம் ஒரு மொழியில் மாத்திரம் என்ற சலசலப்பு பல தமிழ்ப் பிரதேச பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை ஓரங்கட்டி அழித்து அரச மதமாக அங்கீகரிக்கப்பட்ட மதச் சின்னங்களை மற்றைய மதத்தவர் மனதை ஊறுபடுத்தும் விதமாக நிறுவுதல் யாவும் சிறுபான்மையினரை ஓரங்கட்டி, இன ஒற்றுமை, இன நல்லெண்ணம் ஆகியனவற்றைத் தகர்த்து ஒரு நாடு, ஒரு தேசம் என்ற இலட்சியத்துக்கு எதிர் மறையாய் ஓர் இனம் என்ற குறுகிய கோட்பாட்டுக்கு அமைவாகவே பார்க்கப்படலாம்.

ஞானக்கொழுந்தான உலகம் போற்றும் உத்தமரான புத்தர் பெருமானை நினைவு கூரும் வகையிலும் 2600 ஆம் ஆண்டு நினைவாகவும் உலகிலேயே அதி உயரமான 522 அடி சிலை அமைக்கும் முயற்சி பாராட்டுக்குரியது; வரவேற்க வேண்டியது. காலப்போக்கில் இந்தச் சிலை உலக மக்களின் கவனத்தை ஈர்த்து நாளடைவில் இந்தப் பிரதேசம் புனித நகரமாகப் பிரகடனப்படுத்தும் வாய்ப்பு உண்டு. மத ரீதியாக நோக்குமிடத்து புனித பூமியாகிய அனுராதபுரம், மிகிந்தலை போன்ற இடங்களில் அமைப்பது புனிதத் தன்மையையும் சிறப்பையும் அதிகரிக்கும். மாறாக பௌத்த கலாசார விழுமியங்கள் நிறைவு பெறாத வவுனியாவில் நிறுவும் திட்டம் இனப் பூசலை அதிகரிக்குமேயன்றி இன ஒற்றுமை வளர்க்குமோ என்பது பெரும் கேள்விக் குறியாகும்.



**வி.சிவசுப்பிரமணியம்**

எந்தவொரு பொருளாதார அபிவிருத்தியும் சம்பந்தப்பட்ட மக்களின் ஈடுபாடு, அர்ப்பணிப்பு ஆகியனவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. அச்சுறுத்தலற்ற, பயப்பீதியற்ற, சுதந்திர வாழ்வின் அடிப்படையிலேதான் பூரணத்துவமான மக்களாட்சி மலர்ந்து செழிப்புறும் மக்கள் நலிவுற்று மனிதாபிமானத் தேவைகள் யாவும் அற்று வாழும் போது ஜனநாயக ஈடுபாடு, பங்கீடு யாவும் இயற்கையாகவே குறைந்து நாளடைவில் முற்றாக மறை யும் வாய்ப்பும் உண்டு. உதாரணமாக அண்மைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ் மக்கள் வாக்களிப்பு வீதம் குறைந்தே காணப்பட்டது. முல்லைத்தீவில் 14% கலந்துகொண்டது இந்த நிலையின் பிரதிபலிப்பாகும்.

நிறைந்த அதிகாரப் பரவலுடன் கூடிய ஆட்சி அமைப்பே நல்லிணக்கத்தை மேம்படுத்தி நிலையான நல்லாட்சியை நாட்டில் நிலவச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணர் குழு அறிக்கையும் கூட்டமைப்பின் வரவேற்பும்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

போரின் இறுதி நாள்களில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. செயலருக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. அதுமட்டுமின்றி அந்தக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நேர்மையாக நடைமுறைப் புடுத்தும் என நம்புவதாகவும் அது தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் இலங்கை அரசு தொடர்பாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நாடாளுமன்றத்திலும் வெளியேயும் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்ட விடயங்கள்தான். அப்படியான சந்தர்ப்பங்களில் அவை நிராகரிக்கப்பட்டன என்பது மட்டுமின்றி கேலிக்குள்ளாக்கப்பட்டும் வந்தன. இவற்றை வெளியிட்ட ஊடகங்களும் மிரட்டப்பட்டன. ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டனர். காணாமற் போகச் செய்யப்பட்டனர்; சிறையிலும் அடைக்கப்பட்டனர். இந்தக் குற்றச்சாட்டுக் களைத் தீவிரமாக முன்வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூடக் கொல்லப்பட்டனர்.

அதாவது அரசு மேற் கொண்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எவருமே வாய் திறக்க முடியாத ஒரு பயங்கர நிலைமை உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் தார்மீகக் கடமையை முடிக்க அத்தனை வழிகளிலும் மேற்கொண்டு வந்தது.

இப்படியான ஒரு பெரும் அடக்குமுறைச் சூழலில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் ஐ.நா. செயலர் சார்பில் உலக அரங்கில் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மட்டுமன்றி முழுத் தமிழினத்தாலும் வரவேற்கப்படும் ஒரு சாதனையாகும். அந்தக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நேர்மையாக அமுல்படுத்தும் என எதிர்பார்த்த போதும் அதற்கான சாத்தியங்கள் எதுவுமில்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

ஆனால் இந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான தவிர்க்க முடியாத கடப்பாடு ஐ.நா. செயலருக்கு உண்டு: இலங்கையைத் தங்கள் பொருளாதார, போக்குவரத்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் முகமாகத் தங்கள் கட்டுக்குள் வைக்க விரும்பும் சில நாடுகள் அந்த நடவடிக்கையை எதிர்க்கக்கூடும். ஆனால் உலகப் பொதுமன்றம் என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபை தனது கடமையை நேர்மையாக முன்னெடுக்க வேண்டும்.

அதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பும் அவ்வாறே இருக்க முடியும்.

இலங்கை அரசு இந்த அறிக்கையை ஒரு பக்க சார்பானது எனவும் முறையான ஆய்வுகள் இன்றி வெளியிடப்பட்டதாகவும் கூறி நிராகரித்துள்ளது. அது மட்டுமன்றி தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி போன்ற கொடிய இனவெறிக் கட்சிகளும் கடுமையாக இந்த அறிக்கையை எதிர்த்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி எவ்வித கருத்தையும் வெளியிடாது நழுவல் போக்கைக் கைக்கொண்ட போதிலும் அதன் தலைவர்களில் ஒருவரான சஜித் பிரேமதாச இந்த அறிக்கையைக் கண்டனம் செய்துள்ளார். ஜே.வி.பி. அரசைக் குறைகூற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியுள்ளதே தவிர போர்க்குற்றங்கள் தொடர்பாக எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவில்லை.

எப்படியிருந்த போதிலும் அனைத்து சிங்கள அரசியல் சக்திகளும் ஏதோ ஒரு வகையில் இந்த அறிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்துள்ளன. அதாவது தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகச் சிந்திக்க எந்த ஒரு சிங்களத் தரப்பும் தயாரில்லை. இன்னும் போர் வெற்றியின் மமதையில் [illegible] கோருவதிலுமே அனைவரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

இப்படியே போர்க்குற்றங்களை மறுப்பதிலும் மறைப்பதிலும் சம்பந்தப்பட்டவர்களைக் காப்பாற்றுவதிலும் முழுச் சிங்கள அரசியல் கட்சிகளும் ஒரே நேர்கோட்டில் நிற்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுதான் என்ன?

ஈ.பி.டி.பியினர், 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற கோஷத்தை முன்வைத்து வீணைச் சின்னத்தில் போட்டியிட்டு 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். இன்று கூட்டாட்சி, தனியாட்சி கோஷத் தையும் வீணையையும் கைவிட்டு அமைச்சுப் பதவிபெற்று இணக்க அரசியல் நடத்துவது வேறு விடயம்.

ஆனால் இவர்களுக்கு வாக்களித்தவர்கள் பலரின் உறவுகள் இந்தப்போரில் பாதிப்புற்றிருப்பார்கள் மட்டுமன்றி பலியாகியிருப்பார்கள். இன்னும் இடப்பெயர்வின் இன்னல்களை அனுபவிப்பார்கள். எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அறிக்கையை ஆதரிக்கவும் நடைமுறைப்படுத்தும்படி கேட்கவும் கடப்பாடு உண்டு.

ஆனால் அவர்களோ கௌரவமாக மௌனம் காத்துத் தங்கள் அரச விசுவாசத்தை வெளிப்படுத்தித் தங்கள் பதவிகளையும் அதிகாரங்களையும் பாதுகாத்து வருகின்றனர்.

இதில் கேவலமான விடயம் என்னவெனில் தங்களைத் தெரிவு செய்த மக்களுக்காகக் கூட இவர்கள் குரல் கொடுக்கத் தயாராக இல்லாமல் இருப்பதுதான்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் மட்டக்களப்புத் தளபதி கருணா அம்மானோ ஒரு படி மேலே போய் இராணுவம் எவ்வித போர்க் குற்றங்களும் இழைக்கவில்லை எனவும் மக்களைப் புலிகளிடமிருந்து காப்பாற்றினர் எனவும் புலிகளே மக்களைக் கொன்றனர் எனவும் தெரிவித்துள்ளார். அதே வேளையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளும் அதன் தலைவர் பிள்ளையானும் எவ்வித கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை. இவர் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தில் முதலமைச்சராக வந்தவர். அவரும் வெகுவிரைவில் கருணா போன்று ஓர் அறிக்கை விட்டால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த அறிக்கை தொடர்பாக லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தன் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் பலவந்தமாக ஆள்களைப் படைக்கு இணைத்தல், சிறுவர்களைப் படையில் சேர்த்தல், வெள்ளைவான் கடத்தல் போன்ற நிபுணர் குழுவின் குற்றச்சாட்டுக்கள் கருணா குழுவினரையும் பிள்ளையான் கோஷ்டியையும் நோக்கி நீளும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களான படைக்குக் கட்டாயமாக ஆள்சேர்த்தல், சிறுவர்களைப் படையில் இணைத்தல், போர்ப் பிரதேசங்களை விட்டு மக்களை வெளியேறவிடாது தடுத்தல் என்பன போன்றவையும் எவரும் மறந்து விட முடியாது.

ஆனால் இந்தக் குற்றங்களை மேற்கொண்ட விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த தனிநபர்கள் இப்போ அரச புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து இயங்குவதாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தமிழ்ப் பொதுமக்கள் மத்தியிலும் பரவலாக இப்படியான கருத்துகள் உண்டு.

போரின் இறுதி நாள்களில் பொது மக்களுக்கும் புலிகளுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நோக்குடனேயே இந்தத் தனி நபர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டதாக அவர்கள் மீது அந்த நாள்களிலேயே பலர் குற்றம் சுமத்தியதுண்டு. அவர்கள் இன்று அரச புலனாய்வுப் பிரிவில் இணைந்து இயங்குவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. எப்படியிருந்த போதிலும் ஐ.நாவின் நிபுணர் குழுவின் அறிக்கை ஆட்சியாளர்களையும் அரச படையினரையும் அரசுடன் இணைந்து நிற்பவர்களையும் குற்றம் சுமத்தி நிற்கிறது.

ஆனால் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்த அறிக்கையை வெளியிட வேண்டாம் எனவும் அதன் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனவும் ஒரு செய்தியாளர் மாநாட்டில் ஐ.நா. செயலரைக் கோரியுள்ளார்.

போரின் இறுதி நாள்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பாகச் சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்துவதில் நிபுணர் குழு வெற்றி பெற்றுள்ளது என்றே கூறவேண்டும்.

போர் முனைப்புப் பெற்ற நாள்களில் ஐ.நா. உலக உணவுத் திட்டம் உட்பட சகல தொண்டு நிறுவனங்களும் போர்ப் பிரதேசங்களை விட்டு வெளியேற்றப்பட்டன. தேசிய, சர்வதேச ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டன. ஒரு சில தகவல்களை லண்டன் பி.பி.ஸி போர்ப்பிரதேசங்களில் பணியாற்றிய மருத்துவர்களிடமிருந்து பெற்று ஒலிபரப்பியது. பின் அப்படித் தகவல் வழங்கிய மருத்துவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இப்படியான ஒரு மூடப்பட்ட பிரதேசத்துக்குள் வைத்து மேற்கொள்ளப்பட்ட மனிதகுல விரோத நடவடிக்கைகள் வெளிவந்துள்ளன.

இப்படியான ஒரு நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் துணிச்சலுடனும் நேர்மையுடனும் இந்த அறிக்கையை வரவேற்றதும் மட்டுமன்றி அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியுள்ளது.

ஜீ.எல்.பீரிஸ் அரசு சார்பில் அதற்கு நேர் விரோதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அரசுடன் இணைந்து நிற்கும் தமிழ்க் குழுக் களும் அதே வழியையே பின்பற்றி யுள்ளன.

எப்படியிருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் சர்வதேசம் கொடுக்கும் அழுத்தங்களுக்கு வலுச்சேர்க்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைபடும் கனவுகள்



பெயர், புகழ் என்பவற்றை அடைவதற்கு எல்லோருக்குமே ஆசை இருக்கத்தான் செய்கின்றது. எனினும் அந்த ஆசை எல்லை மீறுகின்ற போது சில சந்தர்ப்பங்களில் எல்லாமே கெட்டுக் குட்டிச்சுவராகப் போகக் கூடிய நிலையும் ஏற்படுவதுண்டு. இப்படி எல்லோரிடமும் நல்லபெயர் எடுக்க வேண்டும் என்பது ஒருவனுடைய நீண்டகாலக் கனவு. ஆனாலும் அதற் கான வாய்ப்புகள் அவனுக்கு எட்டாக் கனியாகவே இருந்து வந்தது. என்ன செய்யலாம்? என்ற யோசனையோடு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு பக்கத்து 'சீற்றி'ல் ஒரு குழந்தை, அதன் தாய் ஊட்டிவிட்ட உணவை மறுதலித்து, 'எனக்கு வேண்டாம்' என முரண்டு பிடித்துக் கொண்டிருந்தது.உடனேயே ஒரு சகபயணி அந்தத் தாய்க்கு உதவமுன்வந்தார்.

''பிள்ளைக்கு சாப்பாடு வேண்டாமோ?'' அன்பு கலந்த அவரின் வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே குழந்தை தன் தலையைப் பலமாக அசைத்து, ''எனக்கு ஒண்டும் வேண்டாம். போ!!!'' என தன் எதிர்ப்பைப் பதிவு செய்தது. ஆனாலும் பயணி விடுவதாயில்லை.

''ஓ! அப்பிடியே சங்கதி. அப்ப உங்கட சாப்பாட்டை நான் சாப்பிடப் போறன்'' என்று பயமுறுத்தும் குரலில் சொல்லியவாறு வாயைச் சற்று அகலத் திறந்தவாறு, உணவுக் கிண்ணத்தினருகே தன் தலையைக் கொண்டு சென்றார். தன் உணவு உண்மையிலேயே பறிபோய்விடப்போகிறதோ என்ற பயத்தில் குழந்தை அந்த உணவுக்கிண்ணத்தை எடுத்து தன்மடியில் வைத்துக் கொண்டு, 'விறு விறென' தன் பாட்டிலேயே உணவை உட்கொள்ளத் தொடங்கிவிட்டது. குழந்தையின் தாய் அந்தப் பயணியை நன்றியோடு பார்த்தாள்.அருகிலிருந்தவர்கள் அந்தப் பயணியின் சாதுரியத்தை பாராட்டினர். இது எங்களது 'நல்ல பெயர் வாங்க விரும்புபவனின்' மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. ''இப்படிச் செய்தால் நல்ல பெயர் வாங்கலாம்'' என்ற எண்ணம் அவனுள் ஏற்பட்டது. இன்னொரு நாளும் அவன் பஸ்ஸில் பயணிக்கவேண்டியேற்பட்டது. இம்முறையும் இவனுக்குப் பக்கத்து 'சீற்றி'ல் ஒரு கைக்குழந்தையும் தாயும் அமர்ந்திருந்தனர்.கொஞ்ச நேரத்தில் குழந்தை வீரிட்டு அழத்தொடங்கியது. அந்த அழுகையை நிறுத்துவதற்கு தாய் படாதபாடு பட்டாள். ம்கூம்! ஒன்றுக்கும் அந்தக் குழந்தை மசியவில்லை. வேறு வழியில்லாததால் தன் சேலைத் தலைப்பால் மறைத்தபடி தாய்ப்பாலை அந்தக் குழந்தைக்கு ஊட்டத் தொடங்கினாள் தாய். ஆனால் அதனையும் நிராகரித்தபடி அந்தக் குழந்தை அழத் தொடங்கியது.

ஏற்கனவே முன்னர் ஒரு பஸ் பயணத்தில் உணவை வெறுத்த குழந்தையின் மனதை மாற்றிய பயணியின் செயல் 'நல்லபெயர் விரும்பிக்கு' நினைவில் வந்துவிட்டது. ''இண்டைக்கு அப்படி நான் செய்து நல்லபெயர் எடுக்க வேணும்'' என்று எண்ணியவாறு, குழந்தையின் அருகே தலையை நீட்டினான்.

''உங்களுக்கு அம்மான்ர பால் வேண்டாமோ?'' செல்லமாகக் குழந்தையைக் கேட்டான்.

ஆறுமாதக் குழந்தைக்கு இது புரியுமா என்ன? அது 'திரு திரு'வென முழித்து விட்டு மீண்டும் அழுகையைத் தொடர்ந்தது. எனவே எமது ஆள் அடுத்த கட்டத்துக்குத் தாவினான்.

''இப்ப நீங்கள் அம்மான்ர பாலைக் குடிக்காட்டி நான் குடிச்சிடுவன்!'' என்று குழந்தையைப் பார்த்துக் கூறியவாறு தாயை நோக்கி நகர்வது போல பாவனை செய்தான். அவ்வளவுதான்! பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லாம் ஒன்றுக்கு நூறு முறை அவனைப் 'பதம்' பார்த்த பின்பே, நொந்து நூலான நிலையில் அவனை வெளியே தூக்கிப்போட்டனர்.

பெயரும், புகழும் வாங்க நினைத்து அவமானப்பட்ட இந்த நபரின் நிலையிலேயே இப்போது எங்கள் ஜனாதிபதியும் இருக்கிறார்.

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள். அதேபோல அடிக்கிற தெய்வமும் கூரையைக் கிழித்துக் கொண்டுதான் அடிக்கும் போலிருக்கிறது. இல்லாவிட்டால் எல்லாப்பக்கமும் தலையிடியைத் தருகின்ற விடயங்கள் ஒரேயடியாக ஜனாதிபதிக்கு வந்துசேர்ந்திருக்க முடியாது.

**வெற்றிச் செய்தி ஒன்று தேவை**

எகிறிவரும் விலைவாசிகளை மக்களிடம் இருந்து தந்திரமாக மறைப்பதற்கு மஹிந்தவுக்கு ஏதாவது ஒரு வெற்றிச் செய்தி அவசரமாகத் தேவைப்பட்டது. முன்னராவது யுத்தவெற்றி முழக்கங்களிடையே சத்தமின்றி பொருள்களின் விலைகளைக் கண்டபடி ஏற்றி விட்டு நிம்மதியாக இருக்க அதிகாரத்திலுள்ளவர்களால் முடிந்தது.ஆனால் இப்போது தெரியாத்தனமாக யுத்தத்தை முற்றாகப் பிடுங்கியெறிந்துவிட்டதால் அந்த வசதியும் இல்லாமல் போயிருந்தது. எனவே உலகக்கிண்ண கிரிக்கெட் வெற்றியை அரசு ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது. முதலில் விளையாட்டாகவே ஆரம்பித்த இந்த எதிர்பார்ப்பு இலங்கை அணி வெற்றிக்கோட்டை அண்மித்துக் கொண்ட சமயத்தில் ''அரையிறுதியில் நியூசிலாந்தை இலங்கை தோற்கடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்த கையோடு'' தன்சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொண்டது. விளையாட்டுக்கு அரசியல் சாயம் அடிக்கப்பட்டது. யுத்த வெற்றி போல் அது சித்திரிக்கப்பட்டது. அப்போதுதான் அந்த வெற்றிக்குள் மக்களை முழுமையாக முழ்கடித்து தாம் நினைத்தபடி சுமைகளை அவர்களின் முதுகில் ஏற்றமுடியும் என்பது அரசின் கணிப்பு. ஆனால் இறுதிப் போட்டியில் மஹிந்த சிந்தனைவாதிகளுக்கு விழுந்தது இரட்டை அடி. ஒன்று... இலங்கையணியின் தோல்வி.

இரண்டு... ஜனாதிபதிக்கு இந்தியா உரிய மரியாதையை வழங்காமை. (எனினும் ஏற்கனவே விலையேற்றத் தீர்மானித்திருந்த பொருள்களில் பெற்றோலின் விலையை மாத்திரம் அதிகரித்து ஒருவாறு சமாளித்துக் கொண்டது அரசு)

தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு திரும்பிய ஜனாதிபதிக்கு அடுத்த அதிர்ச்சி வைத்தியம் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வடிவில் காத்திருந்தது. மிகமோசமான மனித உரிமைமீறல்களில் இலங்கையரசு இறுதிப் போரில் ஈடுபட்டதால் அது குறித்த சர்வதேசப் பொறிமுறை ஒன்று அவசியம் என்று அந்த அறிக்கை மஹிந்தரின் மனதில் வாளைச் செலுத்தியது.

இதுதான் சந்தர்ப்பம் என்று இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச விசாரணைகள் நடத்தப் படவேண்டுமென எல்லாத் திசைகளில் இருந்தும் குரல்கள் எழத் தொடங்கின. நாட்டின் தலைவருக்கு இரத்தக் கொதிப்பு உச்சத்துக்குப் போனது.

எனவே பயங்கரமான கொதிப்பில் இருக்கும் ஜனாதிபதியைக் குளிர்விக்கும் முயற்சிகளில் அவரது அடிப்பொடி அதிகாரிகள் இறங்கினர்.அதில் முக்கியமானது அமெரிக்காவின் 'ரைம்' சஞ்சிகையின் உலகின் சக்தி மிக்க மனிதர் யார்? என்ற கருத்துக் கணிப்பில் ஜனாதிபதி மஹிந்தவை வெற்றிபெறச் செய்து அதன் மூலம் சர்வதேச ரீதியில் மஹிந்தரின் புகழை நிலை நிறுத்தலாம் என அவர்கள் திட்டம் போட்டனர். ஏற்கனவே மகாவம்சத்தின் புதிய பதிப்பில் இறுதி மூன்று அத்தியாயங்களிலும் கதாநாயகராக மஹிந்தரை முன்னிலைப் படுத்தும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சர்வதேச ரீதியில் பெயர் வாங்கித் தரவல்ல இந்தத் திட்டத்துக்கும் ஜனாதிபதி மறுபேச்சின்றித் தலையசைத்தார்.

**சர்வதேசக் கீர்த்தி பெறும் முயற்சி**

அவரது ஆணைக்காகவே காத்திருந்த அதிகாரிகள் அடுத்த நொடியே காரியத்தில் இறங்கினர். கோடிக்கணக்கான பணம் உலகெங்கும் வாரியிறைக்கப்பட்டது. ஏற்கனவே கள்ளவாக்குப் போடுவதில் அதிசூரர்களான நம்மவர்கள் 'ரைம்' சஞ்சிகைக் கருத்துக் கணிப்பிலும் தம் கைவரிசையைக் காட்டியதாகக் கூறப்படுகின்றது. இதன் பயன் ஜனாதிபதியின் தொலைந்து போன புன்னகையை மீட்டெடுக்க உதவியது. அமெரிக்க ஜானதிபதி ஒபாமாவையே பின்னுக்குத் தள்ளி விட்டு, அதிவேகமாக கருத்துக் கணிப்பில் மஹிந்த முன்னேறிக் கொண்டிருந்தார்.

''ஜனாதிபதி 6ஆம் இடத்தை நெருங்கி விட்டார்.'' ''ஜனாதிபதி உலகெங்கும் உள்ள 'ரைம்' வாசகர்களின் ஆதரவுடன் 4 ஆம் இடத்தை அடைந்து விட்டார். மிக விரைவில் அவர் முதலிடத்தைப் பிடிக்கப்போவது உறுதி''

கிரிக்கெட் போட்டியைப் போல் நேரடி வர்ணனைகள் களைகட்டின. 4ஆம் இடத்தை அடைந்த பின்னர் ஜனாதிபதிக்கும் நம்பிக்கை பிறந்தது.

''நீங்கள் போர்க் குற்றம் செய்ததாகக் கூறுகிறீர்கள். ஆனால் உலக மக்கள் நான் செய்த செயல் சரியானது என அங்கீகரித்து என்னைக் கருத்துக்கணிப்பில் முதலிடம் பெறவைத்து விட்டார்களே!'' எனத் திமிரோடு ஐ.நாவுக்கு முன்னால் மார்தட்டிக் கொள்ளமுடியுமெனவும் மஹிந்த கனவுகாணத் தொடங்கினார். ஆனால் விதி மீண்டும் மஹிந்தரோடு விளையாடியது.

அமெரிக்கர்களையே அதிகளவில் வாசகர்களாகக் கொண்ட ஒரு சஞ்சிகையில் இலங்கை அதிபர் எப்படி முன்னணி பெற முடியும் என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழத் தொடங்கியது. அதன் பின்னர்தான் கோடிக்கணக்கான பணத்தை வாரியிறைத்ததன் விளைவே மஹிந்தரின் முன்னிலைப் பெறுபேற்றுக்குக் காரணம் என்ற தகவல் வெளியானது. அத்துடன் ஐ.நாவும் போர்க் குற்றவாளி எனத் துணிந்து மஹிந்தவை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டியிருந்ததால் 'ரைம்' சஞ்சிகை நிர்வாகம் தமது கருத்துக் கணிப்பை மறுபரிசீலனை செய்யவேண்டியேற்பட்டது. விளைவு? கனவு சட்டென உடைந்தது.

கருத்துக் கணிப்பின் இறுதிநாளில் மஹிந்தர் அந்தக் கருத்துக் கணிப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சிறுவர்கள் விளையாடும் போது 'அளாப்புகின்றவர்களை' அந்த விளையாட்டில் இருந்து தள்ளி வைப்பது போல, தவறான முறையில் கருத்துக் கணிப்பை வெல்ல முனைந்ததாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**ஒளண்யன்**

சர்வதேச ரீதியில் ஒப்பற்ற புகழ்பெற விரும்பிய ஜனாதிபதி கடைசியாகச் சர்வதேச ரீதியில் எவருமே சந்தித்தேயிராத அவமானத்தையே சம்பாதிக்க முடிந்துள்ளது. தன்னுடைய நலனுக்காக, புகழுக்காக எந்தக் குறுக்குவழியிலும் செல்லத் தயங்காத தலைவர் என்ற 'புகழ்'தான் அவரை வந்துசேர்ந்துள்ளது. அத்தோடு கருத்துக் கணிப்பில் வெல்வதற்காகவே எதையும் செய்யத்துணிந்த இலங்கை ஜனாதிபதி போரில் வெல்வதற்காக என்னென்ன திருகு தாளங்களை எல்லாம் செய்திருப்பார் என்றெல்லாம் பலரும் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்போது அதிகாரிகள் சிலரின் தவறான வழிகாட்டலே இத்தகைய அவமானத்தை ஏற்படுத்தி விட்டதாக ஜனாதிபதி குமுறியிருக்கிறார். தொடர்ந்து அடி மேல் அடி வாங்கி, எல்லாக் கனவுகளும் உடைபடுவதால் உண்மையிலேயே ஜனாதிபதிக்கு இது போதாத காலம்தான் போலும். இப்போதெல்லாம் 'கருத்துக் கணிப்பு' என்ற சொல்லைக் கேட்டாலே ஜனாதிபதி 'பிச்சை வேண்டாம். நாயைப் பிடி!' என்று சொல்லிக் கொண்டு ஓடுகிறாராம். யார் கண்டது, 'ரைம்' கருத்துக் கணிப்பு போனாலென்ன நாங்கள் 'சண்டே ரைம்ஸில்' இலங்கையில் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தி ஜனாதிபதியை வெல்ல வைப்போம் என மஹிந்த வாதிகள் காரியத்தில் இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் நேற்று பொலிஸ் நேர்முகப் பரீட்சை

## பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு


யாழ்ப்பாணம்,ஏப்.24

பொலிஸ்துறைக்கு 1000 தமிழ்ப் பொலிஸாரை இணைத்துக் கொள்வதற்கான உடல் தகுதி காண் நேர்முகப் பரீட்சை நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

உதவிப் பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் சாரதி ஆகிய பதவிகளுக்கு என இந்த நேர்முகப் பரீட்சை இடம் பெற்றது.

இலங்கைப் பொலிஸ் கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.நோபல் பிரான்சிஸ் முன்னிலையில் இந்த நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து பொலிஸ் படையில் இணைந்து கொள்ள விண்ணப்பித்த 656 பேர் இந்த நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.



இவர்களில் பொலிஸ் உதவிப் பரிசோதகருக்கு 184 ஆண்களும், 12 பெண்களும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு 390 ஆண்களும், 50 பெண்களும் தோற்றியிருந்தனர். பொலிஸ் சாரதி பதவிக்கு 20 பேர் தோற்றினார்கள்.

விண்ணப்பதாரிகளின் சான்றிதழ்கள் பார்வையிடப்பட்டு பதியப்பட்டதன் பின்னர் உடல் எடை, உயரம் ஆகியன அளவிடப்பட்டன. அதனைத் தொடர்ந்து மைதானத்தில் அவர்களை ஓடவிட்டு உடல் தகுதிகாண் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

மழைக்கு மத்தியில் நடைபெற்ற இந்த நேர்முகப் பரீட்சையில் பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

உடல் தகுதிகாண் நேர்முகத் தேர்வின்போது உயரம் போதாது என நிராகரிக்கப்பட்ட பெண்களில் சிலர் மனக்கவலையுடன் அங்கிருந்து வெளியேறியதையும் காணமுடிந்தது. (த-14-319)

# கல் அகழ்வதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.24

நெடுந்தீவில் கல் அகழ்வதற்கான அனுமதி நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கல் அகழ்வது தடை செய்யப்பட்டிருந்ததால் வீடமைப்புத் திட்டம் மற்றும் வீதிகள் புனரமைப்பு வேலைகள் நெடுந்தீவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே கல் அகழ்வதற்கான அனுமதியை வழங்குமாறு நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கனியவளங்கள் திணைக்களத்திடம் விண்ணப்பித்திருந்தது.

இதனையடுத்துக் கல் அகழ்வதற்கான அனுமதி சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நெடுந்தீவுப் பகுதியில் கல் அகழும் நடவடிக்கைகளை சங்கம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-7)

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தற்போது யாழ்.மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாகப் பாடசாலைச் சூழலில் டெங்கு நுளம்பு பரவலைத் தடுக்கும் முகமாக பாடசாலை வளாகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபடுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலையில் இரண்டாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளமையால் அன்றைய தினத்திலிருந்து மூன்று நாள்கள் தொடர்ச்சியாக பாடசாலைகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் பகுதிகளைச் சுத்திகரிக்கும் சிரமதானப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்றும் இதனைப் பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்துவதுடன் இந்தப் பணிக்கான ஆலோசனைகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வழங்குவார்கள் என்றும் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-323)

# தென்மராட்சிச் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாவை பிரதேச செயலகம் இதுவரை வழங்கவில்லை

## இராமாவில் முகாமுக்கு வழங்கிய நிவாரணக் கொடுப்பனவு இது

தென்மராட்சி,ஏப்.24

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கவேண்டிய ஒரு கோடி ரூபாவை விரைவில் வழங்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு சங்க நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலயத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கியமைக்குரிய கொடுப்பனவுத் தொகையான ஒரு கோடி ரூபா வழங்கப்படாதுள்ளதாக சங்கத் தலைவர் வே.விநாயகமூர்த்தி, பொது முகாமையாளர் சி.தேவகுமார் ஆகியோர் கூட்டாக தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த நிதி நீண்டகாலமாக வழங்கப்படாததால் சங்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரிய கஷ்டங்களைச் சந்தித்ததாகவும் தெரிவித்தனர்.

இந்தக் கொடுப்பவை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

(த-207)

# கைதடி நவீல்ட் வீதிக்கு மின் விளக்குகள் பொருத்துக

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.24

கைதடி நவீல்ட் பாடசாலைக்குச் செல்லும் வீதிகளுக்கு வீதி விளக்கு பொருத்துமாறு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி இடம் பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஏ-9 வீதியிலிருந்தும் கோப்பாய் கைதடி வீதியிலிருந்தும் பாடசாலைக்கு வரும் வீதிகளுக்கே வீதி விளக்கு பொருத்துமாறு கோரப்பட்டது.

பல்வேறு தேவைகளுக்காக ஏனைய இடங்களுக்குச் செல்லும் பாடசாலையைச் சேர்ந்தவர்கள் இரவு வேளைகளில் வாகனங்களிலிருந்து இறங்கி நடந்து வரும் வேளையில் அந்த வழியே சைக்கிளில் வருவோர் தம்முடன் மோதுவதால் சங்க அங்கத்தவர்கள் பலர் காயமடைந்து வருவதாகவும் சங்க நிர்வாகத்தினர் இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்டபோது வீதி விளக்குகள் பொருத்துவதற்குப் பெருமளவு நிதி செலுத்த வேண்டுமெனத் தெரிவித்ததாகவும் அவ்வளவு நிதி தமது சங்கத்திடம் இல்லாததால் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது பரோபகாரிகள் மூலமாகவோ எமது கோரிக்கையை நிறை வேற்றுமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

(த-207)

# நெடுந்தீவுச் சங்கப் படகுகளை புனரமைப்பதற்கு புதிய இடம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் படகுகள் திருத்தியமைப்பதற்கான 'யாட்' புதிய முறையில் செப்பனிடப்படவுள்ளது.

வடபகுதிக்கான கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திரா சி.விஜேகுணரட்ன ஒத்துழைப்புடன் நெடுந்தீவுக் கடற்படை அதிகாரி சி.ரணதுங்க இந்த யாட்டைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சம்பந்தப்பட்ட கடற்படையைச் சேர்ந்த பொறியியலாளர்கள் சங்கத்தின் 'யாட்'டைப் பார்வையிட்டுள்ளதாகவும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம் கூறினார்.

இந்தப் புனரமைப்புப் ப்ணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-7)

# கரவெட்டி செயலகம் முதலிடம்

யாழ்.மாவட்டப் பிதேச செயலகங்களுக்கிடையில் உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலகம் மாவட்ட ரீதியில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டுள்ளது. பிரதேச உள்கட்டுமான அபிவிருத்தி, பிரதேச மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தல் என்பவற்றில் முனைப்புடன் செயற்பட்டதற்காகக் கிடைத்த பரிசு இது எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (த-319)

# நெடுந்தீவுப் பகுதியில் மின்சாரம் சீராக இல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.24

நெடுந்தீவுப் பகுதியில் மின்சார விநியோகம் சீராக இல்லை எனவும் மேற்படி சேவையை உரிய முறையில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தேசவள அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபை அதிகாரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அபிவிருத்திக் குழுவின் தலைவர் எஸ்.ராஜிவ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவுப் படகுச் சேவை, துறைமுகம் ஆழமாக்குவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

(த-7)

# கொட்டும் மழைக்கு மத்தியில் வீதிக்கு தார் ஊற்றிய விநோதம்

வட்டுக்கோட்டை,ஏப்.24

கொட்டும் மழைக்கு மத்தியிலும் வட்டுக்கோட்டை அரசடியில் வீதிக்குத் தார் இடும் பணிகள் நடைபெற்றதைக் கண்டவர்கள் வியப்பும், கவலையும் அடைந்ததாகத் தெரிய வருகின்றது.

நேற்று வட்டுக்கோட்டை அரசடியிலுள்ள வீதிக்குக் கலவையிட்டுத் தார் ஊற்றும் பணிகளில் நிறுவனம் ஒன்று ஈடுபட்டிருந்தது. அவ்வேளையிலே கடுமையான மழை பெய்ததால் வீதியில் வெள்ளமும் காணப்பட்டது.

இதனைக் கண்ணுற்ற பலரும் வியப்புத் தெரிவித்ததுடன் இந்தச் செயலைக் கண்டித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகக் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதிக்கு இப்போதுதான் நல்ல காலம் பிறந்திருக்கின்றது.

இந்த நிலையில் வெயில் காலத்தில் நிறைவேற்ற வேண்டிய இந்த வேலைகளைக் கடும் மழைக்கு மத்தியில் நிறைவேற்ற முயல்வது எந்தவிதப் பயனையும் விளைவிக்கப் போவதில்லை எனவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ளத்துக்கு மத்தியில் கலவையிட்டுத் தார் ஊற்றுவதால் அவை உரிய முறையில் பிடிமானமின்றிக் காலப்போக்கில் சிதைவடையக்கூடிய ஏது நிலையே தோன்றும். இதனால் இந்த வீதியும் பழைய நிலைக்குத் திரும்பும் சாத்தியமுண்டு.

இதேவேளை - கடந்த 12 ஆம் திகதியும் வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரிக்கு அருகிலுள்ள வீதியும் 'இதைப் போன்று கொட்டும் மழைக்கு மத்தியில் கலவையிட்டுத் தார் ஊற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஆள் சேர்ப்பு**

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஹோட்டல் ஒன்றுக்குப் பொருத்தமான ஆள் தேவை. ஹோட்டல் வேலையில் முன் அனுபவம் உள்ளவர்களும் மும்மொழிகள் தெரிந்தவர்களும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகம் தரலாம்.

தொடர்பு:- 68,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 0212225575, 0779877309
நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி:
27.04.2011 மு.ப.9.30-12

(3455)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 27.04.2011 விநியோகிக்கப்படும். விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

*றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை -
021 222 2867, 0776090926
*துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

(3394)

# கொழும்பு நகரில் முன்னாள் போராளிகளின் ஓவியக் கண்காட்சி

கொழும்பு, ஏப்.24

புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகள் வரைந்த ஓவியம் மற்றும் அவர்கள் தயாரித்த கைப்பணிப்பொருள்கள் ஆகியவற்றின் கண்காட்சி மற்றும் விற்பனை என்பன நாளையும் நாளை மறுதினமும் கொழும்பு கலாபவனில் இடம்பெறும்.

இந்தக் கண்காட்சியை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ 25ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து வைப்பார் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

காலை 9.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை இரண்டு நாள்கள் இந்தக் கண்காட்சி இடம்பெறும். கண்காட்சிக்கான நுழைவுக்கட்டணம் முற்றிலும் இலவசம்.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு நிலையங்களில் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவர்கள்பெற்றுக் கொண்ட பயிற்சிக்கு அமைய தயாரிக்கப்பட்ட பொருள்கள் கண்காட்சியில் இடம்பெறும். இதன் போது பொருள்களின் விற்பனையும் நடைபெறும்.

இக்கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் உட்பட பல பிரமுகர்கள் வருகைதர உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஏ-சி)

**VISA - வீசா**
**Consultancy Service**

*UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,*

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

(3454)

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

**பணி நிலை வெற்றிடம் (பெண்கள்)**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்திற்கு, பெண் பிள்ளைகளுடன் இருந்து சேவையாற்றக்கூடிய Educator Counselor (Female) வெற்றிடம் கோரப்படுகின்றது.

தகுதியானவர்கள் கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு 25.04.2011 பி.ப 1.00 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்த ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

சுவாமிநாதன் அரிச்சுணன்
உதவி இயக்குநர்
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்,
பருத்தித்துறை வீதி,
இருபாலை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் : 021 2230076
கைத்தொலைபேசி இலக்கம் : 077 2366106
மின்னஞ்சல் முகவரி : sostcpchetti@sltnet.lk

(3451)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 04 . 1930 | 25 . 03 . 2011 |

**திருமதி பறுவதம் செல்லையா**

பறுவதம் எனும் திருநாமம் பூண்டு
வையத்துள் வாழ்வாங்குவாழ்ந்து நெறி பூண்டு
பேர்விளங்க இப் புவியில் பிள்ளைகளைப் பெற்று
ஊர்விளங்கும் புகழோடு விண்ணுலகம் கண்டீர்
நிறைவு பெற்ற வாழ்க்கை யென்றும் இறையுலகிற் சேர்க்கும்
முறை தவறா இறையைத் தினம் இறைஞ்சுகின்றோம் அம்மா!

புலவனார் வீதி,
கல்வியங்காடு
(3356)
குடும்பத்தினர்.

**இதயத்தை வருடும் நினைவலைகள்**



அமரர்
**சம்பந்தன் சக்திதரன்**
*(ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)*

நேற்றுவரை நம்மோடு நிஜமாக
நின்றிருந்தாய்
போற்றுதற்குரிய நல்லாசானாய்
வாழ்ந்திருந்தாய்
காற்றோடு வந்தசேதி நண்பா உனை
கனவென்று சொல்கிறது
மாற்றீடு ஏதுமில்லை
உனையெண்ணிப் புலம்பலன்றி...!

வாழ்த்துப்பா எழுதியுனை
வாழ்த்தவென்று காத்திருந்தோம் - புகழ்
பூத்துப்போய் பாரெங்கும்
பெருமகனாய் வாழ்ந்தவுனை
நீத்துப்போனது இதயம் அஞ்சலிப்பா
எழுதுகையில் - என்செய்வோம்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்தித்து
படைத்தவனை நோதலன்றி...!!

யாழ்.இந்துக் கல்லூரி
**A/L 2002**
பழைய மாணவ நண்பர்கள்

(48.22.26)

**8ஆம் வருட இதய அஞ்சலி** **5ஆம் வருட நினைவலைகள்**





அமரர்
**மெக்லன் டானியல் அற்புதராசா**
(உரிமையாளர், பேபி மினிபஸ், பேபி தொலைத் தொடர்பு சேவை, தலைவர், தென்மராட்சி சிற்றூர்திச் சேவைகள் சங்கம்)

மலர்வு 02.07.1948
உதிர்வு 23.04.2003
திதி: 24.04.2010

**அற்புதராசா சுரேஷ்குமார்**
(பழைய மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மலர்வு 19.07.1991
உதிர்வு 17.04.2006

எங்கள் குடும்ப விருட்சத்தின்
ஆணிவேராம் அற்புதராசா
ஓய்ந்துபோய் எட்டாண்டுகள் ஆனதுவே
கிளையொன்றாம் சுரேஷ்குமார்
சாய்ந்துபோய் ஐந்தாண்டுகள் ஆனதுவே
ஏங்கித் தவிக்கும் எமக்கு ஆர்
இங்கு ஆறுதல் இனி...

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(39-25-27) (3447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வீடுகளைப் பெற்றவர்கள் நிதிப் பற்றாக்குறையால் சிக்கலில் தவிப்பு

கிளிநொச்சி,ஏப்.24

கிளிநொச்சி மாவட்டத்தில் 'நேர்ப்' நிறுவனத்தின் கீழ் நிரந்தர வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதாக இராமநாதபுரம் சம்புக்குளம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் மக்களின் மீள்குடியமர்வைத் தொடர்ந்து மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்தகைய வீடுகளை அமைத்து வரும் நிறுவனங்களில் 'நேர்ப்' நிறுவனமும் ஒன்றாகும். ஆனால், இதன்கீழ் வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீட்டுத் திட்டத்துக்கு தலா 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தொகைக்குள் ஒட்டினால் வேயப்பட்ட வீடுகளை அமைக்க வேண்டுமென்பது நிறுவனத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனையாகும்.

ஆனால், இத்தகைய வீடொன்றை அமைப்பதற்கு குறித்த நிதி போதாமலுள்ளதால் மக்கள்தமது நகைகளை அடைவு வைத்தும் அல்லது அவற்றை விற்றும் தமது வீடுகளை நிறைவு செய்துவருகின்றனர். பலர் தனியாரிடமும் வங்கிகளிலும் கடனைப் பெற்று இந்த வேலைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் 2 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ள 'நேர்ப்' நிறுவனம் மீதி 30 ஆயிரம் ரூபா வழங்க வேண்டுமாயின் நிரந்தர மலசலகூடமொன்றை அமைக்க வேண்டுமெனத் தற்போது கோரியுள்ளது.

ஆனால், ஏற்கனவே கடனாளிகளாகவுள்ள மக்கள் இந்த 30 ஆயிரம் ரூபாவில் நிரந்தர மலசலகூடம் அமைப்பது தொடர்பில் மிகுந்த குழப்பம் அடைந்துள்ளனர்.

ஏற்கனவே வாழ்வாதாரத்தில் அடிமட்ட நிலைக்குச் சென்று கடனாளிகளாக மாறியிருக்கும் இந்த மக்களுக்கு இத்தகைய நெருக்கடி மிகுந்த வீடமைப்புத் திட்டங்களுக்கான மதிப்பீடுகளைச் செய்யும் திட்டமிடல் செயலகம் இந்த விடயங்களைப் புரிந்துகொண்டுசெயற்படவேண்டும் எனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-301)

## பச்சிலைப் பள்ளியில் மக்கள் மீள்குடியமர்வு

கிளிநொச்சி,ஏப்.23

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் சில பகுதிகளில் எதிர்வரும் 26 ஆம் திகதி சில குடும்பங்களை மீள்குடியமர்த்தவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது மெனிக்பாம் முகாமிலுள்ள 19 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரே இவ்வாறு மீள்குடியமர்வு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-6)

### நல்ல உதவிகள்...



மாணவர்களுக்குக் கௌரவம்: கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிய மாணவன் யோ.நிதில்மாறன், மாணவி இ.சயந்தனா ஆகியோருக்குப் பாடசாலையின் பழைய மாணவரான நோர்வேயில் வசிக்கும் தி.லம்போதரனால் வழங்கப்பட்ட நிதியுதவியால் சைக்கிள்கள் வழங்கப்படும் நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கொடையாளியின் உறவினர் ஆகியோர் காணப்படுகின்றனர். (410)

## போதிய மருத்துவர்கள் இல்லாததால் அக்கராயன் மருத்துவமனைக்குப் பாதிப்பு

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவ மனையில் மருத்துவர்கள் பணியில் இல்லாமையினால் நோயாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும்.

ஆனால், ஒருவர் மட்டுமே பணியில் உள்ளார். இந்த மருத்துவர் விடுப்பு எடுக்கும் சமயங்களில் மருத்துவமனை செயலிழந்து விடுகிறது.

மருத்துவமனையில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறை தொடர்பாக ஸ்கந்தபுரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்தப்பகுதி மக்களினால் மனுக் கையளிக்கப்பட்டது.

உருத்திரபுரத்தில் வைத்து அமைச்சர் பசில் ராஜபக்ஷ விடமும் மருத்துவமனையின் நெருக்கடி தொடர்பாக மனு கையளிக்கப்பட்டது.

ஆனால், தொடர்ந்தும் மருத்துவர் நெருக்கடி காணப்படுவதால் அக்கராயன் மருத்துவமனையை நாடிவரும் நோயாளர்கள் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.

அக்கராயன் மருத்துவ மனைக்குத் தேவையான மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-410)

## அனுமதிப்பத்திரம் பெறாது மணலை ஏற்றிவந்த உழவு இயந்திரங்கள் பொலிஸாரிடம் சிக்கின

கிளிநொச்சி, ஏப். 24

கிளிநொச்சியில் மணல் அனுமதிப்பத்திரம் பெறாது களவாக மணலை ஏற்றிவந்த பத்துக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வன்னிப் பிரதேசங்களில் தற்போது கட்டுமான வேலைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இதனால் மணலுக்கான தேவையும் பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. மணல் ஏற்றுவதை ஒழுங்குபடுத்துமுகமாக மணல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், சிலர் இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெறாமல் களவாக மணலை ஏற்றிச் செல்ல முயல்கின்றார்கள். பொலிஸார் இவர்களை மடக்கிப் பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், மணல் பெறுவதில் சிரமங்களை அனுபவிக்கும் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இத்தகைய திருட்டு மணல் ஏற்றும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரிய வருகின்றது.

இந்த வகையிலேயே களவாக மணலை ஏற்றிச் சென்ற இந்த உழவு இயந்திரங்கள் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் சிக்கியதாகத் தெரியவருகின்றது. (க-6)

## பொலிஸ் சேவைக்கான நேர்முகப் பரீட்சைகள்

கொழும்பு, ஏப். 24

தகுதிவாய்ந்தஇளைஞர், யுவதிகளைப் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலேயே இந்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளதாகப் பொலிஸ் தலைமையகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிப்பதற்காகவும் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் மேலும் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத் தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தனித்தனியே நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (க)

## தாமதமடையும் நிர்மாணப் பணிகள்

கிளிநொச்சி,ஏப்.24

கிளிநொச்சி பொது மைதானத்தில் அமைக்கப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டத் திடலின் நிர்மாணப் பணிகள் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலைகள் யாவும் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள் நிறைவடைய வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் கட்டடங்கள் திணைக்களத்திடம் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன.

ஆனால், உரிய திகதியில் வேலைகள் முற்றுப்பெறவில்லை.

இந்த வேலைகள் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்வதால் கூடைப்பந்தாட்டப் பயிற்சியில் ஈடுபடுவதில் பல சிரமங்களை விளையாட்டு வீரர்கள் எதிர் நோக்கி வருகின்றனர்.

ஆகவே, இந்த வேலைகளை இனியும் தாமதிக்காது நிறைவேற்றித்தர வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட கூடைப் பந்தாட்ட ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(க-301)

## கிளிநொச்சியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் அனைத்துத் தரப்பினருக்கும் தொடர்ந்து பெரும் பாதிப்பு

கிளிநொச்சி,ஏப்.24

கிளிநொச்சியில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் பொதுமக்கள் அதிக சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களின் அன்றாட வாழ்க்கையிலும் மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன. வசதியுள்ளவர்கள் அதிகளவில் மின்சார சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், வர்த்தக நிலையங்களும் மின்சாரத்தின் உதவியுடன் இயங்கும் சாதனங்களைப் பயன்படுத்திப் பொருள்களைப் பாதுகாத்து வருகின்றனர். வேலைத் தளங்களிலும் மின்சார சாதனங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், இங்கே அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் பலரும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் குளிர் சாதனப் பெட்டிகளில் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருந்தவர்கள் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்றும் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. புதுவருடத்தை முன்னிட்டு ஐஸ்கிறீம் வகைகளைக் குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைத்த வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். குறிப்பாக இதனைப் பெருமளவில் சேமித்து வைத்த வர்த்தகர்கள் இவை பழுதடைந்ததால் அதிக நஷ்டத்தை எதிர் கொண்டனர்.

மின்சார சபையினர் இனிமேலாவது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஒழுங்கான முறையில் மின்சாரத்தை வழங்க ஆவன செய்ய வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Hatton National Bank

A quoted public company incorporated in Sri Lanka in March 1970. with limited liability

### அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.01.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 30.04.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...**

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனை திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(48,19,23)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

APRIL. 2011 TO SEPT:2011

20

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

### கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

**APPLY FOR THE FOLLOWING COURSES 2nd MAY 2011**

### Diploma Course -1 year Full time

1. Computer Programming & Data Processing
2. Technician Certificate in Telecommunications & Electronics

### Craft Certificate Courses -6 months Full time

1. மோட்டார் வாகனம் திருத்துதல்
2. லேத்/வெல்டிங்/உலோக வேலைகள்
3. றேடியோ/TV/இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்
4. கைத்தொலைபேசி திருத்துதல்

### Computer Certificate Courses -Part time

1. Ms Office – 3 months
2. Printing Technology – 3 months
3. Internet & E-Mail – 2 months
4. Hardware – 3 months
5. Computerized Accounting -3 months



### விசேட வசதிகள்

✓ எமது நிறுவனம் TVEC கீழ் பதிவுசெய்யபட்டது
✓ தமிழ் மொழிமூல விளக்கங்கள்.
✓ வரையறையற்ற செய்முறை பயிற்சி.
✓ தவணை முறைக்கட்டணம்.
✓ தனிப்பட்ட கவனிப்பு.
✓ விடுதி, நூல் நிலையம், விளையாட்டு போன்ற வசதிகள்

மேலதிக விவரங்களுக்கு:
Jaffna College Institute of Technology, Vaddukoddai,
Sri Lanka. Phone 0213213139, 0212228275
E-Mail:jcit@sltnet.lk

(40,22,24)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.24

நவாலி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு எஸ்.மோகனமுரளி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டத்துக்குப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-100)

## புத்தாண்டு விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்ப்பாணம் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு நிகழ்வாக விளையாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் கலந்து கொள்வார். (ஓ-323)

## வீதி சேதம் பயணிகள் சிரமம்

வடமராட்சி, ஏப்.24

மந்திகைச் சந்தியிலிருந்து வல்லிபுரம் ஆழ்வார் கோயிலுக்குச் செல்லும் பிரதான வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளது.

இந்தவீதி பல இடங்களில் உடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்தவீதி ஊடாகச் சேவையாற்றும் அம்பனுக்குச் சென்றுவரும் இ.போ.ச. பஸ்கள் மற்றும் வாகனங்களைச் செலுத்துவதில் வாகன ஓட்டிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கிறார்கள்.

இதேபோல் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் இதனூடாகப் பயணம் செய்வதில் பெரும் துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த வீதி சேதமடைந்து பல மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் திருத்தப்படாமையினால் இந்த வீதியில் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய அல்லல் ஏற்பட்டுள்ளது. (ம-236)

### வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் 2ஆம் ஒழுங்கையில் இருக்கும் 6 அறை கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:- 0712599569

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரசடி றோட்டில், நல்லூர் கோயிலுக்கு அருகில் உள்ள வீடு, வீடாக அல்லது அறையாக மாத வாடகைக்குக் கொடுக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.

0750418867

### வேலை வாய்ப்பு

தொழில்சார் உயர் கல்வியை வழங்கிவரும் நிறுவனமொன்றின் யாழ்ப்பாணக் கிளைக்கு இரண்டு பெண் ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்புக்கு: 0217200777 (3421) (38)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1972 மூல நட்சத்திரம், 4இல் செவ்வாய், கிரகபாவம் 50, ஆசிரியையாக கடமைபுரியும் மணமகளுக்கு, அரசதொழில் அல்லது சுயதொழில் புரியும் மணமகன் தேவை.
தொடர்பு: 0774319719 மாலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை (3450) (38)

### வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு மிக அருகில் பிரதான வீதியில் 16 பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் பயன் தரும்மரங்களுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770357307 (3441) (38)

### கடைகள் விற்பனைக்குண்டு

யாழ்.நகரின் மையப்பகுதியில் இல.60 ஜிம்மா பள்ளிவாசல் வீதியில் புதிதாகக் கட்டப்படும் கடைத்தொகுதியில் கடைகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0771290425, 0778995431, 0750434277 (3414) (38)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நடுப்பு மருந்து போடப்பட்ட தரமான ரிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 28.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

| | |
|---|---|
| ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| ★ முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |

திருப்பி கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர், தொ.பே இல:- 021 222 6944.

## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்

Colombo இலிருந்து வரவழைக்கப்பட்ட வீடுகட்டும் பணியாளர்கள் மூலம் திருத்த வேலையோ, கட்டட வேலையோ, முக்கியமாக Jiling, Plumping, Colour Washing, Pantry cup boasd முதலியன சிறந்த முறையில் நியாய மான கூலிக்குச் செய்து தரப்படும்.

தொடர்புகொள்க:-
**0777556244, 021 222 0619** (3403) (41)

## எட்டாம் ஆண்டு நினைவுகளுடன்



அன்னை மடியில்
1927.05.20

ஆண்டவன் மடியில்
2003.04.24

அமரர்
**தொம்மை பிலிப்பு**


அன்போடு எமை வளர்த்து
ஆளாக்கி மேதினியில் எம்மை
மேலோராய் வாழச் செய்ய
தன்னை மெழுகுதிரி ஆக்கிய
எம் அன்புத் தந்தையை
நன்றி உணர்வுடன் நினைவுகூருகின்றோம்.
ஆறாது எம் இதய வேதனை
மாறாது உம் நினைவுகள்

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

மாறாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(19,50,49)

## மரண அறிவித்தல்



### திருவிளங்கம் சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், பெரியவிளானை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான திருவிளங்கம் சபாரத்தினம் (19.04.2011) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - அன்னப்பிள்ளை (பொன்னாலை) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னபாக்கியம் (பெரியவிளான்) தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் ஆருயிர்க் கணவரும் சுரேஷ் (உசானி கேட்டரிங் உரிமையாளர் -லண்டன்), இரமேஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவமதி (உசேனி), தர்ஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சைந்தவி, தனுஷ் , ரனேஷ், ராகேஷ் ஆகியோரின் அருமைப் பேரனும் சுப்பிரணியம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகரத்தினம், இராமநாதன், சரஸ்வதிதேவி, திருச்செல்வம், லீலாதேவி காலஞ்சென்றவர்களான தங்கபூமணி, ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரங்கநாதன், வசந்தகுமாரி, வனித்தா, வனஜாகுமரநாதன், சகீலா (மலேசியா), கெங்கா (மலேசியா) ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் நடராசா, செல்வராசா (சுவிஸ்), விஜயராணி, பரமானந்தம், பரமு ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று 24.04.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 - பி.ப.01.00 St. Marylebone Crematorium, East End Road, London, N2 ORZ இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
★ சுரேஷ் - பிரித்தானியா +447956321122,
★ ரமேஷ் - பிரித்தானியா +442088451617,
★ உசேனி - பிரித்தானியா +447867911591,
★ தர்ஷினி - பிரித்தானியா +447956893012.

தகவல்:
குடும்பத்தினர்.

(3397) (49-25-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணந் துறைவன்

பண்டைத் தமிழர் வாழ்வியலில் நயத்தக்க நாகரிகம் பேணும் மரபு இருந்துள்ளது. சங்கப் பாடல்களில் குறிப்பாக மருதநிலத்து வாழ்வியல் பற்றிய பாடல்களில் இதனைக் காணமுடிகிறது. பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்ட குடும்பத் தலைவனான ஆண்மகனை அக்காலச் சமூகம் எதிர்க்கவில்லை. அவன் தனது மனைவியைவிட்டு வேறு ஒரு பெண்ணை நாடிச் செல்வது குற்றமாகக் கொள்ளப் படவில்லை. இதற்குப் பெண்ணும் காரணமாக இருந்துள்ளாள். கணவன் வேறு பெண்ணிடம் சென்று காம இன்பம் பெறுவதை மனைவி பெரிதாக எதிர்ப்பதில்லை. இதற்கு இரு காரணங்களைக் கூறலாம். ஒன்று அதை எதிர்ப்பதன் மூலம் திக்கற்ற நிலையை அடையலாம். மற்றையது குழந்தைகளின் எதிர்காலம் இருண்டு போகலாம். எனவே பரத்தமை ஏற்றுக் கொள்ளவேண்டிய ஓர் ஒழுக்கமாகியது எனலாம். பெண்ணின் ஒழுக்க நிலையிலும் பரத்தையொழுக்கம் ஒரு பொருள் தேட்டமாக அமைந்ததால் தொடரும் நிலை ஏற்பட்டது.

பெண்ணே பெண்ணின் துன்பத்திற்குக் காரணமாகின்ற ஓர் அவல நிலையும் இதனால் உருவாகியது. இத்தகைய சந்தர்ப்பத்தில் தோழியின் செயற்பாடு குடும்பத் தலைவியின் மன அமைதிக்கும் குடும்ப நல்லுறவுக்கும் உதவுவதாயிருந்தது. தோழி ஏற்ற அறிவுரைகளை எடுத்துக் கூறி சமூகக் கட்டமைப்பில் குடும்பம் சிதையாமல் பேணும் பொறுப்பை ஏற்றிருந்தாள். ஆணின் பரத்தமையைப் பொறுத்துக் கொள்ளும் குடும்பத் தலைவியையும் பேணுகின்றாள். கீழ்வரும் குறுந்தொகைப் பாடல் இந்தப் பண்பை நன்கு விளக்குகிறது.

*''யாயா கியளே மாஅ யோளே*
*மடை மான் செப்பில் தமிய வைகிய*
*பெய்யாப் பூவின் மெய்சா யினளே*
*பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்*
*இனமீ னிருங்கழி யோத மல்கு தொறும்*
*கயமூழ்க மகளிர் கண்ணின் மானும்*
*தண்ணந் துறைவன் கொடுமை*
*நம்மு னாணிக் கரப்பா டும்மே''*

*(குறுந்தொகை: 9)*

இந்தப்பாடல் தோழி கூற்றாக அமைந்துள்ளது. குடும்பத் தலைவியின் தோற்றப்பாடும் குண இயல்பும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நாள்தோறும் காண்கின்ற தலைவியின் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தோழி கவனிக்கிறாள். 'மா அயோளே'' என்ற தொடர் தலைவியினுடைய முன்னைய அழகான தோற்றத்தைக் குறித்து நிற்கிறது. தோழி, தலைவியின் பழைய தோற்றத்தையும் தற்போதைய தோற்றத்தை யும் நினைத்துப்பார்க்கிறாள். தாய்மைக் கோலம் பூண்டிருக்கும் பெண்ணின் தோற்றம் 'யாயா கியளே' என்ற தொடரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை மேலும் ஓர் உவமை மூலம விளக்குகிறாள்.

அழகிய புனைவுகளால் சிறந்த சிறிய ஒரு குடத்தில் வைக்கப்பட்ட தனியே இருக்கின்ற நீரில்லாத பூவைப் போல உடல் சோர்ந்த தோற்றத்



திலிருக்கிறாள். இதன் மூலம் பரத்தையிடம் செல்லும் கணவன் அந்தத் தாய்மையுற்றி ருக்கும் மனைவியைக் கவனிப்பதில்லை என்பதை நாகரிகமாக உணர்த்துகிறாள். ''மடை மான் செப்பில் தமிய வைகிய'' என்ற தொடர் அழகிய வேலைப்பாடு கொண்ட வீட்டிலே மனைவி தனித்திருப்பதைக் குறிக்கிறது.

**இலக்கியக் காட்சி – 82**

அடுத்து அவளுடைய குணவியல்பு காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. பெண்ணினுடைய நல்ல குணத்தைத் தோழி கூறுகிறாள். பசிய இலைகளிடையே நெடிய காம்புகளைக் கொண்ட நெய்தல் பூவின் தோற்றம், பல இன மீன்கள் நிறைந்த அலைதவழும் நீர்ப்பரப்பின் நீரின் பெருக்கத்திலே உருவான குளங்களில் மூழ்கி நீராடுகின்ற பெண்களின் கண்களைப் போன்ற நெய்தல் பூவையொத்த குடும்பத் தலைவியின் கண்கள், இப்போது தன்னுடைய கணவனாகிய மருதநிலத் தலைவனின் கொடுமையை மறைத்து நிற்கின்ற நிலையைத் தோழி எடுத்துக் கூறுகின்றாள்.

அவ்வாறு அந்தப்பெண் தன் கணவனுடைய பரத்தமையொழுக்கத்தை மறைப்பதற்குரிய காரணத்தையும் தோழி கூறுகிறாள். 'நம்முன் நாணிக் கரப்பாடும்மே' என்ற தொடர் இதனை விளக்குகிறது. தோழி இருவருடைய முன்னைய காதல் நிலையை நன்கு தெரிந்தவள். பல உறுதி மொழிகள் கூறி மணம் முடித்தவன் பரத்தையிடம் தொடர்பு கொண்டிருப்பதை அறிந்திருந்தும் அறியாதவள் போல மனைவியிருக்கிறாள். கணவனுடைய செயல் பிறருக்குத் தெரிவதை அவள் விரும்பவில்லை. தெரிந்தால் எல்லோரும் அவளை இழித்துப் பேசுவர். எனவே அதை மறைத்துச் செயற்படுகிறாள். 'கரப்பு' என்பது எல்லாவற்றையும் நன்கு மூடி வைக்கக்கூடிய ஒரு பெரிய மூடி. தற்காலப் பேச்சுவழக்கிலும் இந்தச் சொல் பயன்பாட்டில் உள்ளது. நன்றாகப் பழகிய தோழியிடமே விடயத்தைக் கூறமுடியாது வெட்கப்படும் அப்பெண்ணின் மனநிலையைத் தோழி நன்றாகவே அறிந்திருக்கிறாள். அதனால் பெண்ணின் துன்பத்துக்குரிய காரணத்தை வெளிப்படையாக எடுத்து உரைக்கின்றாள். தோழி குடும்பத் தலைவனின் செயற்பாட்டைத் ''தண்ணந்துறைவன் கொடுமை'' என்று குறிப்பிடுகிறாள். குளிர்மையான அழகிய துறைமுகத்திலே வாழ்கின்ற இந்தத் தலைவன் செய்த கொடுமை பரத்தமையொழுக்கமாகும். வளமான நிலத்தில் வளமான நிலையில் குடும்ப வாழ்வு நடத்தும் நிலையில் கணவன் செய்யக் கூடிய கொடுமை பரத்தமையொழுக்கமே. அவன் பரத்தை வீட்டிலே தங்கி வருவது 'தமிய வைகிய' என்ற தொடரால் விளக்கப்பட்டுள்ளது. அவள் தாயாகப் போகின்ற நிலையில் அவளைத் தனியே விட்டுவிட்டுக் காம இன்பத்தை நாடிப் பரத்தையிடம் செல்லும் ஆண் மிகவும் கொடியவன். தோழி இதனை நாகரிகமாகக் 'கொடுமை' என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளாள்.

இந்தப் பாடலில் மருத நிலவளம் சிறப்பாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. கடலும் ஆறும் கலக்கின்ற கழிமுகம் பற்றிய வர்ணனை புலவரின் இயற்கைப் புனைவின் ஆற்றலுக்குச் சான்றாக உள்ளது. 'இனமீனிருங்கழி' என்பது ஆற்றின் கழிமுக வளத்தை விளக்கிநிற்கிறது. 'இனமீன்' மீன் வளத்தைக் குறிக்கிறது. 'ஓதம்' என்ற சொல் பாய்ந்து வருகின்ற நீரின் பெருக்கத்தைக் காட்டுகிறது. அந்த நீர்ப் பெருக்கத்தால் நெய்தல் நிலம் நீரில் மூழ்குகின்றது. எனவே நீர்வளம் நிறைந்த இப்பிரதேசத்தை வாழ்விடமாகக் கொண்ட தலைவனின் ஒழுக்கம் தலைவியைப் பெரிதும் பாதித்ததைத் தோழி வெளிப்படுத்திக் காட்டுகின்றாள்.

பெண்ணுக்குக் கணவனுடைய செயற்பாடு பெருந்துன்பத்தைக் கொடுத்தமையால் அவளுடைய உடல் நலம் கெடுவது பாடலில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. துன்பம் உள்ளத்தை வருத்துகின்ற அதேவேளையில் உடல்நிலையையும் பாதிக்கும். தாய்மை நிலையில் ஏற்பட்டிருக்கும் தனிமைத்துன்பம் அந்தப்பெண்ணைப் பெரிதும் வருத்தம் அடையச் செய்தாலும் அவள் அதனை வெளியே காட்டாமல் நயத்தக்க நாகரிகத்தைப் பேணுகின்றாள்.

**நா.நல்லதம்பி, மட்டுவில்**

பாடலின் மொழிநடை பெண்மையின் உள்ளுணர்வையும் துன்ப நிலையையும் நன்கு புலப்படுத்தும் பெண்மொழியாக அமைந்துள்ளது. பாடலைப் பாடிய கயமனார் என்னும் புலவர் மருதப் பாடல்கள் இயற்றுவதில் சிறந்தவர். தோழி கூற்றாகப் பாடலை அமைக்கும்போது தன்னுடைய பரத்தமை பற்றிய கருத்தையே கூறியுள்ளார். அந்தக்காலத்துப் பெண்கள் ஆண்களின் கொடுமையையும் சகித்துக் கொண்டு குடும்ப ஒற்றுமையைப் பேணியதைப் பாடலில் விளக்கியுள்ளார். தனது தாய்மைப் பணியைச் சரிவரச் செய்வதற்குப் பெண் நயத்தக்க நாகரிகம் பேணும் சிறப்பைப் பாடல் நன்கு விளக்கிக்காட்டியுள்ளது.

---

# ஆச்சி



**சிறுகதை**

நல்லம்மா ஆச்சி இறந்து போனாவாம். உறவினர்கள் எல்லோருக்கும் தொலைபேசி மூலம் தகவல் பறந்தது. கடைசியா கிழவியை ஒருக்கா பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல். ஆச்சியைப் பார்க்க முடிவெடுத்துக் கொண்டேன்.

''நல்லாத்தான் இருந்தது. திடீரென்று சீவன் போட்டுது. ஆக்களை கனகாலம் உலைய வைக்காம செத்துப் போட்டுது. நல்ல புண்ணியம் செஞ்சிருக்கு'' அம்மா பக்கத்து வீட்டு அன்ரிக்குச் சொல்லிக் கொண்டிருந்தா. ''கடைசியா எல்லோரையும் பார்க்கத்தான் பெரியாஸ்பத்திரிக்கு வந்ததாக்கும்'' அம்மாவின் கண்கள் கலங்கின.

கிளாலியில நல்லம்மா ஆச்சியைத் தெரியாதவங்கள் எவருமே இருக்க முடியாது. அந்தளவுக்குப் பிரபலம் கிழவி. ஊரில எந்த நல்ல காரியமோ, கெட்ட காரியமோ கிழவியை அங்கு பார்க்கலாம். கல்யாணம் செய்து சின்ன வயதிலே கணவனை இழந்து பெற்ற ஒரே ஒரு பொடியனையும் இந்தியன் ஆமிக்குப் பறிகொடுத்திட்டுத் தனிமரமா இத்தனை காலமும் சீவியம் நடத்தியிருக்குதாம். அம்மம்மா சொல்லித்தான் தெரியும். உறவினர்கள் நிறையப்பேர் கிழவிக்கு. எங்கட அம்மம்மாவின்ர வீட்டுக்குப் பக்கத்தில்தான் இருந்தவா.

என்னில ஆச்சிக்கு நல்ல பிரியம். என்ரை பிள்ளைப் பேறு ஆச்சிதானாம் பார்த்தது. அம்மா நிறையத் தடவைகள் சொல்லியிருக்கா. ''சரசுவின்ர பொடியன் சரியா என்ர புருஷன மாதிரி நல்ல கறுப்படி'' சொல்லிச் சிரிக்குமாம் கிழவி.

**சண்முகம் சிறிதரன்**
கோட்டமகால், அல்வாய் மேற்கு, திக்கம்.

நல்லம்மா ஆச்சிக்குக் கிட்டத்தட்ட இப்ப எண்பத்தைந்து வயதிருக்கும் இன்னும் பதினைந்து வருசமிருந்தா சதமடிக்கும். பகிடியாகச் சொல்வேன். கிழவி சிரிக்கும். இரு கன்னங்களிலும் குழி விழச் சிரிக்கும். அழகாகத்தான் இருக்கும். எண்பதிலும் தலையில் இடையிடையே கறுப்புமுடி கண்ணடித்துக் கொண்டிருக்கும். அம்மாவுக்குக் கூட பல் விழுந்திட்டுது. ஆனாக் கிழவிக்கு அத்தனை பல்லும் அப்படியே கிடக்குது. அம்மா பார்த்துப் பொறாமைப்படுவா. ஆச்சிக்கு மூக்குத்தி தனி அழகுதான்.

எங்கட வீட்டுக்கு எப்பவாவது இருந்திட்டு ஒரு நாளைக்குத்தான் வரும். சரசுவின்ர ஒடியல் பிட்டு தின்று கனகாலமாய் போச்சுது. அதுதான் வந்தனான். கள்ளங்கபடமில்லாத கிழவி. வந்தா சும்மா இராது. ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டிருக்கும். முற்றம் கூட்டும் கிடுகு பின்னும். கிழவியின்ர கிடுகு பின்னலுக்குப் போட்டி போட ஒருத்தருமில்லை. நோய் நொடி வரும் வரைக்கும் கிழவியென்றே கூற முடியாது. அந்தளவுக்குத் தெம்பு ஆச்சிட்ட.

''அந்தக் காலத்து ஒடியல் பிட்டுத்தான் இன்றைக்கும் நான் தெம்பாக இருக்கக் காரணம்'' இப்ப எங்க ஒடியல் பிட்டைப் பார்க்கிறது. நல்ல பலாக்கொட்டையும் முசுட்டையும் பயத்தங்காயும் நல்ல நெத்தலி மீனும் போட்டு கூழ் காய்ச்சிக் குடிச்சா இரண்டு வருசத்துக்குக் காணும்'' ஆச்சி சொல்லும் போதே வாயூறும்.

ஆச்சி நல்லா எள்ளுப்பாகு செய்யும். நானும் தங்கச்சியும் இதுக்காண்டி நெடுவலும் ஆச்சி வீட்டுக்குப் போவம். கனக்கத் தரமாட்டுது. ''காணும் ஓடுங்கோ... வயித்தால அடிக்கப் போகுது'' நல்லம்மா ஆச்சி கலைக்க ஓடிவிட்டு மீண்டும் வருவோம். எங்கள்ள நல்ல அக்கறை ஆச்சிக்கு.

ஆச்சி வீட்டு முற்றத்தில ஒரு கறுத்தக் கொழும்பன் மாமரம் நல்லா காய்க்கும். மாம்பழ சீசன் என்றால் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே கிழவி வீட்டுக்குத்தான். வைக்கோலுக்க ஒழிச்சு வைச்சு வெட்டித் தரும். ஆச்சியின்ர கையால வேண்டித் தின்றா எதுவும் சுவைதான். இரண்டாயிரமாண்டு நாங்கள் இடம்பெயர்ந்த போது ஆச்சியும் தனது சொந்தக்காரர்களோடு இடம்பெயர்ந்து வடமராட்சிக்கு வந்திட்டுது. அதன்பிறகு கிழவிக்கு என்ன சனியன் புடிச்சுதோ தெரியாது. எல்லா சொந்தக்காரர்களும் கிழவியை ஒதுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஒருநாள் ஆச்சியைப் பார்க்கப்ள போனேன்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LAUGFS LANKA GAS PLC
## லா'.ப்ஸ் லங்கா காஸ்

நிறுவனம் வழங்கும் புத்தாண்டு சலுகை



இச்சலுகை 07.05.2011 வரை

இன்றுமுதல் புதிதாகக்
கொள்வனவு
செய்யும் 5kg அல்லது
12.5kg காஸ்
சிலிண்டர் வாங்கினால்

**காஸ்குக்கர் இலவசம்**

குறிப்பு:- எந்தவொரு லாப் காஸ் முகவரிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதம விநியோகத்தர்:
பிள்ளையார் டிஸ்றிபியூட்டர்
51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0772640715.


## 29 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

அன்னை மடியில்:
1982.04.24

இறைவன் அடியில்:
2010.09.21



செல்வி
**விசாலினி செல்வராஜா**
*(முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம்)*

எங்கள் உயிரில் கலந்த உறவே
நித்தம் நித்தம் உம் நினைவால் எம் விழிகள்
பார்த்த இடமெல்லாம் உமது முகம்
நீர் எம்முடன் வாழ்ந்த காலங்களை எண்ணி
மகிழ்கையிலே மறைந்த உமது நினைவுகளே
எம்மை கதி கலங்க வைக்கின்றன
'போயிட்டு வருகின்றேன்' என்று கூறிச் சென்ற
நீர் இன்னும் வீடு வந்து சேரவில்லை
சடுதியில் கொடிய காலன் விதி எனும்
சதி வலையில் உமது உயிரைக்
கவர்ந்து சென்றது ஏனோ?
இதுதான் இவ்வுலக நியதியா? அல்லது விதியா?

நித்தம் உன் நினைவால் வாடும்:
குடும்பத்தினர்

யாழ்ப்பாணம் (48,20,50)

## 36ஆவது பிறந்த நாளும் 5ஆம் மாத நினைவலைகளும்

செல்வி பத்திநாதன்
சோபாநோபட்



பிறப்பு
24.04.1975
இறப்பு
25.11.2010

ஒரு கூட்டுக்கிளிகளாய் ஒன்றாகி மகிழ்ந்திருந்தோம்
ஒரு நொடிப்பொழுதில் இடியாய் விழுந்தது எம் காதில்- நீ
எமை விட்டுப் பிரிந்து விட்டாய் என்கின்ற
துயரச் செய்தி விபத்தின் வடிவில் விதி வந்து
ஒரு விடியலையே இருளாக்கிச் சென்றுவிட்ட
கொடுமையினை எப்படி மறப்பது? போகுமிடம் தெரிந்திருந்தால்
நாமும் கூடவே வந்திடுவோம் என்றறிந்தா சொல்லாமல்
சென்றுவிட்டாய் எம்மைவிட்டு உன்னோடு வாழ்ந்திருந்த உறவுகள்
நாம் ஒளி இழந்த விழிகளாய் இருளடைந்து தவிக்கிறோம்
ஆறோடு ஆறாய் அகவை முப்பத்தாறு இன்றுனக்கு ஆனாலும்
ஆறாத சோகங்களோடு [யோகா] நாம் இங்கே
உன் ஐந்தாம் மாத நினைவலைகளைச் சுமந்தபடி ஏங்கித்தவிக்கும்.

77/1, முருகமூர்த்தி றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அக்கா, அத்தான்,
பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

(19,50,49)

### தவறிவிட்டது

கோயிற்குளம், விடத்தல் தீவு, மன்னார் எனும் முகவரியைக் கொண்ட கேதீஸ்வரன் யெயமலர் என்பவரது தே.அ.அ.(888450319V) மற்றும் பல்கலைக்கழக அடையாள அட்டை, ATM Card என்பன உள்ளடங்கிய கைப்பை நாச்சிமார்கோயில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.பல்கலைக்கழகம் ஆனந்தகுமாரசாமி விடுதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

### கொள்வனவும் விற்பனையும்

பழைய பித்தளை, இரும்பு, அலுமினியம், செப்பு மற்றும் காட்போட் வெற்றுப் பெட்டி கொள்முதல் செய்யப்படும். மற்றும் 8'×8' அடி அலுமினிய சோக்கேஸ் விற்பனைக்குண்டு (பான்சி கடைக்குப் பாவிக்கப்பட்டது)

தொடர்பு: இல. 558/1,
கே.கே.எஸ். வீதி, (மனோகராத்
தியேட்டர் சந்தி) தொ.பே:
0772487852, 0212225986

### வீடு வாடகைக்கு

யாழ். புங்கங்குளம் சந்தியிலுள்ள 3 அறை, 2 வரவேற்பறை மற்றும் சமையலறை குளியலறை கொண்ட வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள், கம்பனிகள், மொத்த வியாபார நிலையங்கள்) விரும்பத்தக்கது. தொடர்பு: 077-9937402

### கார், வான் விற்பனைக்கு

19 வருட காலம் தனிப்பட்ட பாவனையிலிருந்த 51 - 2 XXX செல்மொடல் வானும் நிசான் சனி 14ஸ்ரீ GXXX லான்சர் வகன் 14ஸ்ரீ 7 XXXX கார்களும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு 0770833339.

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

பொக்சர் மோட்டார் சைக்கிள் டபிள் சீற் பெரிய கரியல் மொடல் 10,000 கி.மீ ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு.
விவரம் யாவும் நேரில். 55 சீனியர் லேன், யாழ்ப்பாணம். 0777066487

### மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவம் (Rc) கௌரவ குடும்பம் 1980.10.04 ஆம் திகதி பிறந்த (நட்சத்திரம் ஆயிலியம் 1 ஆம் பாதம்) கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை.

தொடர்பு: M. தவராசா, நீதிமன்ற வீதி,
மல்லாகம். தொ.பே: 0776660640

### நல்லூரில் கேக் வகுப்புக்கள்

USA முறைப் படியான Dip in கேக் அலங்காரங்கள், 25 Dip in ஸ்டக்ஷர்ஸ் 30 வடிவங்கள், Dip in ஐசிங் பூக்கள். 30பூக்கள் பொருள்கள் இலவசம். சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவுகளுக்கு

தொடர்புகளுக்கு:
**0719095284**

(48,20,50)

### மாடி வீடு வாடகைக்குண்டு

இல.17/1, Brown Road இல் நாவலர் வீதிக்கு அண்மையில் சகல வசிகளுமுடைய 10 அறைகள் வரவேற்பறை, கராஜ், வாகனத்தரிப்பிடம் ஆகியன அமைந்த மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள், வங்கிகள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0112 589976, 077 9907052.

### பெயின்டிங் வேலை

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வர்ணப் பூச்சில் அனுபவம் கொண்ட தரமான பெயின்ட் பாஸ்களை கொண்டு உங்களுக்குத் தேவையான கட்டடங்கள், கோயில்கள் மற்றும் வாகனங்களுக்கு குறித்த காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் வர்ணப்பூச்சு வேலைகள் செய்து கொடுக்கப்படும் மேலும் சகலவிதமான கூலி வேலைகளுக்கும் ஆள்கள் ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்பு: S.M.தாஸ் (0774688427)

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

### வீடு கட்டும் காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, பழைய வீதி, கராஜ் ஒழுங்கையில் 2 ¼ பரப்புக்காணியில் வளவு அத்திபாரம், தனிக்கிணறு புதியது. இரு பாலை ஆசிரியர் கலாசாலை, நாவலர், பாடசாலை, கிறிஸ்தவ பாடசாலை, உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் , V.C அண்மித்த இடத்தில் உண்டு.
T.P: 0778737200, 0773783614, 0772928907.

## அறிவித்தல்

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட் (தற்போது கலைப்பிலுள்ளது)
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.91/CO

### வைப்பாளருக்கான அறிவித்தல்

வைப்பு மீளளிப்பு கோரலுக்கான இறுதித் திகதி பிற்போடப்பட்டுள்ளது.

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட் கம்பனியின் வைப்பாளர்கள் தமது பணவைப்புக்களின் மீளளிப்புக்கால விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மீளளிப்புக்கான விண்ணப்பப் படிவங்களை வேலை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3மணி வரை கீழ்க்காணும் முகவரியில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வரமுடியாதோர் தமது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும், தபால் மூலம் உரிய ஆவணங்களின் பிரதிகளை அனுப்பியும் மேற்படி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் ஏற்கனவே எமக்கு விவரங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான விண்ப்பப் படிவங்கள் தபால்மூலம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

உரிய முறையில் நிரூபிக்கப்பட்ட வைப்பாளருக்கான மீளளிப்புகள், 1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கமைய கம்பனியின் சொத்துக்களை விற்றொதிக்கிப்பெறும் நிதிக்கமைவாக, கம்பனிக்கலைப்பாளரினால் வழங்கப்படும்.

2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதியின் பின் கிடைக்கபெறும் மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் கம்பனிக் கலைப்பாளரினால் வழங்கப்படக் கூடிய மீளளிப்புக்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டமாட்டா என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே எமது முன்னைய அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்தவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**மேலதிக விவரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.**

**The Liquidators Home Finance Ltd.**
**C/o STMS Associates**
**No 80- 2/1, (2nd Floor) Galle Road, Colombo-06.**
**T.P: 2508874**

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின்
மடியில்
09.11.1920

அண்டவனின்
அடியில்
09.05.1988

அமரர்
**நாகலிங்கம் பாலகிருஷ்ணர்**
(பத்தர்)

திதி: சப்தமி (24.04.2011)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா எங்களின் இதயத் தெய்வமே
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்

தெய்வமாகிய உங்களின் இந்நினைவு நாளில் நாங்கள்
இதயம் நெகிழ்ந்து கண்ணீர் மலர்தூவி ஆண்டவன்
திருப்பாதங்களை வணங்குகின்றோம்.

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு,
(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(49,24,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு ஆங்கிலம் (11)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

'து' வரிசையில்
துன்பம்:Sarrow
துளி: Drop (of water)
துட்டம்: Wickedness
துடை: Wipe, thigh
துணி: Cloth, Bebold
துணை: Helper, Associate
துதி: Worship, Praise
துப்பாக்கி: Gun
துப்பு: Spit
துப்புரவு:Cleanliness
தும்பி: Dragonfly
தும்பிக்கை: Trunk (of Elephant)
தும்மு: Sneeze
துரத்து: Chase
துரை: Gentleman
துரோகம்: Betrayal
துவக்கு: Gun
துவட்டு: Wipe
துள்ளு: Jump

'தூ' வரிசையில்
தூக்கம்: Sleep
தூக்கு: Lift
தூசி : Dust
தூண்: Pillar
தூண்டு: Kindle
தூதர்: Messenger, Angel
தூபம் :Incense
தூய்மை : Purity
தூரம்: Distance
தூரிகை: Painter's brush
தூவு: Sprinkle
தூறல்:Drizzling
தூஷணம்: Abuse

'தெ' வரிசையில்
தெய்வம்: God
தெய்வீகம்: Dvine, Godliness
தெரிவு: Selection
தெரு: Street
தெள்ளு: Flea
தென்றல்: Breeze
தென்னை: Coconut tree
தெளிவு: Clear

'தே' வரிசையில்
தேடு:Search
தேனீ: Honeybee
தேள்: Scorpean
தேவன்: God
தேன்: Honey
தேசிக்காய்:Limefruit
தேங்காய்:Coconut
தேமல்: Marks on the skin
தேகம்: Body
தேசியம்: Nationalissssm
தேரை: Toad
தேக்கு: Teak
தேதி: Date
தேசம்: Nation
தேர்: Chariot
தேய்: Rub

'தை' வரிசையில்
தைமாதம்:January
தைலம்: Medicinal oil
தைரியம்:Courage
தை: Sew

'தொ' வரிசையில்
தொல்: Ancient
தொல்லை: Hindrance
தொப்பி: Hat
தொங்கு: Hang
தொகுதி: Collection, District
தொங்கல்: End
தொடக்கம்: Beginning
தொடங்கு: Begin
தொடர்ச்சி:Continuation
தொடர்பு:Conneetion
தொடு: Touch
தொட்டில்: Cradle
தொண்டன்: Servant, Volunteer
தொண்டு: Service
தொழில்: Job

'தோ' வரிசையில்...
தோடை: Orange
தோல்: Skin
தோள்: Shoulder
தோட்டம்: Garden
தோப்பு: Treegrove
தோய்: Bathe, Soak
தோழன்:Comrade
தோற்றம்: Appearance
தோன்று: Appear
தோணி: Boat
தோற்கடி: Defeat
தோடு: Earring

தொகுப்பு:ரம்யன்




## பொது அறிவு

1. முதலாவது விண்வெளி ஓடம் எது?
கொலம்பியா
2. வெள்ளிக்கோளில் அமில முகில்கள் இருப்பது பற்றிய தகவலைத் தந்த விண்கலம் எது?
பயோனியர் விண்கலம்
3.முதலில் உலகைச் சுற்றி வந்தவர் யார்?
மகலன்
4.கம்பளி உற்பத்தி முதலில் நடைபெற்ற நாடு எது?
ஈரான்
5.இலங்கையில் உயரமான குன்று எது?
கொக்காகல குன்று
6.உலகில் பெரிய குளம் எது?
சேன நாயக்க குளம்
7.இலங்கைப் பல்கலைக்கழகம் எப்போது ஆரம்பமானது?
1942 ஆம் ஆண்டு

செல்வரஞ்சன் நிரஞ்சனா,தரம்-9
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

## பல்லி பற்றிய தகவல்கள்

★பல்லிகளில் 400 இனங்கள் உள்ளன.
★டோக்கோ இனப் பல்லிகள் 46 செ.மீ வரை வளரும்
★ அந்தமான்தீவில் பறக்கும் பல்லிகள் உள்ளன.
★பல்லியின் ஓசை 92 மீற்றர் வரை கேட்கும்
★பல்லிகள் நீர் அருந்துவதில்லை.

ச.துளசிகா,
தரம்- 3 'ஏ',
யா/சிறுவிளான் கனகசபை வித்தியாலயம்.

## விடை தெரியுமா? 104

1.செம்மதித் தொடர்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
2.சிரியா நாட்டு ஜனாதிபதியின் பெயர் என்ன?
3.பிரிட்டனுக்குச் சொந்தமான டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கி எத்தனை ஆண்டுகளைக் கடந்து விட்டது?
4.எலுமிச்சையின் தாவரவியற் பெயர் என்ன?
5.முதலாவது தமிழ்ப் பத்திரிகையான உதயதாரகை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 30.04.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**உங்களுக்கும் பரிசில்கள்**


### விடைகள் 102

1.மெக்ஸிகோ
2.பசுபிக் பெருங்கடல்
3.புதன்
4.புதன்,வெள்ளி
5. இளங்கோவடிகள்

**வெற்றி பெற்றவர் விவரம்**
ம.திவ்வியவர்த்தினி, தரம்-7,
யா/மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்.
2.ர.விஜிதா, தரம்- 10 'ஏ',
யா/இராமநாதன் கல்லூரி.





ஜானுகா விமலேந்திரன், தரம்- 9 'ஏ',
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



தே.விதுஷினி, தரம்-6 'பி',
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.


கனகசபை ஜீவன், தரம்-7 'பி',
புற்றளை மகா வித்தியாலயம், வடமராட்சி.


ர.கஜேந்திரன், தரம்-8 'பி',
விக்ரோரியாக் கல்லூரி,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலிங்க", "டில்சான்" மட்டுமல்ல மகனே?

போராட்டங்களுக்கும், வாழைக்கும் பொதுப்பண்புகள் பல
சாவில்லை சுலபத்தில் இரண்டுக்கும்!
மண் "சிவந்தால்" இரண்டிலும் நல்ல மகசூல்!!
சந்ததியே தாயைத் தின்னும் இரண்டிலும்!!!

அடுத்த 'தலைமுறை'க்கு கொடுத்துக்
'கைமாற்றும் எண்ணம்' தான்
'முடித்து' வைக்குமளவுக்கு பலரை
'கடுப்பேற்றியதாயும்' ஓர் கதையுண்டு?
கிடக்கட்டும்!
உன் மடி தூங்கும் 'இளையவனு'க்கு
இன்றிரவு வரை 'என்னென்ன' சொல்லியிருப்பாய்?

காரியமாகும் வரை கழுத்தில் "தேர் பூட்டி" இழுத்தவனின்
சீரிய "மஹா வம்சப் பொய்" க் கெதிராய்
'எழுத்துரு'வில் எதுவுமில்லை, எங்களின்
இருப்பினை இடித்துரைக்க,
என்றவுண்மை சொன்னாயா?

"அரை மொட்டைத் தலை"யோடு பரதேசம் வந்தவர்க்கு
இரையென-முப்பாட்டி 'குவேனி'யின் கற்பு முதல்,
இக்கால "இறமை" யோடு, இன்னமும் நீளும்...
என்பதெல்லாம் சொன்னாயா?
அவனது "ஸ்கொலர்ஷிப்" குளிகைகள் மேல்,
வீரவரலாற்று (?) வேதனைகளை தேனாய்ப் பூசி,
"தீத்தினால்" தப்பென்ன?

நல்லூர் கடக்கும் "நத்தை" வான் ஒன்றில்,
"உடைத்த" தூணை ஓரக்கண்ணால் காட்டி
வல்லரசுக்கெதிராய் வாடித்தீர்ந்து வானுயர்ந்த
"சோடாப்புட்டிக் காரனின்" சொந்தப் பெயர்
சொன்னாயா என்றாவது?

கச்சேரியில் காகிதம் நிரப்பும் நீள வரிசையொன்றில்
நின்றபடி,
இச் 'சந்தி' வரை வந்து இடியென உறுமியவன்
இறங்கி வந்து,
"இப்போது வா பேச்சுக்கென்று" இழக்காத சமபலம்
சொன்னாயா?

"கோட்" டோடு போன "கொம்மான்",
நீட்டோலை கொடுத்தும், வனவாசம் மறுத்து,
"ஜனநாசம்" கண்ட வஞ்சகம் கொஞ்சமாவது
சொன்னாயா?
கிளிநொச்சி கிழித்து விரையும் முன்னிரவொன்றில்,
விழி வழியும் இருதுளி நீரை
அருகிருப்போர் அறியாமல் சுண்டியெறிந்து,
"வீரம் விளைந்து, உலகே வியந்த பூமி" இதுவென்று
விசும்பினாயா அவனருகில்?

ஐந்து வயதில் "ஆனையிறவின் வேகம்"
சொல்லிச் சோறூட்டும்!
மூன்றாம் வகுப்பில் "முள்ளிவாய்க்கால் சோகம்"
சொல்லிச் சைக்கிள் ஓட்டு!!
'டொங்கிள்' தெரிந்தவனுக்கு, "பங்கர் வாசத்தின்"
மனப்படத்தைக் காட்டு!!!
'பேஸ்புக்' கில் தெரியாத பல முகங்கள் இன்னும்
'தடுப்பில்' கிடக்கும் தவிப்பை மீட்டு!!!!
'3G' ஐ விட வேகம் - கடந்து வந்த "கடும்பாதை" மறந்த
எம் "சொகுசு மனங்கள்" என்றும் சாட்டு!!!

'ரஹ்மானின்' சுரம் சுரக்கும் விரல்களுக்கும்,
'சச்சினின்' சதம் குவிக்கும் சாதனைத் துடிப்புக்கும்,
கலப்பற்ற ரசிகனாய் இருந்த "தமிழ்க் காவலனை"
கதையாய் சொல்லித் தூங்க வை!

ஏன்?
நிறைவாகும் வரை மட்டுமே - இந்த
"மறைவென்"பதையும் சொல்லித்
தட்டி "எழுப்பு"!!

"சாட்டிச்" சுற்றுலாவில்,
"தீருவில்" பெருவெளியில்,
"கொடிகாமம்" தரிக்கும் போது,
"கோப்பாய்" கடக்கும் போது,
........" 'மலிங்க', 'டில்சான்' மட்டுமல்ல மகனே,
எம் மாவீரர்கள்??"...... என்று,
"மண் புதையல்"கிளறினாலும்,
எம் மனம் புதைந்த "பெரு நெருப்பின்"
வெண் சாம்பல் மூடிய "வித்துக்களை"
நினைவுறுத்து அது போதும்!!

**அபிதவன்**

# இது நமக்குத் தேவையா?!

வெடிகொளுத்தும் சோதரரே வேண்டுகிறோம் கேளும் - பட்ட
வேதனையை மறந்துவிடின் வேறுவினை மூளும்!
முடிவடைந்த யுத்தகாலம் மூட்டிடாத வெடிகளா - அவை
முறைதவறி சிதறிநாமும் பட்டிடாத அடிகளா?!
வடிவிழந்து வாழ்வழிந்த வேளை நினை வில்லையா - அந்த
வடுக்களினால் முற்றியிங்கே வந்தமனத் தொல்லையா?
விடிவழிந்து விழிகசிந்த போதும்புத்தி மாறலை - இந்த
வெடிகொளுத்தும் சக்தியன்று உடலிலேனோ ஏறலை?!

செத்தவர்க்கு வெடிகளென்ன சேதியிங்கு சொல்லுமாம் - அந்த
சீவனுள்ளே எமைநினைந்து சிரித்தபடியே செல்லுமாம்!
சத்தியமாய் ஆலயத்தில் சாமிவெடி கேட்டதா - இல்லை
சாமியையே மிரட்டுமெங்கள் சங்கதியைக் காட்டுதா?!
புத்தியிலே போதையேறிப் போனதேனோ தெரியலை - பிள்ளை
பூமியிலே பிறந்ததற்கும் வெடிகளேனோ புரியலை!
எத்திருநாள் வந்தபோதும் எகிறுதடா வெடியொலி- அதை
இன்னும் கொஞ்சம் உற்றுக்கேட்டால் எமன்சிரிப்பின் இடியொலி!


கந்தகத்தின் நெடியதெங்கள் காற்றிலின்னும் குறையலை - அதன்
கனலெரித்த தடயமெங்கள் கண்ணைவிட்டு மறையலை!
வெந்தபுண்ணில் அமிலம்வார்க்கும் வேலைதானே செய்கிறோம் - எதை
வென்றுவிட்ட வெறுந்திமிரில் வெடிகொளுத்தி உய்கிறோம்?!
பந்தம் சுற்றி வெடிகள் செய்யும் பாலகரை மறக்கிறோம் - பெரும்
பாவமதில் பங்கெடுத்துப் பண்பதனைத் துறக்கிறோம்!
விந்தையில்லை, வெடிகள்விட்டு விழிகொளுத்தும் வீரர் நாம் - அதை
வெஞ்சமரில் பட்டதென்று விளம்பவல்ல சூரர்நாம் !!

ஏறிகணைக்கும் எம்வெடிக்கும் என்னபெரிய மாற்றமாம்- எல்லாம்
எமனெறியும் ஆயுதத்தின் இன்னுமொரு தோற்றமாம்!
பொறிகலங்கி போரின்போது புலனழிந்து ஓடினோம்- அந்த
பொழுது என்ன புலர்வதற்காக வெடிகள் விட்டு ஆடுறோம்?
நெறிதவறும் மார்க்கமொன்று நெஞ்சினுள்ளே தெரியுது - கொஞ்ச
நேரம்நின்று நினைக்கையிலே நிஜமதென்று புரியுது!
அறிவிருந்தும் புரிதலின்றி ஆடுகின்ற ஆட்டமோ - என்றும்
அந்திமத்தின் தொடக்கம் அது அனுபவத்தின் தேட்டமாம்!

- அனலையூர் சேந்தன்

**("போர்க்காலத்தில் தடைசெய்யப்பட்டிருந்து தற்போது பாவனைக்கு நிறையவே கிடைக்கும் பட்டாசு - வெடிபொருள்கள் இன்றைய நாள்களில் தமிழர்களின் கொண்டாட்டங்களில் தவிர்க்க முடியாத பாத்திரமாகிவிட்டன")**

# ஒரு பிஞ்சின் குமுறல்



கொடிய யுத்தத்தால்
அன்னையை நானிழந்தேன்
கொடும் சுனாமியால்
தந்தையை நானிழந்தேன்
செம்மணிப் பரப்பினிலே
தங்கையை நானிழந்தேன்
முள்ளி வாய்க்காலில்
என் மொத்த உறவுகளையும் இழந்தேன்
இத்தனை துயரச் சிலுவைகளைச்
சுமந்த நான்
இறுதியில் என்னையும் அ
இழக்கத் தயாரான நிலையில்.....

இரக்கமற்ற இவ்வுலகில்
என் எண்ணங்கள் யாவும்
புதைக்கப்பட்டு விட்டன
நீதி தேவன் இங்கு
நீதியற்றுப் போனதால்
[illegible] அகப்பட்டு
என் இறுதி ஆசையைக் கூட
நிறைவேற்றிக் கொள்ள
முடியாத பாவியாய்
நிர்க்கதியற்றுக் கிடக்கிறேன்

கைகள் கட்டப்பட்டு
கவனிப்பார் எவருமின்றி
உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில்
உணர்வுகள் இழந்த
ஜடமாய் வாடுகின்றேன்
எம்மண்ணில் இதுவரை
நடந்தேறிய கொடுமைகளைக்
கண்டும் காணாதிருந்த
அனைத்துலக அரசுகளே
சரணாகதியாகி விட்ட
என் போன்ற
தமிழ்ச் சகோதரர்களின்
இறுதி முடிவு என்னவென்று
சனல்-4 மூலம்
கண்டு கொண்ட பின்னராவது
நியாயமான நம் சொந்தங்களின்
கோரிக்கைகளுக்குச்
செவி சாய்த்து நிறைவேற்றப் பார்!

"தமிழின் தோழன்" குப்பிளான்.

## சுட்டெரிக்கும் சூரியனே



சுட்டெரிக்கும் சூரியனே
சூடுதனிக்க மாட்டாயா
பட்டதுயர் முடிந்ததென
வெட்டை வெளிதனில்
வாழ்வு தொடங்கையிலே
நீயும் எம்மை எதற்காய்
சுட்டெரிக்கிறாய்
கூல் சோடாவும் தண்ணியுமே
இங்கு இப்போ சாப்பாடாச்சு
சுழன்று சுழன்று
விசிறிகளுக்கே இங்கு
வேர்க்கிறது
மரம் வெட்டிய
பாலைக் கொடுமையை
அனுபவித்த படி
எங்கள் பயணங்கள்
எப்போது குளிரும்

புலோலியூர்
வேல்நந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினையில் அரசியல் நடத்துவோரை வரலாறு மன்னிக்காது

உயிர்க் கொலை மூலமாகவும், வேறு நடவடிக்கைகள் மூலமாகவும் தமிழ் இன மக்களை வேண்டுமென்றே அழித்தது ஜெனோஸைட் (Genocide) என்று அழைக்கப்படும். லத்தீன் மொழியில் 'ஜெனோஸ்' என்றால் மக்கள் என்றும் 'ஐயட்' என்றால் கொலை செய்தல் என்றும் பொருள் படும். லத்தீன் சட்ட மொழியாக இருந்ததனால் ஜெனோஸைட் என்னும் சொல் உருவாக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டு இன அழிப்புக் குற்றத்தைத் தடுப்பதும் தண்டிப்பதுமான ஐக்கிய நாடுகள் சமவாயம் உருவாக்கப்பட்டது. இதன்படி ஒரு இன மக்களைக் கொலை செய்வது அவர்களுக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஊறுவிளைவிப்பது அவர்கள் முழுதாக அழிவதற்கு ஏதுவான வாழ்க்கை முறைகளைத் திணிப்பது போன்ற நடவடிக்கைகள் எல்லாமே 'ஜெனோஸைட்' வகைக்குள் அடங்கும்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவர உதவிய ரபாயல் லெம்கின் என்னும் சட்ட நிபுணர் 'ஜெனோஸைட்' என்பது ஒரேயடியாக ஓர் இனத்தை அழிப்பது என்பதை விட ஓர் இனத்தை அழித்தொழிப்பதற்காக அதன் வாழ்க்கையின் அவசியமான அத்திபாரங்களை அறுப்பதற்கான வெவ்வேறு நடவடிக்கைகளின் கூட்டிணைக்கப்பட்ட திட்டம் (Coor dinqted Plan) என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்.

இது ஒரு குறிப்பிடத்தக்க வரைவிலக்கணம் ஆகும். இதைக் கொண்டு ஒரு சமூகக் குழுவை எதிரியாக வர்ணிப்பது முதல் அதன் அரசியல் பொருளாதார கலாசார கோட்பாட்டுத் தளங்களை அழிப்பதும் அந்த அழிவை எதிர்ப்பதற்கான அதன் ஆற்றலை இல்லாதொழிப்பதும் அதன் மீது வன்முறையைப் பிரயோகிப்பதும் இந்த வித்தியாசமான நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே 'ஜெனோஸைட்'டுக்கான முன்னெடுப்புக்கள் என்று சர்வதேச குற்றவியல் மன்றத்தின்முன் வாதாட முடியும்.

இதை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர் விடயத்தை நாம் ஆராயலாம்.

ஈழப்பிரச்சினையானது வன்முறையை நாடிய பயங்கரவாதக் குழுவொன்றினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்னும் தற்போதைய அரச கொள்கையை நாம் எடுத்துக்கொள்வோம்.

அப்படிப் பார்த்தால் இது தீவிரவாதம் மட்டும்தான். ஆனால் இதற்காக தமிழ் மக்கள் எல்லாரையுமே சந்தேகத்துடன் நடத்தி அவர்களை கண்ட இடத்தில் கைதுசெய்யத் தொடங்கிவுடனேயே இது பயங்கரவாதப் பிரச்சினை என்பதைவிட ஓர் இனத்தையே எதிரிகளாகப் பார்க்கும் 'ஜெனோஸைட்' விடயமாக மாற ஆரம்பித்தது.

பிறகு தமிழர்கள் வாழும் இடங்களில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை ஒட்டு மொத்தமாக இடம்பெயரச் செய்து அவர்களின் பொருளாதார சமூக கலாசார மூலங்களை அழிப்பது இரண்டாவது கட்ட 'ஜெனோஸைட்' நடவடிக்கை .

அதே காலப்பகுதியில் தமிழர்களின் மீது விமானத் தாக்குதல், மல்டி பரல்



ஆட்டிலறித் தாக்குதல்களை மேற்கொண்டு தமிழர்களை அழித்தால் அது பாரதூரமான 'ஜெனோஸைட்' ஆகின்றது.

தமிழர்களின் மத்தியில் ஒட்டுக் குழுக்களை உருவாக்கி அவர்களை ஏவிவிட்டு அவர்கள் மூலமாகவே ஊடறுப்புத் தாக்குதலான கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டு கொலை செய்ததும் 'ஜெனோஸைட்'டுக்குள் அடங்கும்.

அதுமட்டுமல்ல தமிழ்மக்களை இடம்பெயரச் செய்து வருடக் கணக்காக அகதி முகாம்களில் வைத்திருந்து அவர்களின் கல்வி ஆளுமைகளை இல்லாதொழிப்பதும் வெள்ளைவான் கடத்தல்கள், காரணமற்ற கொலைகள், சுற்றிவளைப்புக்கள் மூலமாக தமிழர்களை அடக்கி ஒடுங்கச் செய்வது தமிழர் மீதான அழிவு நடவடிக்கைகளை எதிர்க்கச் சக்தி இல்லாதவர்களாக அவர்களை ஆக்குவதும் கூட 'ஜெனோஸைட்' தான்.

அமெரிக்கப் பழங்குடி மக்கள் ஆர்மீனியர்கள், ஐரோப்பிய யூதர்கள் போன்ற இன அழிப்புக்கு ஆளாகிய மக்களுடன் இன்று இலங்கைத் தமிழர்களும் சேர்ந்திருக்கின்றனர்.

வன்னி மக்கள் பசியிலும் குறை போசாக்கிலும் வாடுவது கண்கூடாக நிறுவப்படக்கூடிய ஒன்று. அதற்கு இலங்கை அரசின் கொள்கைதான் அப்பட்டமான காரணங்கள் என்றும் சந்தேகமின்றி நிறுவ முடியும்.

வன்னியில் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது அப்பகுதி மக்களுக்கு எந்த அளவு உணவுப் பொருள்களை அதிகாரிகள் அனுமதித்தனர் என்பது வும் அரசு உணவு பொருள்களை அனுமதித்த போது அந்த உணவுப் பொருள் காணாமல் போனமையால் மக்கள் பட்ட அவலங்களையும் காட் டலாம்.

பாதுகாப்பு வலயம் ஒன்றை அரசு அறிவித்த போது அந்தப் பகுதிக்குள் லட்சக்கணக்கான மக்கள் குவிந்திருந்தபோது அங்கு அரச படைகள் நடத்திய ஆகாய, தரை மார்க்க தாக்குதல்களை ஆதாரங்களாகக் காட்டலாம்.

இனிமேல் பாதுகாப்பு வலயம் மீது கனரக ஆயுதத் தாக்குதல்களை மேற்கொள்ளமாட்டோம் என்று அரசு கொடுத்த வாக்குறுதி ஒன்றே இதற்குப் போதும் என்று சட்டவல்லுநர்கள் கருதுகின்றனர்.

எப்படி ஒரு குழந்தை பிறந்த நாளிலிருந்து தட்டிக் கொடுப்புக்கள், தண்டனைகள் போன்றவற்றின் மூலம் நன்னடத்தை உள்ள மனிதனாக வளர்த்தெடுக்கப்படுகிறதோ அதே போலத்தான் அரசும் நல்ல நடத்தை உள்ளதாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இதற்கு உதவவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சர்வதேச நிதிக் கட்டமைப்புக்களை உருவாக்கின்றது. அக் கட்டமைப்பில் 'ஜெனோஸைட்' குறித்த சட்டங்கள் ஒரு முக்கிய மூலைக் கல்லாகும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தியாவின் என்.டி.ரீ.வி. சனலில் இலங்கைப் பிரச்சினை பற்றிய விவாதம் ஒன்று நடைபெற்றது.

ஈழத்தமிழர் பிரச்சினை முக்கிய பங்கை வகிக்குமா? இல்லையா? என்பதுதான் கேள்வி.

இந்துப் பத்திரிகை நிருபர் ராம் சுப்பிரமணியம் சுவாமி, காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் ஜயந்தி நடராஜன், விடுதலைப் புலிகள் ஆதரவாளராகக் கருதப்படும் அருட்தந்தை கஸ்பர் போன்ற பல பேச்சாளர்களுடன் பார்வையாளர்களையும் சேர்த்து மிக மிக விறுவிறுப்பாக நடந்தேறிய விவாதம் அது.

சுபாஷ் சந்திரபோஸ் பகவத்சிங்கோடு பிரபாகரனை எப்படி ஒப்பிடலாம்? என்பது தொடக்கம் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளா? போராட்ட வீரர்களா? என்பது வளர காரணமான கருத்துப் பரிமாறல்கள்.

மத்தியில் ஒரேயொரு கருத்துடன் எல்லோரும் ஒத்திசைத்தார்கள்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ந்தெடுக்கப்படும் நடவடிக்கை இன அழிப்பா? இல்லையா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

இன அழிப்பே என்று அங்கிருந்தவர்கள் எல்லோரும் தெரிவித்தனர்.

ஈழத்தமிழ மக்களைப் பொறுத்தவரை ஒரு யுகம் முடிந்துவிட்டது. அது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் நிர்ணயிக்கப்பட்ட யுகம்.

ஈழத்தமிழர் போராட்டம் ஓர் ஆயுதப் போராட்டம் மட்டுமன்றி இலங்கை அரசுடன் பேரம் பேசும் ஒரு சக்தியாகவும் இருந்தது.

ஓர் இலங்கையர்-தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர்களாக இருந்தா லும் அம்மக்களால் பெரும்பான்மை சக்தியான அரசுக்கு எதிராக முன்று தசாப்த கால போராட்டங்களை நடத்திய பெருமை சேரும்.

விடுதலைப் புலிகள் என்கிற சிகரம் சாய்ந்து விட்டது. அதனுடன் தமிழர்களின் உரிமைகள் எல்லாம் நொறுங்கிப் போய்விட்டன.

இனிமேல் யார் ஈழத் தமிழர்களுக்காக நியாயத்தினை தட்டிக் கேட்க வருவார்கள் என்று அநாதைகளாக நிற்கின்றனர் ஈழத் தமிழர்.

நாளுக்குநாள் கொலைகள், களவுகள், கற்பழிப்புகள் என்று தமிழர் பகுதியில் எல்லை கடந்து செல்கிறது.

இதற்குப் பின்னணியாக நிற்பவர்கள் யார்? தமிழ்ச் சமூகம் சீரழிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் மனங்களின் ஆக்கபூர்வமான சித்தனைகளைச் செய்ய விடாமல் அரசு இப்படிப்பட்ட கலாசார சீரழிவுகளுக்கு இடம்கொடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழர் பண்பாட்டுடன் கூடிய ஒரு சீரான கட்டுப்பாடு இருந்தது. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட நிலையில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

அரச அதிகாரிகள் தொடக்கம் சமூகத் தொண்டர்கள் வரை அரசு தனது பக்கம் இழுத்து வைத்திருந்து தமிழர் விரோத செயற்பாடுகளில் தாராளமாகத் தங்கு தடையின்றி செயற்பட ஊக்கம் அளிக்கிறது இதற்கு உடந்தையாக திராணியற்ற அரச அதிகாரிகளும் காட்டுமந்தைகள் போல் உள்ளனர்.

ஒரே திசையில் அதாவது அரசு திணிக்கும் செயற்பாடுகளில் இருந்து விலக முடியாமலும் தமது பதவி பறிபோய்விடும் என்ற காரணத்தாலும் தலையாட்டும் பொம்மைகள்போல் உள்ளனர் தமிழர்கள்.

இனவிரோத செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருந்து இவர்களும் பழியை ஏற்கிறார்கள். பெரும்பான்மை அரசுடன் தொடர்ந்து பேசி விவாதித்து புரிந்துணர்வை ஏற்படுத்தி அழுத்தங்களைக் கொடுக்கும் பலதரப்பட்ட போக்குகளையும் கொண்ட யுகமாக இது மலரட்டும். தமிழர்களுக்கு விமோ சனம் யார் வந்தும் தரமுடியாது. தமிழர் கள் ஒவ்வொருவரும் போராடிப் பெற் றுக் கொள்ள வேண்டிய விடுதலை என மனதார உணர்ந்து இயங்கும் காலமாக இருக்கட்டும்.

தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சக்திகள் அனைத்தையும் ஆயுதங்களைக் களைந்து சகலரும் இயங்கக்கூடிய ஜனநாயகத் தளங்களை ஏற்படுத்த தமிழ்மக்கள் கோரட்டும். இந்த முறைவழியில் ஒழுக்கநெறி தரும் மனோவலிமையினால் எமது மக்கள் மீண்டும் சரித்திரம் படைக்கட்டும். அப்பொழுதுதான் தமிழர்களுக்கான ஒழுக்கமுள்ள கட்டமைப்பில் இயங்கக்கூடிய வழிமுறைகள் சாத்தியமாகும்.


**துன்னாலைச் செல்வம்**

தமிழர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பவர்கள் இடம்பெற்ற அழிவுகளை சாட்சிப் படுத்துவதன் ஊடாக தமிழர்களுக்கான உரிமைகளைப் பெற முடியுமாயின் மீண்டுமொரு அழிவைத் தமிழ் சமூகம் எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படாது.

அதைவிடுத்து அரசியல் இலாபத்துக்காகவும், அரசியலை நகர்த்திச் சென்று தம்மை தக்கவைப்பதற்காகத் தமிழர்களுடைய பிரச்சினைகளை வாதப் பிரதிகளாக பேச முற்படும் அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்கு மிகப் பெரும் துரோகத்தை இழைத்தவர்களாக இருப்பர். இவர்கள் இவ்வாறு இருக்கும் பட்சத்தில் கால வரலாறுகள் இவர்களை ஒரு போதும் மன்னிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின்
# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்:
26.04.1930

விண்ணில்:
25.03.2011

## திருமதி
## அரியரத்தினம் நாராயணலிங்கம்

அன்புக்கு அணிகலனாய் பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் சுமை தாங்கியாய் வாழ்ந்து
எம் இதயத்தில் என்றும் அணையாத் தீபமாய்
சுடர் வீசும் எங்கள் தங்க அம்மாவே!
இறைவன் உம்மைப் பிரித்தாலும் மறவாது உங்கள் நினைவுகள்
சித்திரம் போல் சிரித்து நின்ற உங்கள் அழகைச் சிலை வடிவில்
பார்த்திட நாம் என்ன பாவம் செய்தோம்? அம்மா
திங்கள் ஒன்று கடந்தாலும் உங்கள் அன்பு முகத்தை
எங்களால் மறக்க முடியவில்லை - அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

'ரூப மகால்',
தேவாலய வீதி, சங்கானை.
021 321 4311

பாசத்துடன் நினைவுகூரும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48,21,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளஞ்சார் அபிவிருத்திக்கு வழிபிறக்குமா?

12



எமது வளத்தின் அபிவிருத்திக்கு நாம் ஒவ்வொருவரும் சிறிதளவேனும் பங்களிக்க வேண்டும். நாம் சார்ந்த சூழலின் அபிவிருத்திக் கட்டமைப்புக்கு அந்தச் சூழலை முழுவதுமாகப் பயன்படுத்தும் அதே வேளையில் அதனது உறுதிப்பாட்டுக்கும் பங்களிக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில் எமது வளத்தை வளம்படுத்தி வளமாக வாழ எம்து சிறு பங்களிப்பையாவது நாம் செலுத்த ஆயத்தமாகிறோம் என்னும் நல்ல செய்தியை இனி இந்தப் புத்தாண்டுச் செய்தியாகவும் நலமாக வாழ வாழ்த்துக்களாகவும் எமதினிய உறவுகளுக்குக் கூறிக்கொள்வதில் உதயனுடன் சேர்ந்து மகிழ்வுறுகிறோம். இந்தச் சித்திரைப் புத்தாண்டிலிருந்து எங்களூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து முன்னுதாரணமாகக் கரும்பு வெல்லத்துக்குப் பதிலாகப் பனை வெல்லத்தைப் பயன்படுத்த ஆரம்பிப்போம். நாம் பயன்படுத்தும் பனை வெல்லத்தின் மூலம் பல ஆயிரம் மக்கள் வேலை வாய்ப்பும் வாழ்வாதாரமும் பெறுவர். பனைவளத்தின் அபிவிருத்திக்கான எமது பக்கத்து பங்களிப்பாக இதனைக் கருதலாம். இதற்கும் மேலாக எமது சுகாதாரத்தைப் பேணிக் கொள்வதில் கரும்பு வெல்லத்துக்குப் (சீனி) பதிலாகப் பனை வெல்லத்தைப் பயன்படுத்துவது உகந்தது.

கலப்படம் ஏதுமற்ற பனை வெல்லத்தை வட பிராந்திய பனை, தென்னை வள அபிவிருத்திச் சமாசத்தின் கிளைகளில் பெறக்கூடியதாயிருக்கும். இந்த வெல்லத்தை வர்த்தகர்கள் சமாசத்திலிருந்து தருவித்து விற்பனை செய்யலாம். தரத்தின் அடையாளத்தைச் சமாசமே உறுதிப்படுத்துவதாயிருக்க வேண்டும். இது விடயத்தில் பனை அபிவிருத்தி சபையின் செயற்பாடுகள் மேலும் தரத்தை உறுதி செய்வதாக நிச்சயம் இருக்கும். பனை வெல்லத்தினை பொதுவாகக் குறைந்தளவே நாம் உட்கொள்வதுண்டு. இதற்கு முன்மாதிரியை எமது அனுபவமே தந்திருக்கிறது. முன்பொரு காலம் பொருளாதார தடை மிகவும் இறுக்கமான காலம். சிறுதுண்டு பனை வெல்லத்தை நுனிநாக்கில் சுவைத்துத் தேநீர் அருந்திய காலமது. வெல்லத்தின் அளவைக் குறைத்து பயன்படுத்திய காலம் மாறி எந்த உணவுப் பண்டமாயினும் அளவுக்கதிகமான இனிப்பென்றாகியிருக்கின்றது. இதனால் பலரும் வயது வித்தியாசமின்றி நீரிழிவு நோய்க்குள்ளாகியிருக்கின்றனர். ''உணவே மருந்து, மருந்தே உணவு'' இதனை இனியேனும் நாம் கவனிக்கத்தவறின் இவ்வாறான நோய்களில் விழுந்து துவண்டிட நேரிடும்.

இனிவரும் சந்ததிக்கான நல்ல உணவுப் பழக்கங்களை, ஒழுக்கநெறிகளை நற்சிந்தனைகளை இன்னும் சுதேச உணவுடனான இயற்கையை அனுசரித்த இயல்பான வாழ்க்கையை வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பனை வெல்லத் தில் அப்படியென்ன சிறப்பு என நீங்கள் கேட்பது புரிகிறது. சென்றவாரம் மகாத்மா காந்தியடிகள் விரும்பியுண்ட இனிப்பாகக் கூறப் பட்டது. கீழே விஞ்ஞான ஆய்வுக் கட்டுரையின் ஒப்பீட்டு ஒன்று தரப்படுகின்றது.

**பனை வெல்லத்திலும் கருப்பஞ் சீனியிலுமுள்ள சத்துப் பெறுமானங்களின் ஒப்பீடு**

| சத்து | பனை வெல்லத்தில் (Jaggary) | கருப்பஞ் சீனியில் (Cane Sugar) |
|---|---|---|
| சுக்குரோசு | 76-86% | 99.5% |
| குளுக்கோசு | 1.66% | - |
| புரதம் | 1.04% | - |
| கொழுப்பு | 0.19% | - |
| மொத்த தாது உப்புக்கள் | 3.15% | 0.05% |
| கல்சியம் | 0.861% | - |
| பொசுபரசு | 0.052% | - |
| இரும்பு (மி.கிராம்) 100 கிராமில் | 11.01 | - |
| செப்பு (மி.கிராம்) 100 கிராமில் | 0.767 | - |
| சக்தி (கிலோ கலோரியில்) | 383 | 398 |
| உடன் பனஞ்சாறு | விற்றமின் B அதிகம் கொண்டது | - |

அட்டவணைத் தரவிலிருந்த பனை வெல்லத்தில் உள்ள சுக்குரோசின் அளவு கரும்புச் சீனியை விடக் குறைவாக இருப்பதையும் அதில் மேலும் பல சத்துக்கள் (புரதம், கொழுப்பு உட்பட) இருப்பதையும் இவற்றுடன் ஏனைய தாது உப்புக்கள் இருப்பதையும் ஒப்பிட்டறியலாம்.

எதையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்து வாங்கி உண்ணும் பழக்கமுடைய எம்மவர்களுக்காக ஆய்வுகளின் தரவுகளே தரப்பட்டுள்ளன.

இதன் மூலம் பெறப்படும் முடிவு எங்களூர் வளஞ்சார்ந்த பனை வெல்லத்தின் பால் திரும்பியிருக்கும்.

இன்னும் பனையிலிருந்து பெறப்படும் பதநீரைப் பற்றிய தகவல் கீழே தரப்படுகிறது. பதநீரைப் புளிக்கவிடாது போத்தலில் அடைக்கின்றனர்.

இது ஒரு சிறந்த பானம். அதுவும் வெயில் காலத்தை அதிகமாகக் கொண்ட எமது நாட்டில் குறிப்பாக உலர் வலயப் பகுதிகளில் தாகத்தைத் தீர்க்கும் அருமையான குடிபானமாகப் பதநீர் இருப்பதை யாரறிவர். ஆனால் கிராமப்புறங்களில் இந்த அருமை பெருமையை அனைவரும் அறிவர்.

மலிவாக, பதநீரை நொதிக்காது போத்தலிலோ, பக்கற்றுக்களிலோ அடைத்துச் சந்தைப்படுத்த தொழில்நுட்பம் சார்ந்தோர் முன் வர வேண்டும். தொழில் நுட்பத்தின் வழியாகப் பதநீரை மதிப்பேற்றஞ்செய்து பலமான, நல்ல குடிபானத்தை சந்தைப் படுத்தலாம்.



*(வளரும்)*

பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# வேலமர வகைகள் மருத்துவத் தேவைக்குப் பயன்படுபவை

**கருவேலமரம்**

**தாவரவியற் பெயர்:**
Acacia indica (அக்கேசியா இண்டிக்கா)
Acacia arabica (அக்கேசியா அராபிக்கா)
**குடும்பம்:** Mimosoideae (மைமோசோயிடியே)
**சிங்களப் பெயர் :** பபுல
**சமஸ்கிருதப் பெயர்:** பபுல
**ஆங்கிலப் பெயர்:** Babul


வேல் என்பது முருகனின் சக்திமிக்க ஆயுதம். வேலமரமும் மருத்துவச் சக்தி வாய்ந்த ஒரு மூலிகையாகும். ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி'' வேலம்பட்டை மேகத்தை நீக்கும்; ஆலம்பட்டை பித்தத்தை நீக்கும் என்று மருத்துவப் பழமொழிகளுண்டு.

வேலமரத்தில் பலவகை இருந்தாலும் அவற்றுள் கருவேலமரம்,வெள்வேலமரம் என்பன குறிப்பிடத்தக்கவை. உலர் நிலத்தில் வளரக் கூடியவை. மரவகுப்புக்குரியது. கூட்டிலைகள், சிற்றிலைகள் சிறியவை. முட்களுண்டு. பூக்கள் இளமஞ்சள் நிறம். பூந்துணரில் காணப்படும். கனிகள் ஒழுங்கற்றும் தட்டையாகவும் காணப்படும்.

இதன் கொழுந்து, பட்டை, வேர், பிசின் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இலைக்கொழுந்தை அரைத்து மோரில் கலக்கிக் குடித்து வர கழிச்சல், சீதபேதி நீங்கும்.

இலை அல்லது இலைக்கொழுந்தை நீர்விட்டரைத்து நாள்பட்ட புண்களின் மேல் கட்டிவர மாறும்.



**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

இதன் பட்டையை உலர்த்திப் பொடி செய்து அதனால் பல்துலக்கி வர பல்லீறுகளிலிருந்து இரத்தம் வடிதல், பற்சூத்தை, பல்லாடுதல், முரசு கரைதல் என்பன குணமாகும். கருவேலங்குச்சியினால் தினமும் பல்துலக்கி வந்தாலும் இவை மாறும்.

வாய்ப்புண்ணுக்கு வேலம்பட்டையைக் குடிநீர் செய்து வாய் கொப்பளித்துவர மாறும்.

நெஞ்சுச்சளிக்கு வேலம்பட்டைக் குடிநீரை காலை, மாலை 15 மி.லீ அளவில் பருகிவர மாறும்.

தீப்புண்ணுக்கு வேலம்பிசினைப் பொடித்து முட்டை வெண் கருவுடன் சேர்த்துப் பூசிவர மாறும்.

பிசின், வேலம்பட்டை என்பன பெண்களுக்குண்டாகும் பெரும்பாட்டையும் நீக்கும்.

குறிப்பு- கருவேல்,வெள்வேல் என்பன வரட்சியைத் தாங்கி வளரக்கூடியன என்பதால் உலர் நிலங்களில் அதிகம் வளர்க்கப்படுகின்றன.

ஆனால் இவை நன்கு வேரோடி நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து விடுகின்றன என்றும் நிலத்தில் நீர் கிடைக்காவிடின் வளியிலுள்ள அற்ப சொற்ப நீரைக்கூட உறிஞ்சி எடுத்துப் பயன்படுத்துகின்றன என்றும் அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. அதுமட்டுமன்றி இவற்றிலிருந்து பகலில் வெளியாகும் ஒட்சிசனின் அளவும் குறைவாகும்.

எனவே பசுமையுண்டாக்க நடப்படும் இந்த மரங்கள் சூழல் வெப்பத்தையும் பூமியின் வெப்பத்தையும் அதிகரிக்கச் செய்கின்றன என்பதே உண்மையாகும்.

எனவே மூலிகை வளர்ப்போரும் மரம் வளர்ப்போரும் அதிகளவில் வேலமரத்தை நடும்போது இந்த விடயத்தையும் கவனத்திற் கொள்ளவும்.




*(தொடரும்...)*

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 159




அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1.தமிழ் மாதங்களில் ஒன்று
4.பத்தின் மடங்கு
7.வெற்றி பெற்றவருக்கு அணிவிப்பது
9.கணக்குப் பண்ணு
10.வர்த்தகன்
11.வழங்க
12.குழப்பம்
13.ஒரு வாத்தியக் கருவி
15.எம்
16.விண்மீன்
17.குளிர்தல்/குறைதல்
19.சிவனின் மாமன்
21.இடது அல்ல.
22.பகுபத உறுப்பில் ஒன்று
23.வெட்டுதலைக் குறிக்கும்

### மேலிருந்து கீழ்

1.நிகழ்ச்சி
2.குண்டலம்
3.விரயத்தைக் குறைத்தால் இதுவாகும்.
4.நம்
5.வெளிச்ச வேளை
6.துணிந்து செயற்படல்
8.வெண்கல வேலையைக் குறிக்கும் முதற்சொல்
11.சிரி
12.உயிருள்ள விலங்கு
13.சிறு பாய்
14.ஒரு கிரகம்
15.சிறந்தவை
16.ஒத்தாசை
18.பிழை
20.வேகம்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 157 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)உசிதம் (4)பிசகு (7)சாவடி. (8)அந்தாதி (9)வலைப்பந்து. (11)புழுதி. (14)துப்பாக்கி (17)ஆந்தை (18)பொங்கல். (19) வித. (20)கழுகு (21)தின்னாது (22) ஆடி.

### மேலிருந்து கீழ்

(1) உசாவல் (2)சிவலை. (3)தடிப்பு. (4)பிந்து (5)சதா (6)குதிரை (8)அந்திப்பொழுது. (10)பழுது (12)தக்க (13)சந்ததி (15)பாங்கு (16)கில்லாடி (17)ஆவி (20)கனா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 157 இற்கான சரியனவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ஜே.கொலஸ்ரின், கெருடாவில் தெற்கு, பாடசாலை வீதி, தொண்டைமானாறு.

**2 ஆம் பரிசு** ச.மு.நேசன், 207,பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** K.K.வேகாவனம், 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.

**4 ஆம் பரிசு** P.ரதிதேவி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு** வி.அன்ரனிற்றா, 31,புதுவீதி,1 ஆம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம்.

### பாராட்டுப் பெறுவோர்

R. திருவருட்செல்வம்,
பிரதேச வைத்தியசாலை,
வல்வெட்டித்துறை.

சி.சிந்துஜா,
இல.184,பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

மூ.முத்துராசா,
திகிரிலேன், கோள்வை வளவு, தும்பளை,
பருத்தித்துறை.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 159**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 04.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.159 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 08.05.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# ஆச்சி

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பவும் நல்ல தெம்பாத்தான் இருந்தது. என்னைக் கண்டதும் தம்பி உன்னோட நானும் வாறன். ஆச்சி வெளிக்கிட்டுட்டுது.

''தம்பி உதை வைச்சு நாங்கள் பார்கேலாது. எங்களுக்கும் பிள்ளை குட்டியள் இருக்குதுகள். எங்களுக்கென்ன வில்லங்கமோ? நீங்கள் கொண்டு போய் வைச்சுப் பாருங்கோ'' கிழவி போகப் போகுது என்ற சந்தோஷம் கமலம் மாமிக்கு.

ஏற்கனவே என்ரை குடும்பம் பெரியது. அதோட கிழவியைக் கூட்டிக் கொண்டு போக வீட்டை பேசப் போகினம்.

''ஏன்டா ஆச்சியை கூட்டிக் கொண்டு வந்தனி. அதுக்கு எத்தினை சொந்தக்காரர் இருக்கினம். பொடியளும் வெளிநாட்டில இருக்கிறாங்கள். அவையள் வைச்சுப் பாப்பினம்தானே'' அம்மா சொன்னா. கிழவியும் ஒரு இடத்தில நிக்காது. மாறி மாறி எல்லா வீட்டையும் போகோனும் என்று நிக்குது.

ஒரு நாள் ஆச்சியைக் கூட்டிக் கொண்டு போய் சொந்தக்காரர் வீட்டை விட்டுட்டு வந்திட்டன். இரண்டு சங்கிலியும் இரண்டு தோடும் ஒரு மூக்குத்தியும்தான் ஆச்சியோட சொத்து. ஒரு சங்கிலியைச் சொந்தக்காரர் ஆரிட்டையோ குடுத்திட்டுதாம். ஆச்சியை நினைக்க பாவமாய் இருந்தது. நானும் அம்மாவும் ஆச்சியைப் பார்க்கப்போனம். ''ஆரிட்டையோ சங்கிலியைக் கொடுத்திட்டு இஞ்ச வந்து எங்களுக்கு பாரமாய் இருக்குது'' வேலாயுதம் மாமா புறுபுறுத்துக் கொண்டார்.

''இப்ப கிழவியின்ர தெம்பு குறைந்து போச்சு. தற்செயலா படுத்தபடுக்கையாக் கிடந்திட்டா இதை வைச்சு ஆர் பாக்கிறது. பேசாம கொண்டுபோய் முதியோர் இல்லத்தில் விட்டுட்டு வாங்கோ.

கிழவியிட்ட வேண்டுறதை வேண்டிட்டு எல்லோரும் இஞ்ச கொண்டு வந்து தள்ளிட்டுப் போட்டினம்'' எனக்குக் கேட்கத்தான் கூறியிருக்கவேண்டும்.

வீட்டுக்கு எத்தினை பெரிய மனுசங்கள் வாறது. இதை இங்க வைச்சிருந்தா பொடியளுக்குத்தான் மரியாதை இல்லை. குப்பை மனுசி'' பவளம் மாமி பொரிஞ்சு தள்ளினா.

மனிசியின்ர சொல்லைத் தட்டாத வேலாயுதம் மாமா ஆச்சியைக் கொண்டு போய் கைதடி முதியோர் இல்லத்தில் விட்டுட்டு வந்திட்டார். அதுக்குப்பிறகு ஆச்சியைப் பார்க்கவில்லை.

ஒருநாள் கால் முறிந்து ஆச்சியை பெரியாஸ்பத்திரியில விட்டிருந்தினம். தகவலறிந்து பார்க்கப்போனேன். வேலாயுதம் மாமாவும் வந்திருந்தார்.

ஆச்சி மறந்து போச்சுது.

''ஆச்சி என்னைத் தெரியுமோ?'' வடிவாகப் பார்த்தது. ''ஆர் சரசுவின்ர மோனோ?''

மாமா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். ''ஆச்சி உங்களுக்குச் சொந்தமோ?'' டொக்டர் கேட்டார். மாமா தடுமாறிப் போனார். இல்ல... இல்ல அவ வந்து எங்கட ஊரில இருந்தவா''

ஆச்சியை வருத்தம் பார்க்க முதியோர் இல்லத்தால ஒரு பெண்ணை விட்டிருந்தார்கள் ''எல்லாரும் வாறிங்கள், போறிங்கள் ஆச்சியைப் பாக்கிறதுக்கு ஒருத்தருமில்லை. எல்லோரும் தூரத்துச்சொந்தம், பக்கத்து வீடு என்று தான் வாறியள்'' அந்தப் பெண் அங்கலாய்த்தாள்.

நிறையப் பேர் வருத்தம் பார்க்க வந்திருந்தார்கள். எனக்கு அண்டைக்குத்தான் தெரியும் ஆச்சிக்கு இவ்வளவு சொந்தமென்று.

ஆச்சியைக் கடைசியாகப் பார்த்தது பெரியாஸ்பத்திரியிலதான்.

''ஆச்சி எல்லாரையும் கடைசியாப் பாக்கிறதுக்குத்தான் ஆஸ்பத்திரிக்கு வந்ததாக்கும். நல்ல புண்ணியம் செய்தது. அம்மா விதண்டாவாதம் பண்ணிக்கொண்டிருந்தா.

குளித்துவிட்டு அவசரமாக ஆச்சியின்ர உடலையாவது பார்த்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு பஸ் பிடித்து வேகமாகக் கைதடி முதியோர் இல்லத்தை அடைந்தேன்.

இல்லம் மிகவும் சோகமாக இருந்தது. அங்கிருந்த முதியவர்கள் எல்லோரும் எதையோ பறிகொடுத்துவிட்ட உணர்வுடன் காணப்பட்டார்கள்.

அங்கிருந்த ஒருவரிடம் விசாரிச்ச போது ''சவத்த சுடலைக்குக் கொண்டு போட்டினம்'' வேகமாகச் சுடலையை நெருங்கினேன்.

ஆச்சியின்ர தூரத்துச் சொந்தம், கிட்டடிச் சொந்தம் என நிறையப் பேர். எல்லோரும் முகங்களில் சோக ரேகையைப் பதிய விட்டிருந்தார்கள்.

பணியாளர்கள் சவத்தை அடக்கம் செய்வதற்கான அலுவல்களைச் செய்து கொண்டிருந்தார்கள். நான் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றேன்.

''கிழவி நகைகளை ஆரிட்ட கொடுத்துதோ தெரியாது. பவளம் மாமி முனுமுனுப்பது சிறிதாகக் கேட்டது. ''அது இரண்டரைப் பவுண் குண்டுச் சங்கிலியடி'' கிழவியின்ர பேத்தி ராசாத்தி சொல்லிக்கொண்டு நின்றா.

எல்லோருடைய விழிகளிலும் கிழவி யாருடைய பேரில நகைகளை உயில் எழுதியிருக்குதோ? என்ற ஆவல்.

கிழவிக்கு கொள்ளி வைக்க ஆராவது சொந்தக்காரர் இருந்தா வாங்கோ? ஒருத்தர் கூப்பிட்டார். எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றார்கள். மரியாதை அவர்களைத் தடுத்திருக்கவேண்டும்.

முதியோர் இல்லத்தாலேயே ஆச்சியின்ர உடலைத் தீயிட்டு எரித்தார்கள். ஆச்சியின் உடல் தீயில் சங்கமித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் நின்று சாம்பலை வேண்டிக்கொண்டு போங்கோ. எல்லோரும் பின்நகரத் தொடங்கினார்கள். அந்தியேட்டிச் சிலவு வந்திடுமென்றாக்கும்.

''இவ்வளவு சொந்தமிருந்தும் கிழவிக்கு கொள்ளிவைக்க ஆக்களில்லை. அங்குள்ள முதியவர் ஒருவர் கூறிக்கொண்டார்.

என்னால் சிறு பையனாக வேடிக்கை தான் பார்க்க முடிந்தது. எல்லோரும் நகை கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்துடனும் ஏமாற்றத்துடனும் நகர்ந்து கொண்டிருந்தனர்.

தம்பி ஆச்சி எல்லாரையும் மறந்து போச்சுது. நகையெல்லாம் எங்களிட்ட தான் கிடக்குது. கிழவி தரும்போது ஒன்றும் சொல்லவில்லை. இப்ப நகையைக் காட்டினால் உவைக்குள்ள சண்டை வரும்போல கிடந்திச்சு. சனிப்பிணம் தனியாச் செல்லாது. சிலவேளை கிழவி ஆரையாவது கூட்டிக்கொண்டு போகும்'' நக்கலாகக் கூறினார் இல்லத்துப் பொறுப்பதிகாரி.

''கிழவி பிள்ளைகள் இல்லாமத் தான் இங்கு வந்தது. ஆனால் இவர்கள் பிள்ளைகள் இருந்தும் நிச்சயம் இங்க வருவார்கள்'' கூறிக்கொண்டு 'அப்ப நகையளை என்ன செய்ய'' கேட்டார். நானென்ன சொல்ல முடியும். ஆச்சியின்ர பெயரில இல்லத்துக்குப் பயன்படுமாறு ஏதாவது செய்யுங்கோ''

இவைகளைக் கூறும் போதுதான் எனக்கு நினைப்புவந்தது. ஊருக்கு விட்டா ஆச்சியின்ர காணிக்குக் கட்டாயம் சண்டை பிடிப்பினம்.

முதியோர் இல்லம் முன்பை விட மிகவும் கம்பீரமாகவும் பெருமையாகவும் காட்சியளித்தது. எதிர்காலத்தில் இவர்களுக்கும் அடைக்கலம் கொடுக்கப் போகின்றேன் என்னும் பெருமையுடன். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 16

# தாய்ப்பாலின் மகத்துவம்

பெண் கர்ப்பமானது முதற் கொண்டு தனது குழந்தைக்கு பாலூட்ட வேண்டும் என்ற உணர்வும் முனைப்படையத் தொடங்குகிறது. இதற்கேற்ப அந்தப் பெண் தனது உடலையும் தயார் செய்து கொள்கிறாள்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் திருமணம் செய்து குழந்தை பெற்றுக் கொள்வதில் காணப்படும் உத்வேகமும் அவசரமும் குழந்தைக்குத் தாய்ப் பாலூட்ட வேண்டும் என்பதில் காணப்படுவ தில்லை.

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் மிகவும் முக்கியமானது அனேகமான தாய்மார்கள் தமக்குப் பால் சுரப்பதில்லை அல்லது அதன் சுரப்பு குறைவாகக் காணப்படுகிறது எனக் காரணம் கூறுகின்றார்கள்.

இது கூடுதலாக அவர்களின் மனோநிலையுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். தனது குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும் என்ற உள்ளார்ந்த உணர்வு எழும்போது இயல்பாகவே தாய்ப்பாலின் சுரப்பு கூடுகிறது.

இலங்கையில் தாய்மார் தாய்ப்பால் பற்றிய சிறந்த அறிவு நிறைந்தவர்களாக இருப்பினும் இது போன்ற நிலைமை ஏற்பட பாலூட்டலின் போது அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு இன்மையே காரணம்.

இலங்கையில் தற்போது பால்மாவின் விலை அதிகரித்துச் செல்கிறது. குழந்தைகளுக்கான செயற்கைப் பால்மாக்களின் விளம்பரமும் அதிகரித்துள்ளது.

இதற்கு முக்கியமான காரணம் செய்றகைப் பால்மா வகைகளை நாடும் தாய்மாரின் எண்ணிக்கை கூடியிருப்பதாகும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி 2 மாதங்கள் நிறைவடையும் போது தாய்ப்பால் மட்டும் கொடுப்பவர் 33 வீதமாகவும் அதே நேரத்தில் 6 மாதங்களாகும் வரை தாய்ப்பால் கொடுப்பவர்கள் 6-7 வீதத்தால் குறைவடைவதாகவும் வேறுவகைப் பால் மாவினை நாடுபவர்கள் 9.5 வீதமாக அதிகரிப்பதாகவும் மதிப்பிட்டப்படுள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும்.

குழந்தை மார்பகத்தில் பாலை உறிஞ்சும் போது தான் பால் சுரப்பதற்குரிய ஹோர்மோன் மூளையில் உருவாகும் வீதம் அதிகரிக்கப்படுகின்றது.

எனவே குழந்தையை அன்புடன் அரவணைத்து ஆர்வத்துடனும் நல்ல மனநிலையுடனும் பாலூட்டும் போது இயற்கையாகவே பால்சுரப்பு அதிகரிக்கின்றது.

மேலும் குழந்தைக்கு பாலூட்டும்போது குழந்தையை முலைக்காம்புடன் சரியான முறையில் நிலைப்படுத்தாமையினால் முலைக்காம்பு மட்டும் உட்செல்கின்றது.

அதனைச் சுற்றிக் காணப்படும் கருமை நிறமான பகுதியை குழந்தையின் வாய் மூடியிருப்பதில்லை.

இதனால் குழந்தையின்' வாய் மார்பகத்துடன் சரியான பொருத்தப்பாட்டை ஏற்படுத்தாது. இதனால் குழந்தையால் சரியான முறையில் பாலை உறிஞ்ச முடியாமல் போகிறது.

பாலூட்டும் தாய்மார் இதனைக் கருத்திலெடுத்து குழந்தையை மார்போடு சரியான முறையில் நிலைப்படுத்தல் வேண்டும்.

குழந்தை பால் குடிக்கும்போது அழுவதற்குக் காரணம் பால் போதாமை மட்டும் அல்ல தாயிடம் ஏற்படும் மாற்றத்தினாலுமாகும்.

தாய்ப்பால் ஊட்டும் தாய்மார் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டும். என்னால் என்னுடைய குழந்தைக்கு 6 மாத காலம்வரை பாலூட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையே அவர்களுக்கு வெற்றிகரமான பாலூட்டலுக்கு அடிப்படையாகும்.

குழந்தை நோயுற்ற வேளையிலும் தொடர்ந்து தாய்ப்பால் கொடுத்தல் வேண்டும். தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம் குழந்தைக்கு வேண்டிய நோய் எதிர்ப்பு சக்தியும் கிடைக்கின்றது.

சில சமயங்களில் தாயின் முலைக்காம்பில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முலைக் காம்புகளில் நோ, கட்டிகள், சீழ் வடிதல் போன்ற நிலைமைகளும் முலைக்காம்பு உள்நோக்கியும் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் வேலைக்குச் செல்லும் தாய்மாரின் எண்ணிக்கை அதிகம். இவர்களுக்குத் தாய்ப் பால் ஊட்ட போதிய நேரம் கிடைப்பதில்லை.

இது ஒரு பொருத்தமற்ற கருத்தாகும். மனமுண்டானால் இடமுண்டு என்பார்கள். தற்போது வேலை செய்யும் தாய்மாருக்கு சம்பளத்துடன் கூடிய 84 நாள்கள் விடுமுறையும் தேவையைப் பொறுத்து மேலும் ஒரு 84 நாள்களுக்கு அரைச் சம்பளத்துடனும் விடுமுறை வழங்கப்படுகிறது. எனவே இவர்கள் தாராளமாகக் குழந்தைக்கு பாலூட்டலாம்.

கோ.நந்தகுமார்,
விரிவுரையாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

தாய்ப்பாலை அறை வெப்பநிலையில் 4 மணித்தியா லம் வரையும் குளிர் சாதனப் பெட்டியினுள் 24 மணித்தியாலங்களும் பழுதாகாமல் வைத்துக் கொள்ளலாம்.

வேலைப்பளு கூடிய இன்றைய காலகட்டத்தில் தாய்ப்பால் கொடுக்கும் பெண்ணுக்கு கணவனும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் உதவுதல் வேண்டும்.

தாய்ப்பாலை மாப்பாலுடன் (புட்டிப் பாலுடன்) ஒப்பிட்டு நோக்கும்போது தாய்பாலின் மகத்துவத்தை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

(வளரும்)

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# எடை காத்து நலன் பேணுங்கள்

ஒருவரின் உடல் எடை அதிகரிப்பதற்கும் பருமன் ஆவதற்கும் பல காரணங்கள் உள்ளன. அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கும் உணவு முறை மாற்றம் உடற்பயிற்சி, வாழ்க்கை முறை மாற்றங்கள் என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்த மூன்று செயற் பாட்டையும் இணைத்துச் செயற்படுத்துவதன் மூலம் கூடுதல் பலன் அடையலாம் என்று அறியப்படுகின்றது.

ஒருவரின் எடை அதிகமாயினும் அவர் ஒழுங்காக உடற்பயிற்சியில் ஈடுபடுவாராயின் அவர் நோயுறுவதற்கான வாய்ப்பு குறைக்கப்படுகின்றது. அத்துடன் ஆகக்கூடியது 10 சதவீதம் வரைக்கும் அவரது நிறையில் எடைகுறைப்புக்கு உடற்பயிற்சி உதவுகின்றது. எனினும் களைப்பு, இளைப்பு, உடல்வலி போன்றவை தடுக்கப்படுகின்றன.

எனவே, சுலபமான உடற் பயிற்சிகளில் இருந்து ஆரம்பிக்கவேண்டும். இதய சம்பந்தமான நோய்கள் இருப்பின் வைத்திய ஆலோசனை பெறுவது நலம்.

சில எளிமையான உடற்பயிற்சிகளான வீட்டு தோட்டம் செய்தல், துரித நடை, யோகாசனங்கள், டெனிஸ் விளையாட்டு, மேசைப் பந்தாட்டம் சைக்கிள் ஓட்டம், நீந்துதல், நடனம் இவை தொடர்ச்சியாக குறிப்பிட்ட நேரம் செய்வது சிறந்தது என ஆய்வில் அறியப்பட்டுள்ளது. உடற்பயிற்சியின் முன்னரும் பின்னரும் தண்ணீர் அளவாக அருந்துதல் நல்லது. உணவு உட்கொண்ட பின்பு உடற்பயிற்சியைத் (கடுமையான) தவிர்த்தல் நலம்.

உடற்பயிற்சியின்போது குருதிச் சுற்றோட்டம் அதிகரிக்கின்றது. உடற் கலங்களுக்குக் கூடுதல் குருதி விநியோகம் கிடைக்கின்றது. அத்துடன் உடலில் வயிற்றுபுற, இடுப்பு, தொடைப்பகுதி போன்றவற்றில் உள்ள மேலதிக கொழுப்புக்கள் எரிக்கப்பட்டு உங்கள் உடல் அழகிழந்து போகாமல் மெலிவதற்கு உதவுகின்றது. உணவுக் கட்டுப்பாட்டுடன் கூடிய உடற்பயிற்சியானது இழந்த உடல் எடை மீண்டும் அதிகரிக்காது தடுப்பதற்கு உதவுகின்றது.

உங்கள் தொழிலானது உடல் உழைப்பு அற்றதாகவும் இருந்து வேலை செய்யும் நிலையும் உங்களுக்கு இருப்பின் ஏனைய நேரத்தை நீங்கள் உடல் உழைப்புக்கு கொடுத்தல் அவசியம். அதாவது வீட்டுத் தோட்டம், நடைப்பயிற்சி, விளையாட்டுகளில் ஈடுபடுதல், உங்கள் உடல் நிலைக்கு ஏற்ப ஏதாவது முயற்சியில் ஈடுபடுதல் அவசியம்.

உணவைப் பற்றிய கருத்துக்கள் பாரம்பரிய உணவு பழக்கங்கள் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான உணவு உள்ளெடுக்கும் கொள்ளவு உண்டு.

உணவு ஒவ்வொரு உயிரினத்துக்கும் அவசியமானது. உயிரே உணவு எனலாம். அவ்வளவுக்கு உணவு மனிதனுக்கு முக்கியமானது. எமது உடற்தொழிற்பாடு மற்றும் தினமும் நாம் செய்கின்ற வேலை, உடற் கலங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் இளவயதில் உடல் வளர்ச்சிக்கும் என இப்படி உணவின் தேவைகளை எழுதிக் கொண்டே போகலாம்.

மேற்கூறிய தேவைகளுக்கு ஏற்ப எமது உணவு முறை இருக்கிறதா? இன்று வீடுகளில் பாரம்பரிய உணவுப் பழக்கங்கள் மாறி மேலைநாட்டு உணவு முறைகள் புகுந்துவிட்டன. எமது உணவில் கோதுமை மா, இனிப்பு, நன்கு தீட்டப்பட்ட தானியங்கள், எண்ணெய்ப் பதார்த்தங்கள் முக்கிய இடத்தைப் பிடித்தும் விட்டன. இத்தகைய உணவுகள் நிறைந்த [illegible] நல்ல சுவையை [illegible] அத்துடன் விரைவாகச் சமிபாடு அடையும். மீண்டும் பசி எடுக்கும். எனவே மீண்டும் உண்ண நேரிடும். எனவே எமது எடை அதிகரிக்கவே செய்கின்றது.

எமக்குச் சக்தி தேவையானது. எமது நிறை தொழில், வயது, பால், வாழும் பிரதேசத்தின் சுவாத்திய நிலை போன்றவற்றில் தங்கியுள்ளது. கடின வேலை செய்வோர், இளம் பிராயத்தினர், பாலூட்டும் தாய்மார், குளிர்ப் பிரதேசங்களில் வேலை செய்வோர் போன்ற வர்களுக்குக் கூடுதல் சக்தி தேவை. ஒருவர் எடை யைக் குறைப்பதற்காக உணவின் அளவைக் குறைப்பது என்பது தவறானது, கலோரிப் பெறுமானம் குறைந்த நார்ப் பொருள்களை அதிகம் உண்ண வேண்டும். உண்ணும் உணவில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பொரித்த உணவுகளைத் தவிர்த்து ஆவியில் சமைத்துச் சாப்பிடுதல் சிறந்தது. அளவுக்கு அதிகமாக எந்த உணவையும் உண்ண வேண்டாம். உயிர்ப்புடைய காய் கறிகள், தானியங்கள், பழங்கள், கீரை வகைகள், இயற்கையாக உண்ணக்கூடிய உணவுகள், குறைந்தளவு கொழும்பு ஓரளவு புரதம் உள்ள உணவாக உங்களது உணவுத் தேர்வு அமைதல் சிறந்தது.

ச.சுதாகரன், தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை

தேவைக்கு அதிகமான புரத உணவை உண்பதும் அவசிய மற்றவையாகும். ஏனெனில் மேலதிக புரதமும் எமது உடலில் சேமித்து வைக்கப்படுவதில்லை. மேலதிகமாக எடுக்கப்படும் புரதமானது உடலில் சில இரசாயன மாற்றங்கள் அடைந்து கழிவுப் பொருள்களாக வீணே வெளியேறுகின்றது. எனவே முட்டை, பால், இறைச்சி, மீன் போன்ற புரதம் செறிந்த உணவுகளைத் தேவைக்கு அதிகமாக உண்பது அவசியம் அற்ற

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்தல் 7

# ஒரு கண்ணோட்டம்

கற்றல் எவ்வாறு நடைபெறலாம் என்று விதிகளும் ஆய்வுகளும் வரைவிலக்கணங்கள் கூறலாமே தவிர, இப்படித்தான் கற்க வேண்டும் அல்லது இவ்வாறுதான் கற்றல் நடைபெற வேண்டுமென வரையறுத்துக் கூற முடியாது. ஏனெனில் கற்றல் முறைமை ஆளுக்காள் வேறுபடக் கூடியது. இதனை நாம் ஏற்கனவே அவதானித்துள்ளோம்.

பிரான்சிஸ் பிளசன்ற் றொபின்சன் என்போர் நீண்ட காலமாக மாணவர்களுடைய கற்றல் பழக்கத்தினை ஊக்குவிப்பதற்கு வழிகாட்டியவர். அவர் தாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கற்றலில் ஞாபகத்தை வளர்த்துக் கொள்வதற்கான நுட்பமுறை ஒன்றினை அறிமுகம் செய்தார். அதனை ஒரு சூத்திர அமைப்பில் தந்தார்.

அது சக்தி வாய்ந்த வெற்றிகரமான கற்றலுக்கான ஐந்து படிகள் என்று அழைக்கப்பட்டது. அதற்காக றொபின்சன் தந்த சூத்திரம் பின்வருமாறு;

SQ 3 R

$$SQ3R = SQR_1R_2R_3$$

அதனை Survey Q3R என்றும் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. அவற்றின் விவரத்தை இங்கு நோக்குவோம்.

S- Survey - அளவிடல்/ கண்ணோட்டமிடல்

Q- Question - வினவுதல்

$R_1$ - Read- வாசித்தல்/ படித்தல்

$R_2$ - Recite - ஒப்புவித்தல்/ மீட்டுச் செய்தல்.

$R_3$ - Review - மீள நோக்கல்.

இந்த முறை பலகாலமாக வழக்கில் இருந்து வருகின்றது. அண்மையில் தேவை கருதி இவற்றுடன் இன்னுமொரு R சேர்க்கப் பட்டுள்ளது. அதன்படி SQ4R என்று அது அழைக்கப்பட்டு வருகின்றது.

$R_4$ - Ref Lect - தெறித்தல்.

என்று பொருள் கொண்டு விளக்கப்படுகின்றது. இவை ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது நோக்குவோம். அவற்றைத் தெரிந்து கொள்வதும், வாசிப்பதன் மூலம் வாசிப்பின் ஊடான கற்றல் வெற்றியைத் தொட்டுக் கொள்வதற்கு உதவியாக அமையலாம்.

**மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் மேம்பட வேண்டும்**

### வினை வாசிப்பதற்கு முன்னர்:

### S- Survey அளவிடல்/ கண்ணோட்டமிடல்

*ஒரு பிரயாணத்தின் முன்னர் தேசப்படம் பார்த்து பாதை, இடம் அறிதல் போன்றது.

*நூலின் பெயர், தலைப்புக்கள், உபதலைப்புக்களைப் பார்வையிட்டுக் கொள்ளுங்கள்.

*நூலின்அளவு,பக்கங்களின்எண்ணிக்கையைத் தெரிந்துகொள்ளுங்கள். அங்குள்ள படங்கள், வரைபுகள், அட்டவணைகள் மீது கண்ணோட்டமிடுங்கள், அவற்றுக்கடியில் எழுதப்பட்டவற்றை வாசியுங்கள். முகவுரை, ஆசிரியர் உரை என்பவற்றை வாசித்து நூலின் நோக்கம் அறிந்து கொள்ளுங்கள்.

*வினாக்கள், முடிவுரை அல்லது நிறைவுரையை வாசித்துக் கொள்ளுங்கள்.

### அளவிடலின்போது தோன்றக்கூடியவை- வினவுதல்

*தலைப்புக்கள், உப தலைப்புக்களை வினாக்களாக மாற்றுங்கள்

*நூலில் உள்ள வினாக்களை வாசியுங்கள்.

*நூலுடன் வினாக்களைக் கேட்டு உரையாடிய வண்ணம் அவதானியுங்கள்.

*அங்குள்ள விடயங்கள் பற்றி உமக்குத் தெரியுமா? என்ன தெரியும்? எவ்வளவு தெரியும்? என்று கேளுங்கள். அவ்வினாக்கள் உமக்கு உதவும் என்றால் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

### கற்றலை ஆரம்பிக்க - வாசித்தல்/ படித்தல்

*அளவீட்டின்போது அறிந்தவற்றின் விரிவினை வாசித்துக் கொள்ளுங்கள்.

*வாசிக்கும்போது குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

*முன்பு தயாரித்த வினாக்களுக்கு விடை காணுங்கள்.

*படங்கள், வரைபுகள் போன்றவற்றின் கீழ் உள்ள விவரங்களைத் திரும்ப வாசியுங்கள்.

*அடிக்கோடிட்ட, தடித்த எழுத்திலான விடயங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

*விளக்கமில்லாத அல்லது கஷ்டமான இடங்களில் நிறுத்தித் திரும்ப வாசியுங்கள்.

*கஷ்டமான அல்லது புதிய விடயங்களில் வேகத்தைக் குறைத்து வாசியுங்கள்.

*வினாக்களுக்கான விடைகளை வாசிக்கும்போது எழுதிக் கொள்ளுங்கள்.

*வாசிப்பதை அடிக்கடி நிறுத்தி,

1. நான் வாசிப்பதை விளங்கிக் கொள்கின்றேன்.
2. என்னால் அதை ஞாபகப்படுத்த முடியுமா? என்று கேட்டுக் கொள்ளுங்கள்.

### வாசித்து முடித்தபின் - ஒப்புவித்தல்/ மீட்டுச் செய்தல்.

*வாசித்துக் கிரகித்து நீண்டகால ஞாபகத்தில் வைப்பிட்டவையை மீட்டெடுத்துப் பயன்படுத்தல் இது.

*இதுவே கற்றலில் இருதயம் போன்றது.

*கேள்விகளுக்கான விடைகளை மீட்டெடுத்துச் சொந்த நடையில் ஒப்புவித்துக் கொள்ளுங்கள்.

*அடிக்கோடிட்ட, தடித்த எழுத்திலிருந்த விடயங்களை மீட்டுக் கொள்ளுங்கள். பரீட்சைகளின் போதும், ஒப்படைகள் சமர்ப்பிக்கும்போதும் இது அவசியம்.

*வாசித்தலைவிடக் குறைந்தளவு நேரமே இதற்குத் தேவையானது.

*பரீட்சைக்குத் தயாராகும்போது மீட்டலுக்குக் கூடிய நேரத்தை ஒதுக்குங்கள்.

*மொத்தக் கற்றல் நேரத்தில் 20வீதத்தை மீட்டுச் செய்தலுக்கு ஒதுக்கலாம்.

*வாசிக்கும்போது அடிக்கடி மீட்டுக் கொள்ளல்.

*தவறுகள் திருத்தப்படல் லேசானது. வாசித்தவற்றின் சாரம்சத்தை மீட்டெடுத்து சொந்த நடையில் எழுதுங்கள்.

### மீள நோக்கல்

*எல்லா மாணவர்களும் பரீட்சைக்குமுன் இதைச் செய்து கொள்வர்/ கொள்ள வேண்டும்.

*வாசித்து முடித்தபின் தொடர்ந்து செய்து வருதல் பயனுடையது.

*ஒருநாளில் செய்து முடிக்கும் காரியமல்ல.அது தொடர் செயல் நிலை கொண்டது, கற்க வேண்டியவற்றில் எதையும் தவறவிடவில்லை என்பதை உறுதி செய்தலே இந்தச் செயற்பாடு, தவறவிட்டிருப்பின் கற்றுக்கொள்ள அது உதவும்.

*பாடங்களில் அறிந்தவற்றை உறுதி செய்து கொள்ள முடியும்.

*படித்து முடிந்தவுடனான மீளநோக்கலுக்கும் பரீட்சைக்கு முந்திய கடைசி மீளநோக்கலுக்குமிடையே குறைந்தது இரண்டு அல்லது மூன்று தடவைகள் மீள நோக்கலாம்.

*தேவையேற்படின் இந்த அளவினை அதிகரிக்கலாம்.

*தொடர் மீளநோக்கல், பரீட்சைக்கும் பாண்டித்தியக் கற்றலுக்கும் உதவும்.


*கற்றலுக்கான நேர அட்டவணையில் மீளநோக்கலுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தயாரியுங்கள்.



கலாநிதி **தி.கமலநாதன்,**
முன்னாள் பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

# செங்கடல்

**விமர்சனம்**




அன்றாட வாழ்வை நகர்த்துவதற்கு ஆழ் கடல் என்று பாராமல் படகேறிச் சென்று மீன்பிடித்து வரும் தனுஷ்கோடி மீனவர்களுக்கு அன்றாடம் இடம்பெறும் துயரச் சம்பவங்கள் முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே செல்வதையும் ஈழத்தில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் தனுஷ்கோடிக் கரையேறும் ஈழத்து அகதிகளின் துயரங்களையும் பதிவு செய்து செங்கடல் திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் நல்வாழ்வுக்காகப் போராடும் குப்புசாமி, தனுஷ்கோடி கரையொதுங்கும் ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவிக்கரம் நீட்டி முகாமுக்கு வழி நடத்தும் தொண்டு நிறுவன ரோஸ்மேரி, யுத்தத்தாலும் துரத்தும் மரணங்களாலும் உருக்குலைந்து கிறுக்கனான ஈழ அகதி சூரி, பள்ளிக்குச் செல்ல மனமில்லாமல் கடற்கரை உயிரினங்களுடன் ஓடித்திரியும் சிறுவர்கள் என வாழ்வுணர்த்தும் துடிப்புகளும் இந்தத் திரைப்படத்தில் பதிவாகியுள்ளன. படத்தில் இராமேஸ்வர மீனவர்கள், கிடாத் திருக்கை கிராமக் கூத்துக் கலைஞர்கள், நாடகக் குழுக்களின் நடிகர்கள், எழுத்தாளர்கள் என ஒரு கூட்டியக்கம் சாத்தியப்பட்டிருக்கிறது. முக்கியமாக கம்பிப்பாடு மீனவர் சமூகம் ஒட்டுமொத்த தயாரிப்பிலும் பங்கு கொண்டிருக்கிறது. பல கட்டுப்பாடுகளுக்கு இடையிலும் மண்டபம் முகாம் ஈழத்து அகதிகளும் கடலிலும், சுடுமணலிலும் கூட இந்தப் படத்தில் நடித்திருக்கிறார்கள்.

ஓலமிடும் கடல் முழக்கங்களுக்கு இடையே இச் செங்கடல் திரைப்படம் மரணம் துரத்திக் கொண்டிருக்கும் வலிகள் நிறைந்த ஒரு உண்மை வாழ்வை அதன் பல்வேறு முகங்களுடன் பதிவு மிகைப்படுத்தவோ, உணர்ச்சி மயமாக்கவோ இன்றிப் பதிவு செய்துள்ளது. லீனா மணி மேகலையின் இயக்கத்தில் எழுத்தாளர் ஷோபா சக்தி நடிகராகவும் கதை வசன கர்த்தாவாகவும் ஒரு சிறப்பினை கலைப் பங்களிப்பு செய்துள்ளனர். தன்னுடைய வழக்கமான பிற்போக்குப் பார்வையுடைய சென்ஸார் போர்ட்டு இந்தப் படத்துக்கு அனுமதி மறுத்துள்ளமை ஒரு தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுப் போராட்ட பிரச்சினையை குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும். 1964 இல் ஆழிப் பேரலையால் நிர்மூலமாக்கப்பட்ட தனுஷ்கோடிக் கிராமம் கம்பிப்பாடு தனது சிதைவுகளுடனும் மண்ணின் மீனவக் குடும்பங்களுடனும் இன்னும் வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் மீன்பிடித் தொழிலைத்தவிர வேறு எதனையும் அறியாத அந்த மக்கள் பரம்பரைத் தொழிலினைவிட்டு விடமுடியாமல் உயிரைப் பணயம் வைத்து ஒருபிடி உணவுக்காகக் கடலில் இறங்குகிறார்கள். கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது விடுதலைப்புலி என்றோ, கடத்தல்காரர்கள் என்றோ, உளவாளி என்றோ இலங்கைக் கடற்படையால் அடித்துத் துன்புறுத்தியோ, கொல்லப்பட்டோ, கொள்ளையடிக்கப்பட்டோ இருப்பது அன்றாட நிகழ்வாக இருக்கிறது. புயலுக்கும், மழைக்கும் போலவே குண்டடிகளுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் அஞ்சாமல்தான் மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. கடல் வழியே ஈழத்து அகதிகள் வந்து நிறைந்த இடமாக இருக்கிறது. நம்பிக்கை குறைந்த நிலையிலும் தங்கள் குடும்பங்களுக்காகத் தங்கள் உயிரைத் தக்க வைத்துக்கொள்ள போராடும் அந்த மீனவர்கள் பற்றிய ஈழத்து அகதிகளின் வாழ்க்கை அதிகார வர்க்கத்தின் அசட்டையினாலும் கடற்படை மற்றும் காவற்படையின் கண்காணிப்பினாலும் இழைக்கப்படும் அவமானங்கள் மேலும் மாசுப்டுத்தப்பட்டு இருப்பதை இந்தப் படம் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறது.

மீன்பிடிக்க படகில் ஏறாதபோது பசி இவர்கள் வாழ்வில் என்ன பாடுபடுத்தும் என்று யாருமே நினைத்ததில்லை. உயிருடன் திரும்புவோமா என்று தெரியாமல் கடலில் சென்று வரும்போது நாளாந்தம் இடம்பெறும் சம்பவங்களை யாரால் தடுக்க முடியும் என்று ஏங்கும் அந்த மக்களின் பழிக்கு ஆளாகும் இந்திய அதிகாரிகளையும் சாரும் இந்தப்படம் வெளியேவரின் எத்தனை பேரின் முகத்திரை கிழியும் என்பது உண்மை. ஏப்ரல் மாதம் கடைசிப் பகுதியில் நோர்வேயில் நடைபெறும் திரைப்பட விழாவில் இந்தப்படம் திரையிடப்படவுள்ளது. 500 இற்கும் மேற்பட்ட தனுஷ்கோடி மீனவர்களின் உயிரைக் கொடுத்தும் பல ஆயிரக்கணக்கில் ஈழத்தமிழர்களின் உயிரைக்கொடுத்தும் - இன்னும் முடியாத விடிவில்லாத தமிழர்களின் சோக வரலாறினை செங்கடல் திரைப்படமாக எடுக்கத் துணிந்த இயக்குநருக்கு நோர்வேயில் இடம்பெறும் திரைப்பட விழாவில் பாராட்டுக் கிடைக்கும் என்பதைவிட கவனப்படுத்திய பெருமை இவரையே சாரும் என்பது உண்மை. உப்புக்காற்று குடித்துக் குடித்து உடல் முழுவதும் நனைந்து நனைந்து ஊறிப் போன கடலில் எம்மை எவராலும் பிரிக்க முடியாதபடி இந்த இயற்கை அமைந்திருப்பதை எவராலும் பார்க்க முடியாத கோணத்தில் நீலக்கடல், செங்கடல் ஆனதை வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறார். இந்திய அரச அதிகாரிகளுக்கு இந்தப் படம் தெட்டத்தெளிவான ஒரு கருத்தைச் சொல்லவுள்ளதால் மறைவிடமாகவுள்ள அதிகாரிகளின் செயற்பாடுகள் இந்தப் படத்தின் மூலம் கண்டிப்பான தேடலை, புரிதலை உண்டு பண்ணும் என்பது உண்மை.

- குமார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குள்ளும் வந்து விட்டார் புத்தபெருமான்...?

ஆட்டைக் கடிச்சு, மாட்டைக்கடிச்சு, கடைசியா மனிசனைக் கடிக்கிற நிலை மாதிரி இப்போ யாழ்ப்பாணத்தின் நிலவரம் இருக்கி றது. அரச மரங்கள் எங்கெல் லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் முளைத்து- அரசாட்சி புரிகின்ற புத்தபெருமான் இப்போ நம்ம வீட்டுக்குள்ளேயும் வந்திட்டார்.

யுத்தம் முடிவடைந்து 3 வருடங்களை எட்டியுள்ள நிலையில் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பூமியெங்கும் ஒருவிதமான மாயை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வடக்கு- கிழக்கு தமிழர்களுடைய பூர்வீக நிலமாக இருக்கக்கூடாது என்கின்ற எண்ணத்தைத் தோற்றுவித்து விதைப்புகள், சிதைப்புகள் எனப் பல்வேறு கைங்கரியங்களை "வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மெல்ல மெல்லக் காரியங்கள் ஏதோ ஒரு திரை மறைவான காரணங்களுடன் நடைபெறுகின்றன.

சிங்களக் குடியேற்றம், இரவோடு இரவாக நாவற்குழியில் நாசுக்காக நடந்தேறியது. அது பற்றிய கதைகள் எதிர்ப்புக்கள், விமர்சனங்கள் எல்லாம் காற்றோடு காற்றாகப் போய்விட்டன. அங்கு நிரந்தரமாகவே சிங்கள மக்கள் குடியேறிவிட்டார்கள். படையப்பா படத்தில் சூப்பர் ஸ்ரார் ரஜனி சொன்னது போல் "கதம் கதம்" ஆகிவிட்டது அந்தக் குடியேற்றம்.

அது ஒரு விதமான விதைப்பு. எதிர்காலத்தில் நாவற்குழியில் சிங்கள மக்கள் தொன்றுதொட்டு வாழ்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கு ஏதுவான சான்று.

இதைவிட எமது பாரம்பரிய அடையாளச் சின்னங்கள் கலை, கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கின்ற சான்றுகளைத் திட்டமிட்ட முறையில் சிதைப்பது.......?

இது இன்னொரு புறமிருக்க புத்த பெருமானைப் பார்க்குமிடமெங்கும் நீக்கமற அமர்த்துவதற்கு பௌத்த கோயில்கள் அமைப்பதற்கு பல்வேறு வழி களில் முயற்சிகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன.

வலி. வடக்குப் பகுதியில் மக்கள் மீள் குடியமர குறிப்பிட்ட இடங்களில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பெரியளவில் வருவாயைத் தருகின்ற வளம் கொழிக்கும் காங்கேசன்துறை, மாவிட்டபுரம், பலாலி, மயிலிட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் இதுவரைக்கும் மக்கள் மீள் குடியமர அனுமதி வழங்கப்படவில்லை.

ஆனால் அந்தப் குதிகளில் புத்தபெருமான் தாராளமாகக் குடியேறிவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆக "வலி.வடக்கு தமிழர்களுடைய பூர்வீக நிலமல்ல. இது சிங்கள மக்களுக்கும் சொந்தமானது. அதற்குச் சான்றுகளாக இங்கே பாருங்கள் ஏராளமான பௌத்த விகாரைகள் இருக்கிறன" என்று எதிர்காலத்தில் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.



தனது வீட்டு வளவுக்குள் விகாரைகட்ட அனுமதித்த உடுவில் கிழக்கைச் சேர்ந்த பயனாளிக்கு தமிழ் பௌத்த சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் அ.ரவிக்குமார் ஊக்குவிப்புப் பணமாக 10ஆயிரம் ரூபா நிதியை கையளிக்கின்றார்.

இராணுவக் காவலரண்கள் உள்ள இடங்களிலும், அரச மரங்கள் பரந்து நிற்கும் பகுதிகளிலும் புத்தர்சிலை முளைத்திருக்கிறது. இத்தோடு பௌத்த தர்மத்தைப் போதிக்க தர்மப் பாடசாலைகளை நிறுவிக் கொள்ளவும் முயற்சிகள் திட்டமிட்ட முறையில் நடந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய திட்டங்களை சிறந்த முறையில் தண்ணீருக்குள்ளாலேயே நெருப்பைக் கொண்டு செல்வதுபோல நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய திட்டங்களை நகர்த்துவதற்கு ஏதுவான காரணியாகக் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் செத்துப் போய்விட்ட தமிழ், பௌத்த சங்கத்துக்குப் புத்துயிர் கொடுத்துள்ளார்கள்.

புத்துயிர் பெற்ற அந்தச் சங்கம் இப்போது யாழ்ப்பாண மக்களுடன் சங்கமமாகத் தொடங்கிவிட்டது. வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் மெதுவாகக் களமிறங்கித் தமது இலக்கை நிறைவேற்ற தளமொன்றை உருவாக்கி விட்டார்கள்.

உடுவில் கிழக்கில் 3 பயனாளிகள், நயினாதீவில் 2 பயனாளிகள் என்று முதற்கட்ட நடவடிக்கையை ஆரம்பித்து விட்டார்கள் தமிழ், பௌத்த சங்கத்தினர். நாகவிகாரையின் தேரர், கந்தரோடை விகாரையின் தேரர், தமிழ், பௌத்த சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் அ. ரவிக்குமார் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் பயனாளிகளுடைய வீடுகளுக்குச் சென்று இதுவரை 3 பயனாளிகளுக்கு வீடமைப்புக்கான அடிக்கல்லை சம்பிரதாய பூர்வமாக நட்டு வைத்துள்ளனர்.

இதில் உடுவில் கிழக்கைச் சேர்ந்த ச.அதிஷ்டராசா என்ற பயனாளி தனக்குக் கிடைத்திருக்கும் வீட்டுத்திட்ட அதிஷ்டத்தின் பிரதி உபகாரமாகத் தான் குடியிருக்கும் 3 பரப்புக் காணிக்குள் பௌத்த கோயில் ஒன்றைக் கட்டுவதற்கு தமிழ், பௌத்த சங்கத்தினரிடம் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது சம்மதம் கிடைத்தவுடன் பௌத்த சங்கத்தின் தலைவர் ரவிக்குமார் அவ்ரது மனப்பாங்கினைப் பாராட்டி 10 ஆயிரம் ரூபா நிதியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அப்பாடா ஊக்குவிப்பின் உத்வேகத்தைப் பார்த்தீர்களா? சோழியன் குடும்பி சும்மா ஆடுமா?

தனக்கு வீடு கிடைத்ததால்தான் பௌத்தகோயில் கட்டச்சம்மதித்தாரா? அல்லது பௌத்த கோயில் அமைப்பதற்கு சம்மதம் தெரிவித்ததால்தான் அவருக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதா? என்ற சந்தேகம் பலருடைய மனங்களில் எழுவது தவிர்க்க முடியாது.

அரசியல், கலை, கலாசாரம், சமயம் எனப் பல்வேறு தளங்களிலும் எம்மீது கை வைத்துள்ளார்கள். இவற்றை உணர்ந்து கொள்ளாமல் இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்ற நிலைப்பாட்டில் எது எவ்வாறு இருந்து விட்டுப் போகட்டும், நமக்கு கிடைக்கின்ற சலுகைகளைப் பெற்றுக்கொள்வோம் என்ற நிலைப்பாட்டில் நிலையற்ற மனிதர்களாக எமது சமூகம் இருக்கிறது என்று நினைக்கும்போது வெட்கமாயிருக்கிறது.

இன்றைக்குக் கிடைக்கும் அற்ப, சொற்ப சலுகைகளைக் கண்டு மயங்கி அதற்குள் மண்டியிட்டுப் போவதால் எங்கள் முதுசொம்கள் முழுமையாக எம்மைவிட்டு எதிர்காலத்தில் மறைந்து விடும் என்பதை எக்காரணம் கொண்டும் மறந்துவிடக் கூடாது.

தமிழினத்தை ஆயுத ரீதியாகத் தோற்கடித்தவர்கள் இன்று அதன் கட்டமைப்புகளை உடைத்து அதற்கு உண்டான வரலாற்றுச் சின்னங்களைத் துடைத்தெறிந்து வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமான பூர்வீக நிலம் அல்ல சிங்களவர்களுக்கும் உரியது என்று கூற வருகின்றனர். தமிழினம் தனித்துவமானதல்ல என்று எதிர்காலத்தில் நிறுவ பல்வேறு அமைப்புக்களை நிகழ் காலத்தில் விதைக்கிறார்கள்.

விதைக்கப்படுவதற்கும், அது வளர்க்கப்படுவதற்கும் எம்மவர்கள் துணை போவார்களானால் அவர்களது இலக்கு நிறைவேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எங்கள் தமிழ் இனத்தின் தனித்துவம் தவிடு பொடியாகிவிடும் என்பதையும் இங்கு உணர்ந்துகொள்ள வேண்டிய கட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் உள்ளோம்.

அரச மரத்தடி, பிரதான சந்திகள் எனப் பல்வேறு இடங்களில் குடியேறிய புத்த

**அபிமானன்**

பெருமான் இப்போ எங்கள் வீட்டுக்குள்ளும் காலடியெடுத்து வைத்துள்ளார்.

உடுவில் கிழக்கில் உள்ள வீடொன்றுக்குள் முதல் முதலாக வெகுவிரைவில் பிரவேசம் செய்கிறார். எதிர்காலத்தில் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக"

## மூன்றாண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமான் **ஆறுமுகம் சின்னத்துரை**
(ஆச்சாரியார்)
கதிர்காம சுவாமி கோயிலடி,
அரசடிக்காடு, காரைநகர்.

அன்னை மடியில்
13 ★ 07 ★ 1933

ஆண்டவன் அடியில்
27 ★ 04 ★ 2008

**திதி: சித்திரை அபரபக்க சப்தமி (24.04.2011)**

அப்பாவை நாமிழந்து மூன்றாண்டு ஆனதுவோ
காலத்தின் கட்டளையால் காலனவன் கவர்ந்து சென்றான்
மூன்றாண்டென்ன முப்பது ஆண்டுகள் முடிந்தாலென்ன
உள்ளத்தில் அன்பும் காரமான கண்டிப்புடனும்
அம்மாவை இழந்த துக்கம் தெரியாமல் எம்மூவரையும் வளர்த்தீர்களே!
உற்றார், உறவுகள் ஆயிரம் இருந்தென்ன
தங்களின் அரவணைப்பிற்கீடாக இனியாருளர் எம் இதயத் துடிப்புள்ள வரை
அப்பாவை நாம் மறவோம் அதுபோதும் எமக்கு

"ஆறுமுகத்தகம்"
கதிர்காம சுவாமி கோயிலடி,
அரசடிக் காடு,
காரைநகர். (3460) (44-21-23)

என்றும் தங்களின்
நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பூமகள் நடராசா**

மலர்வு - 02-04-1933 உதிர்வு - 02-05-2010

ஆண்டொன்று கடந்தாலும்
எங்கள் கண்களில் தினமும்
வந்து செல்கிறாய் இன்னும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் என்றுமே மறையாது
அன்னையே!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

'குமரபதி',
இனுவில் கிழக்கு.
(சு/577590)(41)

அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி கனகலிங்கம் இலக்குணதேவி** (குஞ்சு)
(B.A Hons) (ஆசிரியை, யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்)



புத்தூர், வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் ஈவினை மத்தி, புன்னாலைக் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலிங்கம் இலக்குணதேவி (22.04.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி கனகலிங்கம் (யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி சஞ்சித்தாவின் அன்புத் தாயும் கந்தசாமியின் கனிஷ்ட புத்திரியும் திருமதி கந்தசாமியின் அன்பு மருமகளும் சத்தியமூர்த்தி (மருந்தாளர், களுபோவில வைத்தியசாலை, கொழும்பு), சத்தியசீலன் (நிர்வாக உத்தியோகத்தர்-சுகாதார திணைக்களம், வவுனியா), புஸ்பா, லலிதானந்ததேவி (ஆசிரியை - வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணலிங்கம், விஷ்ணுலிங்கம், தயாநிதி, ராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈவினை இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை மத்தி,
புன்னாலைக் கட்டுவன். (3462) (39-24-25)

தகவல்:
கனகலிங்கம் (கணவர்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
30 ★ 05 ★ 1936



விண்ணில்
24 ★ 04 ★ 2010

**அமரர் சின்னத்தம்பி துரைராசா**

(ஏழாலையைப் பிறப்பிடமாகவும், மன்னார் ஆத்திமோட்டையை வசிப்பிடமாகவும், தற்போது மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்தவரும்)

"ஆயிரம் விழுதுகள் தோன்றி வளர்ந்தாலும்
ஆணி வேர்தான் உயிர்"

பண்பின் சிகரமாய், பாசத்தின் இருப்பிடமாய்
அன்பின் திருவுருவாய் உதிரத்தை உரமாக்கி
மெழுகாக உந்தனை வருத்தி எம் வாழ்வில் விளக்கேற்றி
நானிலத்தில் உயர்வுடன் நாம் வாழ வழி தந்த எம் தந்தையே!
காலன் உம்மைப் பறித்து ஓராண்டுகள் நீண்டு நெடியதாய் கழிந்து போனாலும்
ஆண்டாண்டு காலத்துக்கும் நிலைத்த நினைவுகளின்
நீட்சியுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

மன்னார் (40-19-24)(3459) குடும்பத்தினர்

## யாழ். மண்ணில் முதல் முறையாக...
### அறிவிப்பாளர் பயிற்சி நெறி

நீங்களும் இலங்கையில் உள்ள அரச, தனியார், வானொலிகளில் அறிவிப்பாளராகலாம்.
உங்கள் திறமைக்குக் களம் அமைக்க நாம் தயார்
பிரபல வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.
காலம் 3 மாதம், சனி, ஞாயிறு தினங்களில் வகுப்பு நடைபெறும்
கல்வித் தகைமை: க.பொ.த (சா/த) தரத்தில் தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் சித்தி (உயர்தரமும் விரும்பத்தக்கது)
இருபாலாருக்குமான பாடநெறி பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.
* வானொலியில், தொலைக்காட்சியில், மேடையில் எவ்வாறு அறிவிப்புச் செய்வது
* Consoll / Computer இயக்கும் பயிற்சி
* நேரடி வர்ணனை எவ்வாறு செய்வது, விளம்பரம் எழுதுவது, வாசிப்பது எவ்வாறு, செய்தி, பத்திரிகை வாசித்தல், சந்தைப்படுத்தல் பயிற்சி

இன்னும் பல பயிற்சி நெறிகள் உங்களுக்காக.
பதிவுகளுக்கு விரையுங்கள்.

ELITE Computer and Business College
இல.1/5, மடம் வீதி (குழந்தை இயேசு பின் வீதி), யாழ்ப்பாணம்.
(3467) (44-21-23) T.P.0750445070

## தவறிவிட்டது

12ஆம் வட்டாரம் நெடுந்தீவைச் சேர்ந்த நா.நிஷாந்தினி என்பவரின் TVS CHAMP மோட்டார் சைக்கிள் பத்திரங்களுடன், சிறு தொகைப் பணம் கொண்ட உடுப்புப் பை கடந்த 12.02.2011ஆம் திகதி, கொக்குவிலிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சன்மானம் வழங்கப்படும்.

அ.வெ.நாயகம்

## வீடு வாடகைக்கு

### பலாலிவீதியில்

இலுப்பையடிச் சந்திக்கும் கந்தர்மடச் சந்திக்கும் இடையில் இரண்டு வீடுகள் ஒரே காணியில் வாடகைக்கு உண்டு. பதினொரு அறைகளும் பத்து வாகனத் தரிப்பிடங்களும் கொண்டது. நிறுவனங்கள் வரவேற்கப்படும்.

E-mail : shan0999@hotmail.com

## வீடு வாடகைக்கு

கந்தர்மடம், அரசடி வீதிக்கு அருகில் 2 அறைகள், வரவேற்பறை, சமையலறை, இரு குளியலறைகள் மற்றும் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0777358252

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய், காரைநகர் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777347397

## தேவை

தென்மராட்சியில் உள்ள மர அரிவு ஆலைக்கு அனுபவமுள்ள மர அரிவு ஆள் தேவை. அத்துடன் தச்சுத் தொழிலாளரும் தேவை.
தொடர்புகளுக்கு:- 0772557761

## பஸ் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 61-XXXX தொடர் இலக்கம் உள்ள ISUZU JOURNEY K.POWER STERING 42 ஆசனம் 1 ... பஸ் விற்பனைக்குண்டு.
தொ.பே: இல 0789140050

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18 ★ 08 ★ 1940



உதிர்வு
24 ★ 04 ★ 2009

அமரர்
**கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி**

ஆண்டுகளிரண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும் இருக்கும்
கருணை நிறைந்த உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்குகின்றோம்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (40)(3456)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு
மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

## IMMEDIATE VACANCY

We need motivated and qualified personnel with experience to comply with our standards of Web development.
You need to develop and create web sites for our local & foreign clients

Web Developers :
PHP, MY SQL

Web Graphic Designers :
Adobe Dreamweaver, Photoshop, Flash

Please forward your CV for immediate consideration with the expected salary and the earliest starting dates. mail it to :
it@uthayan.com

The Manager
UTHAYAN IT ISLAND
359, Kasthuriyar Road, Jaffna
021 567 2222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை மாறி வீசும் காற்று...!



திருமண வீடொன்றில் தான் தான் மாப்பிள்ளையாகவும் இழவு வீடொன்றில் தான் தான் பிணமாகவும் இருக்க வேண்டும் என்ற என்ற எண்ணப்பாங்குடன் யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார் சிறுகைத் தொழில் முயற்சி மற்றும் பாரம்பரியகைத்தொழில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இப்போது அரசியல் பயணத்தில் காற்று அவரது எதிர்த்திசையில் வீச ஆரம்பித்துள்ளது.

ஒரு பக்கம் மத்திய அரசின் மறைமுக அழுத்தங்கள், மறுபக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகளும் மக்கள் சந்திப்புக்களும் அமைச்சர் டக்ளஸை நிலைகுலையச் செய்துள்ளன.

இதனால், எதைச் செய்கிறோம்? என்னத்தைப் பேசுகிறோம்? என்று புரியாமல் தடுமாற்றம் அடைந்துள்ளார் அமைச்சர்.

**இடிந்து போன கோட்டை**

''மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் வடமாகாணத்தின் ஏகப் பிரதிநிதி நான் தான். என்னை விட்டால் யாரும் இல்லை. நான் இல்லாமல் அணுவும் அசையாது'' என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தார் டக்ளஸ்.

வடபுலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் தன்னால்தான் செயற்படுத்தப்படுகின்றன என்றும் வேறு எவருடைய பங்களிப்பும் இல்லாமல் தனி ஒருவனாக அனைத்தையும் தானே செயற்படுத்துகிறார் என்னும் மாயையை ஏற்படுத்தி வைத்திருந்தார்.

இதற்கு ஏதுவாக, அரச தலைமையினதும் படைத் தரப்பினரதும் ஆதரவுடன் மற்றைய அரசியல் கட்சிகளின் தலையீடுகளுக்கும் முட்டுக் கட்டைகளைப் போட்டுத் தனி இராச்சியம் நடத்தி வந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை மக்கள் பலத்துடன் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை மாவட்ட மற்றும் அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளவிடாது செய்வதற்காக அவர்களுக்கு அழைப்பு அனுப்பக் கூடாது என்று குழுவின் தலைவர் என்ற முறையில், அதிகாரிகளை மிரட்டி வந்தார் அமைச்சர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் அமைச்சர்களாலும் ஒதுக்கப்படும் வருடாந்த நிதி ஒதுக்கீடுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொருதிட்டமும் அந்தப் பிரதேசத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளின் சிபார்சுகளுடனும் ஆலோசனைகளுடனும் தான் நிறை வேற்றப்பட வேண்டும். இது கட்டாயம்.எனவே அதனைக் கண்காணிக்கவும், கருத்துச் சொல்லவும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய எல்லா மாவட்டங்களிலும் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்து கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை திறம்படசெயற்படுத்துகின்றனர். இதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமது பிரதேசம் தொடர்பான நடவடிக்கைகளில் ஓரங்கட்டப்பட்டு வந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டால் கேள்வி கேட்பார்கள். திருப்தியான பதில் கிடைக்காவிட்டால் சர்ச்சை எழுப்புவார்கள். இதனால்தான் அழைப்பு அனுப்பவில்லை என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஒருமுறை ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களின் உடனடி நடவடிக்கையால் அமைச்சர் ரிஷாத் தனது கூற்றைப் பின்னர் மாற்றிக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''மக்கள் பிர்திநிதிகளான எங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதியை எங்கள் பிரதேச மக்களுக்கே ஒதுக்கித் தருகின்றோம்.

நாங்கள் வழங்கும் நிதி எமது மக்களுக்கு முறையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைக் கேட்கவும், அவற்றைக் கண்காணிக்கவும் கூடிய உரிமை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு.

இதனால் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் பங்கு மற்றும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்'' எனக்கூட்டணி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும் அடிக்கடி குரல் எழுப்பி வந்துள்ளனர். அரசும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் மட்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கான அழைப்புக்கள் கிடைப்பதில்லை. இந்த விடயம் தொடர்பாகக் கூட்டணி உறுப்பினர்கள், அபிவிருத்திகளுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன்தொடர்பு கொண்டதன் பயனாக இந்த மாவட்ட செயலாளர்களும் பிரதேச செயலாளர்களும், கூட்டணி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய அழைப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தமது பிரதேசத்தில் நடைபெறும் மாவட்ட பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்து கொள்வது என்று தீர்மானித்து அதன்படி செயல்படுகின்றனர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இதுவரை காலமும் ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தப் பிரதேச மக்களின் நன்மைக்காக எந்தவொரு பங்களிப்பையும் வழங்குவதில்லை. தமது நிதியில் ஒரு சதத்தைக்கூட வழங்குவதில்லை. எல்லாவற்றையும் நானே செய்கின்றேன்'' எனக்கூறிக்கொண்டு மலசலகூடம் என்றால் என்ன சைக்கிள் பார்க் என்றால் என்ன அவற்றைத்திறந்து வைத்து மாலை போட்டுக் கொண்டு வந்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

இப்போதோ மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்குக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் செல்ல ஆரம்பித்து விட்டனர். இதில் ஈ.சரவணபவனே முக்கியனமானவர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் பிரவேசம் மக்கள் மனதில் மாற்றத்தையும் அமைச்சர் டக்ளசின் மனதில் பீதியையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

அமைச்சர் டக்ளசின் பாணியிலேயே கூறுவதானால் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்கள்' என்பது போல் அமைச்சரின் பொய்ப் பிரசாரங்கள் எல்லாம் பிசுபிசுக்க ஆரம்பித்து விட்டன.

இதுவரை காலமும் நான் இட்டதுதான் கட்டளை; செய்யவேண்டியது உங்கள் தலைவிதி, என மிரட்டிக்கொண்டு இருந்த அமைச்சரை எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கும் ஆள்கள் வந்து விட்டனர் என்பது பெரும் தலையிடியாகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் நேரடித் தலையீட்டால் மக்களும் உண்மை நிலைகளைப் பகிர்ந்து கொண்டு அமைச்சரை ஓரம் கட்டத் தலைப்பட்டு விட்டனர்.

இதற்கு ஏதாவது செய்தே ஆகவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வருகையைத் தடைசெய்யவேண்டும். உத்தியோகபூர்வமாக அழைப்புகள் அனுப்பாவிட்டாலும் கூட அவர்கள் வந்து கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தடுக்கவேண்டும் என்பதே அமைச்சரின் இப்போதைய ஒரே தலையிடி.

எனவே தனக்கு வேண்டியவர்களையும், கட்சியின் அமைப்பாளர்களையும் கொண்டு கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களையும் அவதூறுகளையும் கிண்டிவிட்டு சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்த திரைமறைவில் இருந்து இயங்க ஆரம்பித்து விட்டார் அமைச்சர் டக்ளஸ்.

தனது செல்வாக்குக் குறைகிறது, தன்னிடமிருந்து மக்கள் ஒதுக்குகின்றனர் என்பதை எவரால்தான் தாங்கிக் கொள்ள முடியும். சரிந்து வரும் தனது வாக்கு வங்கியைப் பாதுகாத்துக் கொள்ள சாதுர்யமாகக் காய்நகர்த்துகின்றார் அமைச்சர் டக்ளஸ்.

ஆனால் எல்லாவற்றையும் தானே நெறிப்படுத்தி அமைச்சர் பழக்கி விட்டதால் அவரது பரிவாரங்களுக்கு ஒரு விடயத்தை ஒளித்து மறைத்து எப்படிச் செய்வது என்று தெரியவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது திட்டமிட்டுச் சேறு பூச அவர்கள் மேற்கொண்ட சூழ்ச்சி அம்பலமானது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் இது நடந்தது. அந்தக் கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் வலி.கிழக்குப் பிரிவினர் சிலரை ஏற்பாடு செய்தனர். கூட்டத்துக்கு வந்த அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது சேறு பூசும் வகையில் சொல்லிக் கொடுத்ததை சபையில் ஒப்புவித்தார்கள். அவர்களை ஏற்பாடு செய்த ஈ.பி.டி.பி கட்சியின் வலி.கிழக்கு அமைப்பாளரோ, நின்றால் பிரச்சினை என்று நழுவி விட்டார். முன் பின் அனுபவம் இல்லாமல் அமைச்சர் சொன்னார் என்பதற்காக செய்த ஏற்பாடு தானே ... அதனால்தான் அப்படி.

அதனை விளங்கிக் கொள்ளாத ஏற்பாடு செய்யப்பட்ட பிரகிருதிகளோ கூட்டம் முடிந்து வெளியே வந்ததும் ''எங்கே போக்குவரத்து ஏற்பாடு?'' என்று கேட்டு சத்தம் போட்டதில் உள்வீட்டு விவகாரங்கள் எல்லாம் அம்பலத்துக்கு வந்து விட்டன. பின்னர் மற்றொரு ஈ.பி.டி. உறுப்பினர் அவர்களை ஓட்டோவில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

காலையில் புருத்தித்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் எவ்விதமான அரசியல் கலப்பும் இன்றி முற்றுமுழுதாக அபிவிருத்தி தொடர்பான விடயங்களே ஆராயப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் அவசர அவசரமாகக் கூட்டத்தை முடித்து விட்டுச் சென்ற பின்னரும் அதிகாரிகளும் பொது மக்களும் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் உரையாடித் தமது குறை நிறைகளைக் கூறியதுடன் அடிக்கடி இப்படியான கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

பிற்பகல் கோப்பாயில் நடைபெற்ற கூட்டம் தான் சற்று வித்தியாசமாகக் காணப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் வரும் முன்னரே அவரது அமைப்பாளர்கள் புடைசூழ பெரும் கூட்டத்தினர் வந்து ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர்.

கூட்டம் ஆரம்பமான பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

அமைச்சரின் கேள்விகளிலும் அதிகாரிகள் அளித்த பதில்களிலும் பொதுமக்கள் திருப்தியடையவில்லை. சில அதிகாரிகளுடன் பொதுமக்கள் நேரடியாகவே முகத்துக்கு முகம் காரசாரமான குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசினர்.

நர்மதா

இப்படியான சந்தர்ப்பங்களில் எல்லாம் அமைச்சர் அடிக்கடி குறுக்கிட்டு இருதரப்பையும் அமைதிப்படுத்திக்கொண்டே இருந்தார். பேசியவர்கள் எல்லோருமே 'எல்லாம் முன்பு பேசிய விடயங்கள் தான். ஆனால் எதுவும் செய்யத்தான் இல்லை'' என்றனர்.

இதனை செவிமடுத்த அமைச்சர் உங்கள் கோரிக்கைகளை எழுத்து மூலமாகத் தாருங்கள் என்றார். இது பார்வையாளர்களுக்குச் சற்றுக் கடுப்பை ஏற்றிவிட்டது.

'என்ன ஐயா எத்தனையோ முறை எழுதித் தந்துவிட்டோம், அலுத்துப் போய்விட்டது' என்றனர்.

சரிசரி கடைசியாக ஒருமுறை எழுதித் தாருங்கள். அடுத்த கூட்டத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டார் அமைச்சர்.

இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கும் போதே ஒரு மூலையில் இருந்து எழுந்த ஒருவர் திடீரென 'அமைச்சர் அவர்களே உங்கள் பக்கத்தில் புதிதாக இருவர் அமர்ந்துள்ளனர். அவர்கள் யார்? இங்கே எதற்கு வந்தார்கள். எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது'' என்று பாடமாக்கியதைக் கூறிவிட்டு அமர்ந்து கொண்டார்.

அவரது கையில் இருந்து மைக்கை

(26ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன்?

'கல்லறை உலகில் பலவுண்டு. அவை சொல்லிடும் கதைகளில் கனிவுண்டு. வல்லவர் இயேசுவின் கல்லறையோ அவர் இல்லையே என்னிடம் என்றிடுதே, புது வாழ்வு நமக்குப் பெருவாழ்வு கிறிஸ்து தரும் வாழ்வு...' என்ற பாடல் வரிகள் கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலுக்கு இன்றும் சாட்சியம் கூறுகின்றன.

இன்று கிறிஸ்தவ சமூகம் உயிர்த்தெழு தலைச் சிறப்பாக கொண்டாடுகின்றார் கள். உயிர்த்தெழுதல் இல்லையென்றால் கிறிஸ்தவ மார்க்கமே இல்லையென்று கூடச் சொல்லலாம்.

உயிர்த்தெழுதல் நிகழ்வை திரு மறையின் பார்வையில் பார்ப்போமென் றால் இயேசுவின் பிறப்புக்கும் உயிர்ப் புக்குமிடையில் நெருங்கிய தொடர்பு கள் உண்டு. அவையாவன, பிறப்பின் செய்தியும், உயிர்ப்பின் செய்தியும் முத லில் பெண்களுக்கே அறிவிக்கப்படு கிறது. இயேசுவின் பிறப்பு தாயாகிய மரியாளுக்கு நீ கர்ப்பம் தரித்து ஒரு குமார னைப் பெறுவாய் என்று அறிவிக்கப்ப டுகிறது. உயிர்ப்பின் செய்தி கல்லறைக் குச் சென்ற பெண்களுக்கு அறிவிக்கப் படுகிறது.

பிறப்பின் செய்தியையும் உயிர்ப்பின் செய்தியையும் தேவதூதன் அறிவித் தான். பிறப்பின்போது கந்தைத் துணி அடை யாளம், உயிர்ப்பின்போது இயேசு வைச் சுற்றிய துணிகள் கல்லறையில் கிடந்தன. அவர் உயிர்த்து விட்டார் என்பதற்கு இது அடையாளம். பிறப்பும் உயிர்ப்பும் இரவு வேளையில் நடைபெறுகின்றன. இரவு வேளையில் மேய்ப்பர்கள் மந்தைகளை காத்தார்கள். அதிகாலையில் இருட்டோடே சில பெண்கள் கல்லறைக்குப் போனார்கள். உலகம் அமைதியாக தூங்கிக் கொண்டி ருந்தபோது இவைநடைபெறுகின்றன. உலகத்தின் இருளகற்றி ஒளி கொடுக்க வந்தவரென்பது புலனாகிறது.



உயிர்த்தெழுந்த ஆண்டவர் விண் ணேற்பு அடைவதற்கு முன் அதாவது நாற்பது நாள்களுக்குள் ஏறக் குறைய பத்துத் தடவைகள் பல சந்தர்ப்பங் களில் தன் அடியவர்களுக்குத் தன் னைக் காண்பித்தார் என நற்செய்தி நூல்களில் காண்கின்றோம். இதற்குக் காரணம் தன் உயிர்ப்பை எல்லோரும் நம்ப வேண்டுமென்பதற்காய் இவ் வாறு செய்தார். அதுமாத்திரமல்ல பெரிய வெள்ளிக்கிழமையன்று நடந்த கொடூரம் மக்களின் மனத்தி லிருந்து மறைய வாய்ப்பில்லை. யூதாசின் துரோகத்தனத்தால் ஏற் பட்ட கொடூரத்தை புரிந்து கொள்ள முடியாத சூழல். நம்பியிருந்தவர்களை நடுத்தெரு வில் விட்ட கதை, அன்பான சீடர்கள் ஓடியொளித்துக் கொண்ட சூழல், இந்த நிலையை மாற்ற உயிர்த்த ஆண்டவர் தம்மைக் காண்பிக்க வேண்டிய நிலை. அதுமாத்திரமல்ல இயேசுவை சிலு வைக்கு ஒப்புக்கொடுத்து சிலுவையில் அறைந்து கல்லறையில் அடக்கமும் செய்து ஏவலாளிகள் காவலாளிகளாக கல்லறைக்கு முத்திரையும் பதித்து நின்ற சூழல், மதத் தலைவர்கள், மூப்பர்கள், அரசியல் அடிவருடிகள் குதூகலித்து நின்ற நேரம்.

இதற்கெல்லாம் காரணம் இயேசுவைக் கொன்று விட்டோம் என்ற மமதை. இம் மமதை மூன்றே மூன்று நாள்கள் மட்டும் நிலைத் திருந்தது. மரணத்தின் ஒலம் மூன்றே மூன்று நாள்களுக்குத்தான். மூன் றாம் நாள் ஆண்டவர் உயிர்த் தெழுந்ததி னால் இவர்களும் அடங்கிப் போனார் கள். மரணத்தின் கூரை முறித்து அவர்உயிர்த்தெழுந் தார். அநீதியும் அக் கிரமமும் அதிக நாள்கள் நீடிக் காது. அநீதி செய்ப வர்கள் குதூகலிப் பார்கள். ஆனால் நீதி அமைதியாக வெற்றிபெறும். இது உலகம் தந்த பாடம் மாத்திரமல்ல, கிறிஸ்தவ உண்மையும் கூட.

நீதியின் சூரியன் மனித மனங்களில் உதிக்கத் தொடங்கிய காலம் தான் உயிர்த் தெழுதல் ஆகும்.

இயேசு உயிர்த்தார் என்பதற்கு பல ஆதா ரங்களை நாம் தேடிப் படித்தாலும், இன்று எமது சாட்சியான வாழ்வு ஒன்றே போதும். திருமறையின் கூற்று, விசுவாசச் சாட்சி கள், வெற்றுக் கல்லறைகள், புதுவாழ்வு இவையெல்லாம் உயிர்ப்பின் சாட்சிக ளாய் இருந்தாலும் கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு நாம் வாழ் வோம் (உரோமர் 6: 7) என்ற பவுலடியா ரின் கூற்று எம்மை ஆறுதல் படுத்துகி றது. இனி நாம் இறப்பின் மக்கள் அல்லர்.

**அருட்பணி டி. எஸ். மதியாபரணம்**

மாறாக உயிர்ப்பின் மக்கள் நானே உயிர்ப் பும் உயிரும் வாழ்வும் என இயேசு கூறி யுள்ளார்.

அவருக்குள் மரிப்பவர்கள் உயிர்த் தெழும்புவார்கள் என்பது உண்மையா கும். நாம் சந்திக்கும் நல்ல மனிதர்களில், நிகழ்வுகளில், நம் அனுபவங்களில் நமக்குத் தோன்றிக் கொண்டே இருக் கிறார். இவர்களில் அவரைக் காண, புரிந்து கொள்ள ஊனக்கண் அல்ல ஞானக்கண், விசுவாசக் கண் தேவை. எனவே இத்தகையோரில் உயிர்த்த இயே சுவைக்கண்டோம்.

## திசைமாறி வீசும்...

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிடுங்கி எடுத்த ஒருவர் 'இந்தக் கூட்டணி உறுப்பினர்கள் இந்த அபிவிருத்திக் கூட்டங் களில் கலந்துகொள்ளத் தகுதி இல்லாதவர்கள் எங்களுக்கு எதையும் செய்யாத இவர்கள்இங்கே வரக்கூடாது' என்று கூறினார். அப்போது கூட்டணி உறுப்பினர் சரவணபவன் அமைச்சரைப் பார்த்து 'இதுஎன்னஅபிவிருத்திக் கூட்டமா? இல்லைஅரசி யல் கூட்டமா இவர்களைக் கட்டுப்படுத்துங்கள்' என்று கூறினார்.

அப்போது இவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கமுயன்ற கூட்டணி உறுப்பினர் சிறீதரனை உடனே பேசவிடாமல் அமைதியாக இருங்கள். கடைசியில் பேசலாம் என்று அமைச்சர் தடுத்து விட்டாரேயன்றி கூச்சல் போட்டவர்களை அடக்கவோ அமைதிப்படுத் தவோ அக்கறை காட்டவில்லை.

ஒரு வழியாக இவர்களுடைய கேள்விகளுக் குப் பதில் அடிகொடுத்தார் நாடாளுமன்ற உறுப் பினர் சிறீதரன் "ஐயா ! யாழ்.மாவட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாங்கள். வருடாவருடம் எங்களுக்கு ஒதுக்கப் படும் நிதியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக் காகவே வழங்குகின்றோம். இம்முறையும் மூன்றரைக் கோடிரூபாவை உங்களுக்கு வழங்கியுள்ளோம்.

நாங்கள் வழங்கிய நிதி உங்களுக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்று பரிசீலிக்கும் உரிமை எங்களுக்கும் உண்டு. முன்பு இந்த வாய்ப்புக்கள் இல்லாமல் இப்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எங்களைத் தடுக்க எவராலும் முடியாது " என் றார். தமிழத்தேசியக் கூட்டமைப்பு இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் பயனாகவே இந்திய அரசு 50 ஆயிரம் வீடு களைக் கட்டிக்கொடுக்க முன்வந்தது. அமைச் சர் கூறித்திரிவது போல் நாங்கள் எதையும் தடுக்கவில்லை என்று பதிலடி கொடுத்தார்.

அப்போது தன்னை ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர் என்றும் அரசியல்வாதி ஒருவரின் மகள் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்ட வயோதிப மாது ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மீதும், சப்றா நிறுவனம் மீதும் வசைபாடினார். இவற்றை எல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சரவணபவன் "அம்மா நீங்கள் படித்தவர் போல் காணப்படுகிறீர்கள். நான் அங்கு பணியாற்றியதால் எல்லாக்குற்றச்சாட்டுக் களையும் என்மீது சுமத்தக்கூடாது என்றாலும் நீங்கள் இந்தச் சபையில் கூறியமைக்கு நன்றி" என்று கூறிவிட்டு அமர்ந்து கொண்டார். ஆனால் அமைச்சர் தமது சகாக்களைக் கட்டுப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் கூட்டத்தை முடித்துவிட்டு மண்டபத்தைவிட்டு வெளி யேறிவிட்டார். கூட்டம் முடிந்த பின் மூத்த அரச அதிகாரிகளும், எமது மக்களும் கூட்டணி உறுப் பினர்களிடம் வந்து 'காய்க்கும் மரத்துக்குத் தானே கல்லடி விழும். அரசியலில் இது சகஜம். பேசியவர்கள் தாமாகப்பேசவில்லை. யாரோ பின்னணியில் இருந்து தூண்டிவிட்டுள்ளனர் என்று ஆதாரமாகக் கூறினர் யார். அந்தப் பின்னணி? இப்போது புரிகிறதா அமைச்சர் ஏன் இத்தகையவர்களை எல்லாம் ஒழுங்கு செய்து தகிடுதத்தத்தில் ஈடுபடுகிறார் என்று? இல்லையேல் அவரது அரசியல் எதிர் காலமே காணாமல் போய்விடும் அல்லவா?

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிரியை அழைப்பும்**



**அமரர் சின்னப்பு சோமசேகரம்**

தோற்றம்:27.02.1931 (பிரபல வர்த்தகர்) மறைவு:27.03.2011

உங்கள் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டி கண்ணீர்ப் பூக்களை உங்களுக்கு காணிக்கையாக்குகின்றோம்.

24.04.2011 ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் அந்தியேட்டிக் கிரியை நடைபெற்று வீட்டுக்கிருத்தியம் 26.04.2011 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய். மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

**சோமசுந்தரம் விஜயரத்தினம்** *(ரத்தினா)*



வேலணை மேற்கு, வேலணையை பிறப் பிடமாகவும் நவிண்டில், கரணவாய் வடக்கு, உப்புக் கிணற்றடியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் விஜயரத்தினம் (ரத்தினா) (சதுர்யா புடைவையக உரிமையாளர், முனீஸ் வரன் வீதி, யாழ்ப்பாணம்) 22.04.2011 வெள் ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம்- திருமகள் தம்பதியரின் அன்புமகனும் அரு மைத்துரை -தங்கமலர் தம்பதியரின் பாசமிகு மருமகனும் கலைச்செல்வியின் அன்புக் கணவரும் தருண், சதுர்யா, தனுசன் ஆகியோரது அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம் (வேலணை), விக்கினேஸ்வரி(யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன் (முழங்காவில் தும்பிக்கையன் புடைவையக உரிமையாளர்), விமலாதேவி (வேலணை), பாலகிருஷ்ணன் (யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி (வேலணை), விஜயராணி (நல்லூர்) ஆகியோரது அன்புச் சகோதரனும் அருந்துரை, பரமேஸ்வரன்(லண்டன்), கண்ணன் (கனடா), அருந்தமிழ்ச்செல்வி(ஜேர்மனி), விஜயதுரை, ராயு, நிர்மலாதேவி (வேலணை), நாகராசா (யாழ்ப்பாணம்), பிரபா (முழங்காவில்), சிவநாதன் (வேலணை), வதனி (யாழ்ப்பாணம்), இராசன்(வேலணை), தயாபரன் (நல்லூர்) ஆகியோரது அன்பு மைத்துனரும் பரமேஸ்வரியின் பாசமிகு மருமகனும் கலைத்தாசன் (யாழ்.பழச்சோலை-யாழ்ப்பாணம்), விஜயதாசன் (விஜயன் வாணி பம்- யாழ்ப்பாணம்), கமலதாசன் (கொழும்பு ரான்ஸ்போர்ட்), கமலலோஜினி, சர்வதாசீன், உதயகுமார், கனகாம்பிகை, சுசிலா, கமலா, அசோக், மகேந்திரன், தர்மினி, சண்முகமலர், நகுலாவதி, மஜிதா (லண்டன்), பிரியதர்சினி, றொபின்சன் (ஜேர்மனி), சிந்துஜா ஆகியோரது உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(24.04.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரணவாய் வடக்கு, எள்ளங் குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புக்கிணற்றடி, நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி.

(சி/577903) (19-25)

தகவல்: குடும்பத்தினர்.

**வீடு விற்பனைக்கு**

பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக 3 படுக்கை அறை கள், 2 குளியலறைகள், நவீன சமையல் அறை, விருந்து அறை, சாப்பாட்டறை, பல்க் கனி, தரகர் வேண்டாம்.

c/577586 தொடர்பு: 0771547186

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.பெருமாள் கோயிலடிக்கும் ஆரியகுளத்தடிக்கும் அண்மை யாக வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமாக 100,000/= உம் வாடகையாக 10,000/= உம் 3வருடத்துக்குத் தரப்படும்.

தொடர்பு : 0750695323

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி சிவன் கோயில் மேற்கு வீதியில் $5\frac{1}{2}$ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. நிறு வனங்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு: 0776512150

**பயிற்சி வகுப்பு**

**வெள்ளவத்தையில்**

25 வருடமாக புகழ்பெற்ற சாரதி பயிற்சி கல்லூரியில் கடமையாற்றிய ஆசிரியரினால் மும்மொழியிலும் சாரதி பயிற்சி வழங்கி உத்தரவாதத்துடன் ஒரு வாரத்தில் லைசன் பெற்று தரப்படும். வீடுகளுக்கு வந்தும் பயிற்சி வழங்கப்படும்.

Tel: 0777 267027

**STUDY IN UK, CANADA, USA CYPRUS, POLAND & SINGAPORE**

UK + தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் IELTS இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியை தொடரலாம்.

USA + கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.

CANADA + IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் 2வது வருடத்திலிருந்து PR கிடைக்கும்.

POLAND + கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

SINGAPORE + பதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். கல்லூரி அனுமதி உத்தரவாதம்.

CYPRUS + கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

100% Legal & Genuine process

Next Intake: May.'11



எமது பிரதிநிதி இன்று முதல் செவ்வாய் வரை யாழ்ப்பாணத்தில் இருப்பார் நீங்களும் அவரை சந்திக்க வேண்டுமானால் முன்கூட்டியே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுமதிபெற்று சந்திக்கலாம்.

For further Info: E-mail: read.int@gmail.com

அல்சரா - 0778339943, பஸ்னா - 0778 438403

READ International

No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் ஆசிரியர்
மு. பிரியந்தன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி முத்தையா இராஜேஸ்வரி
21.04.2011 அன்று
இறைபதமடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவுத் துயரில்
குடும்பத்தாருடன் நாமும்
பங்குகொள்வதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறையருளை வேண்டி
நிற்கின்றோம்.

நவில்ட் பாடசாலைச் சமூகம்,
கைதடி.

(40-27-24)(3466)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் மகேந்திரராசா



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகேந்திரராசா 22.04.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.* (40,23,25)(3461)

தகவல்:
**ஜீவிதன் (மகன்)**



## திருமதி கார்த்திகேசு பொன்னம்மா

கைதடி கிழக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு பொன்னம்மா நேற்று (23.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்- கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் கைலாயநாதன், காலஞ்சென்ற பேரின்பநாயகி ஆகியோரின் சிறிய தாயும் ஈஸ்வரி, தேவலிங்கம் ஆகியோ ரின் அன்பு மாமியும் செந்தூரன், யசோதா, லோகலோஜினி, லோகநிதியா, மயூரன், பிரதீஷ், பர்மிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ச.கைலாயநாதன் (பேரமகன்)** (1660)

*அம்மன் கோயிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.* (40,23,25)

# கிளிநொச்சியில் திங்கள், செவ்வாய் எழுத்து, செயல்முறைப் பரீட்சைகள்

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சையும், ஏற்கனவே எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செயல்முறைப் பரீட்சையும் நடைபெறவிருக்கின்றன. கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாஸன் இதனை அறிவித்துள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களில் 2970 வரையான சுட்டிலக்கத்தை கொண்ட பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி உதவி அரசாங்க அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்திலும்-

இந்த ஆண்டு 8ஆம் திகதிக்கு முற்பட்ட திகதிகளில் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் இடம்பெறவுள்ளன.

உரிய பரீட்சார்த்திகள் தமக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களுடன் உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படவுள்ளதால் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# நாய் கடித்தவுடன் விழுந்தவரின் எலும்பு முறிந்தது

தென்மராட்சி,ஏப்.24

நாய் கடித்தபோது வீழ்ந்ததில் கால் எலும்பு உடைந்தது. மோட்டார் சைக்கிளில் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் மீசாலையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த சிற்றம்பலம் பரமநாதன் (வயது-59) என்பவருக்கே இந்தக்கதி ஏற்பட்டது.

நாய் கடித்த காயத்துடன் எலும்பு உடைவு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார். (207)

ஓம்
சிவமயம்

# அந்தியேட்டி அழைப்பு



## அமரர் சரவணமுத்து செல்லத்துரை

கடந்த விகிர்தி வருடம் பங்குனிமாதம் 14ஆம் நாள் (28.03.2011) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தந்தையும் குடும்பத்தலைவருமான அமரர் சரவணமுத்து செல்லத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நிகழும் கர வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் நாளை (25.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியம் மற்றும் சபிண்டீகரணக் கிரியைகள் எதிர்வரும் சித்திரைமாதம் 14ஆம் நாள் (27.04.2011) புதன்கிழமை நண்பகல் - இல.72/50, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்திலும், அவரின் ஆத்மாசாந்தியடைய வேண்டி அன்றையதினம் (27.04.2011) காலை 9 மணியிலிருந்து அல்லைப்பிட்டி கறண்டப்பாய் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் தாங்களும் தங்கள் குடும்பமுமாய் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எம்முடன் இணைந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(49,27)

செல்லத்துரை குடும்பத்தினர்.

# வெற்றிடங்கள்

நுகேகொடையில் அமைந்துள்ள சுகாதார பராமரிப்பு துறையில் அங்கீகாரம் பெற்ற (Ceymed Hospital Services) நிறுவனம் தனது யாழ்ப்பாணக் கிளைக்கு கீழ்காணும் பதவி வெற்றிடங்களுக்கு இளமையான மற்றும் துடிப்பானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

**தாதிமார் - பெண்**
க.பொ.த. சா/த (G.C.E. O/L), ஆகக்குறைந்தது 1 வருட அனுபவம்.

**உதவியாட்கள்**
வயதெல்லை 40.
மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.

**அலுவலக சுத்திகரிப்பாளர்கள்**
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் உங்கள் சுயவிபரக்கோவையை (CV) கீழ் காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**MANAGER - HUMAN RESOURCES**
Ceymed Hospital Services (pvt) Ltd
No: 132, S. De. S Jayasinghe Mawatha, Nugegoda.
E-mail: health@cevmed.lk




# கண்ணீர் அஞ்சலி

## திருமதி முத்தையா இராஜேஸ்வரி



எமது நிறுவனத்தின் முகாமையாளரான S.P. முத்தையா அவர்களின் அன்பு மனைவி திருமதி முத்தையா இராஜேஸ்வரி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைவதோடு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

அற்புதா றேடிங் கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளரும் சக ஊழியர்களும்.
(சி/577911) (44-21-23)

# சமய சமுதாய ஆய்வுக்கான கிறிஸ்தவ நிறுவனம்

## Christian Institute for Study of Religion and Society

**கருத்தரங்கு**

*"தென் இந்திய, வட இலங்கை மீனவர் பிரச்சினை"*

கருத்து வழங்குபவர்
கலாநிதி அகுஸ்தீன் சிலுவைதாசன் சூசை
**Dr.Augustine Siluvaithasan Soosai**
(முதுநிலை விரிவுரையாளர், புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**தலைமையுரை**
**அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன்**

**இடம்:** யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவு மண்டபம் (யாழ். போதனா வைத்தியசாலை எதிர்ப்புறம்)

**காலம்:** செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி(26.04.2011) பிற்பகல் 3.30 மணி

*அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.*

வட்டுக்கோட்டை. (சி/577913) **இயக்குநர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குண்டு

தரமான மாட்டெரு, ஆட்டெரு விற்பனைக்குண்டு.
(ஆட்டெரு கிறசர் செய்தும் தர முடியும்).
விநியோகஸ்தர்: திரு கே.யோகையா, ஓய்வுபெற்ற கிராமஉத்தியோகத்தர்,
25, செல்வா வீதி, ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி. (மத்திய கல்லூரிக்கு எதிர் லேன்). 0772590029

## STUDY / WORK / LIVE in NEW ZEALAND AND AUSTRALIA

### STUDY + WORK + PR

BIBM ஆனது உங்கள் உயரகல்விக்கான நிபுணத்துவமிக்க ஆலோசனை வழங்குவதன் மூலம் New Zealand & Australian Work Permit & Migrationஇற்கான வழிமுறைகளை இலகுவாக்கி துரித கதியில் அடைய வழி வகுக்கிறது.

June / July, 2011 INTAKE



**BIBM**
Wellawatte

- Study 1 - 2 years and get work permit in New Zealand & Australia.
- Low Course Fees
- Widely job available destination

**Courses at all level** ( Certificate / Diploma / Degree )

Business, IT, Accounting, Travel & Tourism, Hospitality Management, Cabin Crew Flight Operation, Automotive Technology, Dental Technology, Aged care & Child care , Air Craft Maintenance.

- PR ற்கான நிபுணத்துவமிக்க முறையில் பாடநெறி தெரிவு
- Expert advice on Academic & Funding Requirements.
- Expert Visa Document Preparation

*Affordable course fees, & flexible payment options. Exemptions are offered HND EDEXCEL, ABE, NCC, BCS, ACCA & CIMA qualified & part qualified students.*

**Hotline : 077 1553323**

Carry all your academic documents for an appointment

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A. Silva Mawatha, Colombo 06. (Opposite to Royal Hospital)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk
www.bibm.edu.lk

## மாணவியை மோதிய மோ.சைக்கிள்

பஸ்ஸிலிருந்து இறங்கிய மாணவியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மேதிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் சாவகச்சேரி மடத்தடிச் சந்தியில் இடம்பெற்றது. சாவகச்சேரி வடக்கு மடத்தடியைச் சேர்ந்த எம். நிபர்ணா (வயது 16) என்பவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

(ம-207)

## வீடு வாடகைக்கு

விதானையார் வீதி, சுண்டுக்குளியில் சகல வசதிகளும் கொண்ட வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777760255

## விற்பனைக்கு

யாழ் நகரில் மாட்டீன் ஒழுங்கையில்

2¼ பரப்பு காணி, சகல வசதிகளுடன் கொண்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0750422121

## மாடி வீடு வாடகைக்குண்டு

இல.17/1, Brown Road இல் நாவலர் வீதிக்கு அருகில் சகல வசிதிகளுமுடைய 10 அறைகள் வரவேற் பறை, கராஜ், வாகனத்தரிப்பிடம் ஆகியன அமைந்த மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள், வங்கிகள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0112 589976, 077 9907052.

## கடை வாடகைக்கு

வேலணை, வங்களாவடி, பழைய டிஸ் பென்சறி வளவுக்குள் 350 சதுர அடியுள்ள ஒரு கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு : பாஸ்கரன் - 0750399725
கதிர்காமநாதன்- 0774445248

## புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### புலோலி கிழக்கு, பருத்தித்துறை
### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்

சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டங்கள் 08.05.2011 மு.ப. 10 மணிக்கு அந்தந்தக் கிளைக்குக் குறிப்பிட்ட இடங்களில் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளன. கிளைக்குழு தெரிவு நடைபெறும் இடங்கள் பற்றி விரிவாகப் பின்னர் அறியத்தரப்படும். வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் தமது கிளைக் குழுத் தெரிவில் பங்குகொண்டு ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம். அங்கத்தவர்களுக்கு தனித்தனியாகவும் அறிவித்தல் அனுப்பப்படும்.

தலைவர், புலோலி ப.நோ.கூ. சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி/577908) (38)

## ஹீரோ, கென்டன் காட்சியறை



HERO CYCLES
KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



*ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்*



**ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்**
**ஸ்ரார் ரேடர்ஸ்**
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672

## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கை காப்புறுதித் துறையின் முன்னோடியாகத் திகழும் **செலிங்கோ காப்புறுதி** நிறுவனத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு நம்பிக்கையான இளைஞர்கள் கோரப்படுகின்றார்கள்.



### சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி

**தகைமை**
- 18வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்
- கல்வி பொதுத் தராதர சாதாரணத்தரம் (O/L) சித்தியடைந்திருக்க வேண்டும்.

### சிரேஷ்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி

**தகைமைகள்**
- கல்வி பொதுத் தராதர உயர்தரம் (A/L) சித்தியடைந்திருக்க வேண்டும்
- Marketing துறையில் முன் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(49,25,27)

அடிப்படைச் சம்பளம், எரிபொருள் செலவு, கையடக்க தொலைபேசிச் செலவு, மருத்துவச் செலவு மற்றும் அடிப்படைச் சம்பளம் தவிர உங்கள் திறமையான சேவைக்கான ஊதியம் வழங்கப்படும்.



பரீட்சார்த்த நேர்முகத் தேர்வு
**26.04.2011 மற்றும் 03.05.2011**
ஆகிய இரு நாள்களிலும் நடைபெறும்.

இது சம்பந்தமாக தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

## செலிங்கோ காப்புறுதி நிறுவனம்

CEYLINCO VIP ON THE SPOT

இல.173, முதலாம் மாடி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0773124603, 0773633145.

## யாழில் hp International Warranty

Hp Authorized Business Partner
**NALIN ல் Hp Laptops/ Hp Branded Pc**

**hp i3-G62**
G62- 460TU
Intel Core ™ i3 - 2.66
15.6" LED (HD)
320 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
69,500/=

**hp i5-G62**
G62- 453TU
Intel Core ™ i5 - 2.66
15.6" LED (HD)
500 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
71,500/=

**hp Pavilion G6**
G6- 1021 TX
Intel Core ™ i5 - 2.66
15.6" LED (HD)
640 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
88,000/=

**hp Pro Book**
4520 S
Intel Core ™ i3 - 2.66
15.6" LED (HD)
320 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
76,000/=

**hp Compaq 620**
G62- 460TU
Intel Co 2 Duo ™ 2.2
15.6" LED (HD)
320 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
58,500/=

**DELL**
DELL Vostro 1014
Intel Co 2 Duo ™ T6570 2.1
14.1" LED (HD)
320 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
68,000/=

**acer**
Acer Aspire 5742
Intel Core i3 ™ 2.2
15.6" LED (HD)
320 GB H.D
2GB DDR III SDRAM
DVD Writer
Wifi/Webcam/Card Reader
etc
72,000/=

**acer e machines**
Mini Lab
Intel Core i3 ™ 2.2
10.2" LED (HD)
160 GB H.D
1GB DDR III SDRAM
Wifi/Webcam/Card Readr
Windows Xp original
37,000/=




**Dual Series**
Dual Core 3.2
41 Intel Chip Foxconn M.B
2GB DDR III Kingston Mem.
500 GB HDD Samsung
Liteon / 24x Asus DVD Writer
19 Samsung LED/19 LG LED
Powerlogic Casing 250/220
Powerlogic Key/Mouse
40,800/=

**Core i3**
Core i3 3.06
55 Intel Chip Foxconn M.B
2GB DDR III Kingston Mem.
500 GB HDD Samsung
Liteon / 24x Asus DVD Writer
19 Samsung LED/19 LG LED
Powerlogic Casing 250/220
Powerlogic Key/Mouse
50,800/=

**Core i5**
Core i5 3.2
55 Intel Chip Foxconn M.B
2GB DDR III Kingston Mem.
500 GB HDD Samsung
Liteon / 24x Asus DVD Writer
19 Samsung LED/19 LG LED
Powerlogic Casing 250/220
Powerlogic Key/Mouse
60,800/=

**Core i7**
Core i7 3.2
58 Intel Express M.B
4GB DDR III Kingston Mem.
1000 GB HDD Samsung
Liteon / 24x Asus DVD Writer
19 Samsung LED/19 LG LED
Powerlogic Casing 250/220
Powerlogic Key/Mouse
110,000/=

கணணிகள் அனைத்திற்கும் 3வருட உத்தரவாதம்
Keyboard/Mouse அனைத்திற்கும் 1 வருட உத்தரவாதம்

NALIN Information Technologies Pvt Ltd.
**Nalin information Technologies**
இல:-195/2 பலாலி வீதி, திருநெல்வேலி
T.P 021 222 1166, 0777667974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்புறும் ஏழைமக்களுக்காக மனமிரங்கிப் பணிசெய்வோம்

## ஈஸ்ரர் செய்தியில் யாழ். ஆயர் அழைப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.24

இயேசுவின் உயிர்ப்பு துன்புறும் ஏழை மக்களுக்காக மனமிரங்கிப் பணி செய்ய வேண்டும் என்ற உந்து தலைத் தரட்டும்.

இவ்வாறு தனது ஈஸ்ரர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை.

அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கிறிஸ்தவர்களின் புனித காலம் தவக் காலம். ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் பாஸ்கா மறைபொருளைக் கொண்டாட எம்மை ஆன்மீக ரீதியில் ஆயத்தம் செய்யத் தரப்பட்ட அருளின் காலம் இது. இந்த நாள்களில் செப, தவ, தான, தரும முயற்சிகளில் ஈடுபட்டு, எமக்கும், இறைவனுக்கும், அயலவருக்கும் இடையிலான உறவுகளைப் புதுப்பித்து, எம் பாவ வாழ்வுக்கு நாம் இறந்து புதுவாழ்வு பெற்ற மனிதராக இயேசுவோடு உயிர்த்தெழ இந்தக் காலம் நம்மை முதன்மையாக அழைக்கின்றது.

கடந்த நாற்பது நாள்களும் நாம் மேற்கொண்ட ஒறுத்தல்கள், உபவாசம், செப, தவ, அன்புச் செயல்கள், எமது துர்குணங்களான கோபம், பகைமை, சோம்பல், சுயநலம், பழிக்கு பழி, அதீத உலக ஆசைகள் என்பவற்றை நாம் நிராகரித்து, துன்புறும் ஏழைமக்களுக்காக மனமிரங்கிப் பணிசெய்ய வேண்டும் என்னும் உந்துதலை தந்துள்ளனவா? அவ்வாறான ஒரு மனநிலை வாழ்வு மாற்றமே நாம் கொண்டாடும் இயேசுவின் உயிர்ப்பு விழாவுக்கு அர்த்தங்களை அள்ளித்தரும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் அனைவருக்கும் எனது இனிய ஈஸ்ரர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (த)

## 60 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கு இரத்தக் கசிவு இருந்ததை அவதானித்த பெற்றோர், தனியார் வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெற முயன்றுள்ளனர். அவர் சாவகச்சேரி வைத்திய சாலைக்குச் சிறுமியை அனுப்பி வைத்துள்ளார். அங்கிருந்து பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிறுமி மாற்றப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி தெரியவந்தது.

இது தொடர்பில், சிறுமியை தனியார் வகுப்புக்கு அழைத்துச் செல்லும் முதியவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த நான்கு மாதங்களாக இந்த நபரே சிறுமியைத் தனியார் வகுப்புக்குக் கூட்டிச் சென்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினம் அன்று சிறுமியை தனியார் வகுப்புக்கு அழைத்துச் செல்லும் வழியில் பற்றை ஒன்றுக்குள் கொண்டு சென்று வன்புணர்வுக்கு முயன்றுள்ளார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (உ-15)

## கொழும்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனரத்ன ஆகியோரை மட்டுமே சந்தித்துக் கலந்துரை யாடவிருக்கிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்திக்கமாட்டார். பிளேக்கை சந்திக்க முடியாது என்று ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியே இலங்கையில் இடம் பெறுகிறது என்று றொபேட் ஒ பிளேக் கடந்த 7 ஆம் திகதி காட்டமாகக் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ஐ)

## இரு வாரங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் நேற்றுப் பரவலாகக் கடும் மழை பெய்தது என்றும் மலை நாட்டில் நுவரெலியா, மாத்தளை, பதுளை ஆகிய இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பல இடங்களில் வீடுகள் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரித்துள்ளது.

அந்த விடயங்களைச் சர்வதேசத்துக்கு விளக்க வேண்டும்.

எமது நட்பு நாடுகளான இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி நேரில் சென்று விளக்கமளிக்க வேண்டும். அத்துடன், ஏனைய நாடுகளுக்கும் அமைச்சர்கள் சென்று விளக்கம் அளிக்க வேண்டும்.

இதன் மூலமே நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்திக்கு முடிவு கட்ட முடியும் - என்று தெரிவித்துள்ளது. (ஒ-ஐ)




முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

ஜேர்மனியில் வசிக்கும்
ஜெயக்குமார் - தயாளினி தம்பதியரின்
செல்வப் புதல்வி

செல்வி அஸ்மிதா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று *(24.04.2011)* ஞாயிற்றுக்கிழமை மிகவும் விமரிசையாக ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை இறை அருளுடன் எல்லாச் சிறப்பும் சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்றுச் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தேவராசா (தாத்தா), இந்திராணி (பாட்டி), தயாளன், தர்மிலன் (மாமாமார்), திலீபா (மாமி), சுரேந்திரன் (சித்தப்பா), தாட்சாயினி, தனுச்சாயினி (அன்ராமார்).

*29/4, சுப்பிரமணியம் வீதி,*
*அரியாலை.*
(3483)


## ஐ.நா. அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமான நடவடிக்கையை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

தமிழக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதி இப்படிக் கூறினார்.

இந்த அறிக்கை உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டவுடன் மத்திய அரசு பொருத்த மான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை கோரு கிறேன் என்றும் கருணாநிதி கூறினார். (ஒ-ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இற்கும் அதிகமான அகதிகள் ஏற்கனவே கொக்கோஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய எதிர்க்கட்சியின் எல்லை பாதுகாப்பு பேச்சாளரான மைக்கல் கீனன் தெரிவிக்கையில்:-

கொக்கோஸ் தீவை நோக்கிப் புகலிடக் கோரிக்கையாளர்கள் வருவது இதுவே முதல் தடவையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

கொக்கோஸ் தீவானது சிறிய கடற் பரப்பைக் கொண்ட ஒரு தீவாகும். சட்ட விரோத ஆள் கடத்தல்காரர்கள் தற்போது புதிய வழிமுறையில் ஆள்கடத்தல்களை ஒழுங்கமைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ -ஐ)

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து சிறுமியர் 10 வயதுக்கும் குறைந்தவர்களாவர். 10 - 16 வயதுக்கு உட்பட்ட 22 சிறுமிகளும் 16 வயதுக்கு மேற்பட்ட 8 பெண்களும் இவ்வாறு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் பெரும்பாலானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் 'என்றும் தெரிகிறது.

யாழ். மாவட்டத்தில் நகரப் பகுதி, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, அச்சுவேலி, சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, அல்வாய் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரப் பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்திலும் வவுனியா மாவட்டத்தில் புளியங்குளம், வவுனியா நகரப் பகுதி ஆகிய இடங்களிலும் இந்தக் குற்றங்கள் இடம்பெற்றதாகப் புள்ளி விவரம் கூறுகின்றது.

பதிவு செய்யப்பட்ட சம்பவங்களே இவை என்றும் இவற்றைவிட பதிவு செய்யப்படாமல் இன்னும் அதிகமானவை இடம்பெற்றிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றும் பெண் உரிமை விடயத்தில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

''இத்தகைய குற்றங்கள் அதிகரிப்பதற்கு, நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம் வரைமுறையற்று பயன்பாட்டில் இருப்பதே காரணம்'' என்று தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவர் எஸ்.சிவரூபன்.

'டிப்டொப்' ஆசாமிகளின் வெளிக் கவர்ச்சியில் மாணவிகள் இலகுவில் மயங்கிப் போய் விடுவதாலும் இத்தகைய சம்பவங்கள் அதிகரிக்கின்றன் என்றும் அவர் தெரிவித்தார்.

18 வயதுக்குக் குறைந்த சிறுமிகள் விரும்பிப் பாலியல் உறவு வைத்துக் கொண்டாலும்கூட அது வன்புணர்வாகவே கருத்தில் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

பெற்றோர் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து அதிகம் கவனம் செலுத்துவதே இத்தகைய குற்றங்களைக் [illegible] என்றும் அவர் தெரிவித்தார். (உ-15)

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாக இன்னும் வெளியிடப்படவில்லை. அது கடந்த வாரத்தில் வெளியிடப்படும் என்று ஐ.நாவின் பிரதிப் பேச்சாளர் பர்கான் ஹக் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தார். ஆனால், இலங்கை அரசு பதிலளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு அறிக்கையை வெளியிடுவதை தள்ளிப் போட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அறிக்கை அனேகமாக நாளை வெளியிடப்படும் என்று தெரிகிறது. ரஷ்யாவுக்குச் சென்றுள்ள பான் கீ - மூனும் அதற்கிடையில் நியூயோர்க் திரும்பி விடுவார்.

அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து பதிலளிப்பதற்கு இலங்கை அரசு நால்வர் கொண்ட குழு ஒன்றை நியமித்திருந்தது. எனினும் அந்தக் குழு தனது பதிலறிக்கையை இன்னமும் தயார்ப்படுத்தவில்லை.

இதற்கிடையே, பான் கீ - மூனுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் நேற்றிரவு சந்திப்பு ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில், அறிக்கையை வெளியிட வேண்டாம் என்று பீரிஸ் வலியுறுத்துவார் என்று வெளிவிவகாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பீரிஸ் - பான் கீ மூன் சந்திப்பு நடக்காமல் போனால் அல்லது தோல்வியில் முடிவடைந்தால் நிபுணர் குழுவின் 196 பக்க அறிக்கை நாளை வெளியாகும் என்று கொழும்பில் அதிகாரிகள் கூறினர்.

அதேவேளை, அறிக்கை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு நிகழ்ந்து, அறிக்கையை பாதுகாப்புச் சபை ஏற்றுக் கொண்டால் அல்லது அதில் கூறப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டால் நிபுணர் குழுவின் அறிக்கை, ஐ.நாவின் சட்டபூர்வ ஆவணமாகி விடும்.

இதனைத் தடுத்து நிறுத்தி, அறிக்கை பாதுகாப்புச் சபையில் அல்லது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதில் அரசு அதிதீவிர கவனம் செலுத்துகிறது.

இதற்காக மேற்குநாடுகளில் உள்ள தனது தூதுவர்களை உடனடியாகக் கொழும்பு வருமாறு அழைத்துள்ளது. ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியையும் உடனடியாக நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மேற்குலகில் உள்ள இலங்கை இராஜதந்திரிகள் நேற்று முதல் கொழும்பு வருகை தந்த வண்ணம் உள்ளனர். பெரும்பாலானவர்கள் இன்று வந்து சேர்ந்துவிடுவர்.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு நேரடியாகப் பதில் அளிக்காது வெளிநாடுகளில் உள்ள தூதுவர்கள் மூலமாக காய்களை நகர்த்த கொழும்பு விரும்புகின்றது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)


**மணல், சல்லி விற்பனைக்கு**

நாகர்கோயில் மண் - 7500/=, கண்டாவளை மண் – 6750/=, கருங்கல் சல்லி ¾" - 8750/=

தொடர்புகளுக்கு: 0777780882


## மரண அறிவித்தல்

### *விமலநாதன் கஜகுகன்*

இல. 91, சக்திபுரம், உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விமலநாதன் கஜகுகன் நேற்று (23.04.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 91, சக்திபுரம்,*
*உருத்திரபுரம்.*
*0778091603*

தகவல்:
இனிய வாழ்வு இல்லம்
வள்ளுவர்புரம் ரெட்பானா, விசுவமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# விடுதலைப் புலிகளுக்குப் புனர்வாழ்வளித்து விடுவிப்பது மனிதாபிமானமன்றி வேறென்ன?

## வவுனியாவில் 483 பேரை விடுவித்த நிகழ்வில் அமைச்சர் கஜதீர

மனிதாபிமானம், மனித உரிமை என்று பேசுபவர்கள், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களைத் தடுப்பு முகாம்களில் சிறப்பாகக் கவனித்து புனர்வாழ்வு அளித்து விரைவாக விடுதலை செய்யும் எமது மனிதாபிமானம் பற்றி என்ன கூறப்போகிறார்கள்.

ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது கைதானவர்களுக்கு ஐந்து வருடங்களுக்குப் புனர்வாழ்வு அளித்த நாம், விடுதலைப் புலி உறுப்பினர்களை இரண்டு வருடங்கள் மட்டுமே புனர்வாழ்வு அளித்து விடுவிக்கின்றோம். இது மனிதாபிமானம் இல்லையா?

இப்படிக் கேள்வி எழுப்பினார் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர.

இறுதிப் போரில் அரசிடம் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களில் 483 பேரை விடுதலை செய்யும் நிகழ்வு நேற்று வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

குடும்பஸ்தர்களான இவர்கள் அவர்களது உடன் பிறப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் கஜதீர பேசுகையில்:-

ஐ.நா. அறிக்கை, மனிதாபிமானம், மனித உரிமை என்று எல்லாம் பேசப்படுகிறது. நாம் செய்யும் மனிதாபிமானப் பணிகள் குறித்து எவரும் கணக்கில் எடுப்பதில்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தில் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு அளித்து விரைவாக - படிப்படியாக - விடுதலை செய்து வருகிறோம்.

பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்காமல், அவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்து சமூகத்துடன் இணைக்கின்றோம். இது மனிதாபிமானம் இல்லையா? - என்றார் அவர்.

இன்னமும் 4 ஆயிரத்து 700 பேர் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளனர். அவர்களையும் விரைவாக விடுதலை செய்வோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், புனர்வாழ்வு அமைச்சுச் செயலர் ஏ.திஸாநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுகந்த ரணசிங்க, வவுனியா அரச அதிபர் திருமதி சாள்ஸ், வன்னி மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதியின் இணைப்பாளர் எஸ். கனகரத்தினம் உட்படப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

தடுப்பில் உள்ள தமது உடன் பிறப்புக்களை ஒப்படையுங்கள் என்று கோரி பலர் கண்ணீர் மல்க மகஜர்களை அமைச்சர் கஜதீரவிடம் கையளித்தனர். (ஒ-ஐ)

# புதுக்குடியிருப்பு, தேவிபுரத்தில் 276 குடும்பங்கள் மீள்குடியமர்வு

## நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் பகுதியில் அடுத்த வாரம் 276 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் இந்தத் தகவலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 23 ஆயிரத்து 368 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த மாதம் கருநாட்டுக்கேணி, குமுழமுனை மத்தி, குமுழமுனை கிழக்குப் பகுதிகளில் பொதுமக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முழுமையாக மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ,இன்னமும் 23 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவில் தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த 276 குடும்பங்கள் அடுத்த வாரம் மீள் குடியமர்த்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

# கொக்கிளாய் கிழக்கு, மேற்கில் செவ்வாயன்று மீள்குடியமர்வு

## செம்மலை ம.வியில் கூடுமாறு அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஏப். 24

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட விருக்கின்றனர்.

அந்தப் பகுதியில் மீள்குடியமர விரும்புபவர்களைக் குடியமரும் ஆயத்தங்களுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு செம்மலை மகாவித்தியாலயத்துக்கு வருமாறும் -

வரமுன்பு தற்சமயம் தங்கியுள்ள கிராம சேவையாளர் பிரிவில் பதிவை ரத்துச்செய்து விடுப்புக் கடிதத்தை எடுத்து வருமாறும் - முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் கேட்டுள்ளார். (ஒ-ஐ)

## பாதிக்கப்பட்ட ஆசிரியர் இன்று கூடுகின்றனர்

யாழ். மாவட்டத்துக்கு நாளை இடமாற்றம் பெற்று, பின்னர் அந்த இடமாற்றம் ரத்துசெய்யப்பட்டமையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இன்று முற்பகல் 10 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் முன்கூடுகின்றனர்.

உடனடித் தீர்மானம் எடுக்கப்படவிருப்பதால், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை ஒன்று கூடுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

## தென்மராட்சி வயல்களில் மழை நீர் தேக்கம்

சாவகச்சேரி, ஏப்.24

தென்மராட்சியில் இருநாள்களாகப் பெய்த மழையால் வயல்களில் மழை நீர் தேங்கத் தொடங்கியுள்ளது.

இதனால் விவசாயப் பயிர்கள் சேதமடையலாம் என விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மழை மேலும் தொடர்ந்து பெய்தால் தென்மராட்சியில் பயிரிடப்பட்டுள்ள கத்தரிச் செடிகள் அழுகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது

தற்பொழுது மட்டுவில் கத்தரிக்காய் ஒரு கிலோ 20 ரூபா தொடக்கம் 25 ரூபாவரை தொகையாக விவசாயிகளிடம் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகின்றது. (ஐ-131)

# நாடுகடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகளை சிங்கப்பூர் சென்ற நாம் சந்திக்கவில்லை

## கருணாவின் குறும்புத்தனம் என்கிறார் சுரேஷ்

கொழும்பு, ஏப்.24

சிங்கப்பூரில் நாடுகடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்தனர் எனக் கூறப்படும் தகவல் பொய்யானது; நாம் அவர்களைச் சந்திக்கவில்லை.

-இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்கப்பூரில் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றச் சென்றிருந்தனர்.

இந்தக் கருத்தரங்கில் நாடு கடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர்கள் கலந்துரையாடினர் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருந்தார்.

முரளிதரனின் கருத்தை முற்றாக மறுத்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இராணுவத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அவர் குறும்புத்தனமாகக் கருத்துவெளியிட்டுள்ளார். நாடு கடந்த தமீழீழ அரசின் பிரதிநிதிகள் எவரையும் நாம் சந்திக்கவில்லை. அரசுக்கும் எமக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கிலேயே பங்கு பற்றினோம்-என்றார். (ஒ-ஐ)

# நிகழ்வுகள்

## உதவி வழங்கும் நிகழ்வு

யாழ். ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் வெளிவாரியாகப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு யாழ். எயிட் நிறுவனம் முன்னெடுத்து வரும் உதவி வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் நிர்வாக இயக்குநர் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் எல்.ஓ.எல்.சியின் வலயத் தலைவர் ரி.குமாரதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

உதவி வழங்குவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிறுவனத்தின் திட்ட அலுவலர் திருமதி ற.தர்மினி கேட்டுள்ளார். (ஐ-9)

## பரிசளிப்பு விழா

புத்தாண்டை முன்னிட்டு தேசிய வியாபார முகாமை நிறுவனத்தால் நடத்தப்பட்ட மாணவர்கள், அலுவலர்களுக்கான தனிநபர் மற்றும் குழுக்களுக்கு இடையிலான சதுரங்கப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேசிய வியாபார முகாமை நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.அறிவழகனும் சிறப்பு விருந்தினராக இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஐங்கரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-23)

## சனசமூக நிலைய ஆண்டு விழா

யாழ். கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தினதும் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினதும் 46ஆவது ஆண்டு விழாவும் ஈஸ்ரர் கலை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் இடம்பெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகளான இன்று கிரிக்கெட் உதைபந்தாட்டம், கரபந்தாட்டப் போட்டிகள் மற்றும் பட்டிமன்ற நிகழ்வுகள் நடைபெறும். நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும், போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல்களும் மற்றும் இசைக்கச்சேரியும் இறுதிநாள் நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சில்வெஸ்த்திரி அலென்ரின் கலந்துகொள்வார். (ஒ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினை சர்வதேச மயம்; அதனை அமுக்கிப் புதைக்க முடியாது

## சம்பந்தன் பேட்டி

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை இன்று சர்வதேசம் எங்கும் அறியப்பட்ட ஒரு விடயமாக மாறியுள்ளது. ஈழத் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது என்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டிருக்கது. எனவே இனி எவராலும் தமிழ் மக்களின் பிரச்சினையை அமுக்கிப் புதைத்துவிட முடியாது.

-இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'புதினப் பலகை'க்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தனின் பேட்டி வருமாறு:

**கேள்வி:** சமகால அரசியல் முன்னெடுப்புக்கள் குறித்துக் குறிப்பாக 2009 மே 19ஆம் நாளுக்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் புதிய நிலைமைகளில், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தி எவ்வாறான அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றீர்கள்?

**சம்பந்தன்:** 2009 வைகாசி மாதம், நீண்டகாலமாக நடைபெற்று வந்த யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தம் முடிவுக்கு வரும் வரையில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தமிழரின் உரிமைப் போராட்டத்தில் ஒரு முக்கியமான பங்களிப்பை வழங்கி வந்திருக்கின்றனர். அவர்கள், இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் தங்களுடன்தான் பேசி தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண வேண்டுமென்னும் கருத்தைக் கொண்டிருந்தனர். நாங்களும் அதற்கு மாறுபட்ட ஒரு கருத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதேவேளை நாங்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் எங்களது கருமங் களைத் தொடரவும் தவறவில்லை.

யுத்தம் ஓய்ந்த பின்னர், அந்தப் பணிகளைப் புதிய சூழ்நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்கிருந்தது. இதன் பொருட்டு நாங்கள் சில முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக இருந்தோம்.

விசேடமாக, தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மறைவு அல்லது அழிவின் நிமித்தமாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. எங்களது மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை, எனவே அரசியல் ரீதியான ஒரு தீர்வைக் காணும் எமது பயணமும் முற்றுப்பெறவில்லை என்ற உண்மையின் அடிப்படையில், நாங்கள் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருந்தோம். அவ்வாறானதோர் அரசியல் தீர்வைக் கண்டடைவதற்காக நாம் அரசுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியையும் வெளிப்படுத்தினோம்.

இலங்கை அரசை, எங்களுடன் பேசுவதற்கு நிர்ப்பந்திக்கும் நோக்கில் சர்வதேச சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தினோம். குறிப்பாக இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் எமது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினோம். இது தொடர்பில் இந்தியப் பிரதமர் மற்றும் உயர்மட்ட இந்தியத் தரப்பினர் பலருக்கும் நிலைமைகளைத் தெளிவுபடுத்தினோம்.

இவ்வாறான முயற்சிகளுக்கும் மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பொழுது, இரண்டு பிரதான வேட்பாளர்களுடன் எமது மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடினோம். நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் மூன்று தடவைகள், பல மணித்தியாலங்களாகப் பேசினேன். இதே போன்று, சரத் பொன்சேகாவுடனும் பல தடவைகள் பேசினேன் - எமது மக்களின் எதிர்பார்ப்பு தொடர்பில் ஓர் அரசியல் தீர்வைக் காணும் நோக்கில், எவரை ஆதரிப்பது பொருத்தமாக அமையும் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கிலேயே நாம் இவ்வாறான சந்திப்புக்களில் ஈடுபட்டோம்.

மேற்படி சந்திப்புக்களின் போது எமக்குக் கிடைக்கப்பெற்ற விளக்கங்களின் அடிப்படையிலேயே நாம் இறுதி முடிவையும் எடுக்க நேர்ந்தது. ஆனால் நாம் இவ்வாறான சந்திப்புக்களின் போது ஒரு விடயத்தை இரு வேட்பாளர்களுக்கும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று நாடாளுமன்றம் சென்றால், எவர் ஜனாதிபதியாக இருப்பினும் அவருடன் பேசி, எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்ற தகவலையும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

### தமிழ் மக்கள் எமக்கு ஆதரவு வழங்கினர்

எதிர்பார்த்தது போன்று நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் வடக்கு கிழக்கில் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று, நாடாளுமன்றம் சென்றோம். ஏனைய எந்தவொரு கட்சியும் குறிப்பாகத் தமிழ் கட்சிகள் எவையும் எமது மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. மக்கள் எமது அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டதன் விளைவே அவர்கள் எம்முடன் கைகோர்த்திருக்கக் காரணம்.

நாம் வெற்றி பெற்றதும் முன்னர் குறிப்பிட்டவாறு எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணும் நோக்கில், வெற்றி பெற்ற அரசுடன் பேசி வருகின்றோம். சில சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றோம். பேச்சு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

யுத்தத்தின் மூலமான விளைவுகளை நாம் அறிவோம் எனவே அது குறித்து நான் பேச வேண்டிய அவசியமில்லை. இந்த அனுபவங்களில் இருந்து கற்றுக் கொண்டுதான் நாங்கள் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஓர் அரசியல் தீர்வைக் காணும் நோக்கில் சில நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். எமது முயற்சிகளுக்கு பின்னால் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை எமக்குண்டு. குறிப்பாக இந்தியாவின் ஆதரவும் எமக்குப் பின்னால் இருக்கிறது.

### அரசுக்கும் நிர்ப்பந்தம்

சில காரணங்களின் நிமித்தமாக இலங்கை அரசும் ஓர் அரசியல் தீர்வு நோக்கி வர வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படலாம். அது அவர்களளவில் ஒரு கட்டாயமாகத் தேவையாகக் கூட அமையலாம். எனவே நாட்டில் அமைதி நிலவ வேண்டுமாயின், நாட்டில் புனரமைப்பு இடம்பெற வேண்டுமாக இருந்தால், நிச்சயமாக ஓர் அரசியல் தீர்வு அடிப்படையான தேவையாக இருக்கும். நாங்களும் எமது மக்களின் அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் நிதானமாக முன்னேற வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் பொருட்டு குறிப்பிட்ட இந்தக் காலத்தில் எங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வந்திருக்கிறோம். தொடர்ந்தும் முயல்வோம்.

**கேள்வி:** ஈழத் தமிழர்களின் கடந்த அறுபது ஆண்டுகால அரசியலை எடுத்து நோக்கினால், மிதவாத வழியில் தொடங்கிய உரிமைப் போராட்டம் பின்னர் ஆயுதவழி அரசியலை நோக்கி வளர்ந்து சென்று, மீண்டும் மிதவாத வழிக்கே திரும்பியிருக்கிறது. ஆனால் அரசியல் அடைவு Political Achivement என்று பார்த்தால், நம்மால் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவாறு எதனையுமே அடைந்திருக்க முடியவில்லை. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்.. இந்த காலங்களின் சாட்சியாக இருப்பவர் என்ற வகையில், உங்கள் அவதானத்தைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

**சம்பந்தன்:** இது ஒரு முக்கியமான கேள்வி. நீங்கள் குறிப்பிட்டதில் உண்மை இருக்கிறது. இந்த நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட இனத்துவப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணும் நோக்கில், தந்தை செல்வநாயகம் அவர்கள் இலங்கையின் இரண்டு முக்கிய தலைவர்களுடனும், குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில்

*(மீதி நாளை)*



# சந்தியடிச் சோமு

## மிடில்பாரத்தைத் தொலைச்ச பக்கத்து வீட்டுப் பெரியண்ணை

ஊரெல்லாம் கலகலப்பு பாருங்கோ! ஏனெண்டுதானே கேட்கிறியள்!

உந்த ஐ.நாகாரங்கள் அறிக்கைய வெளியிடப் போறமெண்டு பூச்சாண்டி காட்ட எங்கட தேசப்பற்று அரசியல்வாதிகள் உஷாராகிக் குளறிக் கத்தத் தொடங்கிட்டினம்.

அதவிட சாயிபாபாவுக்கு கடுமையெண்டு அவரின்ர பத்தர்கள் எல்லாம் ஒரே கலக்கத்தில இருக்கினம். கடவுளா அருள் புரிஞ்சவர் சுகயீனம் அடைஞ்சிருக்கிறத ஜீரணிக்க முடியாதுதானே பாருங்கோ. கடவுளுக்கு சுகம் வரவேணுமெண்டு மனிசரெல்லாம் கடவுள வேண்டிக்கொள்ளுகினம்.

காலம் எண்டிறது இப்பிடித்தான் பாருங்கோ, எதை நாங்கள் நினைக்கிறமோ அதது அப்பிடியே நடக்கிறதில்லை. காலம்தான் எல்லாத்தையும் தீர்மானிக்குது. இந்தக் கலிகாலத்தில கடவுளுக்காக மனிசர் பிரார்த்திக்கினம்; போரில வெற்றிவாகை சூடினவை போர்க் குற்றங்களில இருந்து தப்ப தலைதெறிக்க ஓடித் திரியினம்.

இந்த ரெண்டுமே நடக்காது எண்டு முன்னொரு காலத்தில 'மூத்தோர்' எல்லாம் சொன்னவை. ஆனால், கலிகாலத்தில எல்லாம் மாறிப்போச்சுது.

இந்த மாதிரி நான் வழமைக்கு மாறாக் கொஞ்சம் கூடுதலா சந்தியிலயிருந்து அலட்ட, பக்கத்தில சாயம் வாக்கிக் குடிச்சுக் கொண்டிருந்த பரமண்ண கொஞ்சம் கடுப்பாகி, ''நீயும் உந்த வழக்கமான பேப்பர்காரனா வந்திட்டாய். பேப்பர்காரன் காட்டுற திசையிலதான் சிந்திக்கிறாய். நெடுகப் பேப்பருக்க தலையப் புதைச்சுக் கொண்டு கிடக்காமல் இடைக்கிட கொட்டில் பக்கமும் வரவேணும். அப்பத் தான் மனசுக்கு ஆறுதலா இருக்கும்'' எண்டு மறுத்தான் போட்டார்.

இதக் கேட்டபடி சந்திக்கு வந்த கதிரண்ணை, ''நாட்டு நடப்ப நாலு பக்கத்தால பிரிச்சு மேயத்தானே இந்த பார்லிமென்ட் இருக்கு. சோமன் சொன்ன விசயங்களில பலதும் பத்தும் இருக்கு. கவனமா பாக்க வேணும்'' எண்டார்.

இதைக்கேட்ட நடாண்ணைக்குக் கிரந்தம் ஏறிவிட்டுது. ''ஐ.நா அறிக்கை, போர்க் குற்றம், மனித உரிமை மீறல் எண்டு ஊரே அல்லோல கல்லோலப்பட எங்கட பக்கத்து வீட்டு 'பெரியண்ணை' (Big brother) மூச்சு விடாமல் இருக்குது'' பார்த்தியே எண்டார்.

வாழக்குலையொன்டோட சந்திக்கு வந்த கந்தையர், அரசல் புரசலா காதில விழுந்ததை கேட்டு போட்டு, ''பக்கத்து வீட்டுப் பெரியண்ணைய அகிம்சா மூர்த்தி காந்தியின் தேசமெண்டு ஏன் தான் கூப்பிடுறாங்களோ தெரியேல்லை. போதாக்குறைக்கு மிகப்பெரிய ஜனநாயக நாடெண்டு ஒரு விளக்கமும் சொல்லுறாங்கள்'' எண்டு மூச்சு முட்ட நிறுத்தினார்.

பதிலுக்குத் தொடங்கின கதிரண்ணை பெருத்த விளக்க மொண்டு குடுத்தார். அதென்ன எண்டால் ''அம்பேத்கர் என்ற, ஒடுக்கப்பட்டவங்களுக்காகக் குரல் கொடுத்த அற்புதமான மனுசன் உருவாக்கின அரசமைப்பில இயங்கிற ஒரு காந்திய தேசம் தானே ரத்தக்கறையோட நிக்கிறதோட மட்டுமில்லாம, போதாக்குறைக்கு கொலையையும் அநியாயத்தையும் மூடிமறைக்க வேற பாக்குது. புத்த தத்துவத்தின் படி நடுநிலை தத்துவத்தை அதாவது மிடில் பார்த் எண்டு சொல்லுவினம் அந்த அடிப்படையைக் கொண்டு உருவான ஒரு நாடு அதைத் தொலைச்சிட்டு நிக்குது'' எண்டார் பாருங்கோ.

கதிரண்ணையின்ர வாசிப்பு அறிவை வைச்சு அந்தாள் சொல்லுற விசுயங்கள் பெரிய ஆச்சரியமா இருக்கும். நாங்களெல்லாம் வாய்பிளந்த ஞானம் கொண்ட பெரியாளுகள் தானே?

இந்த கதையளுக்க நடாவண்ணை கேட்டார் ''அது சரி போன கிழமை பெரிய பள்ளிக்கூட பெரியவர் ஒருத்தர் பெடி பெட்டையள கூட்டிக்கொண்டு அலரி மாளிகையில அரட்டையடிச்சதைப் பற்றி சொல்லுறனெண்டு எழுதினனி... இப்ப பேச்சு மூச்சக் காணேல்லை'' எண்டு என்னை வம்புக்கு இழுத்தார்.

பிறகென்ன வெறுவாய் மெல்லுற எனக்கு அவல் கிடைச்சா விடுவனே... ''அதண்ணை முன்னமும் நான் சொன்னது போல (நா)யா பாடுபட்டு (வி)க்கித்தக்கி நிர்வாகத்துக்கு சொன்னது பாதி சொல்லாமல் போனது பாதி எண்டு (மு)க்கித்தக்கி பெடி பெட்டயள ஏத்திக்கொண்டு பெரியவருக்கு முன்னம் கொண்டு போய் கட்டாயப்படுத்தி பாடப் பண்ணியிருக்கிறார் அந்தப் பெரியவர். போனது கல்விச் சுற்றுலாவாம்.

சங்கீதம் படிக்கிற கடைசி வருஷப் பெடி பெட்டையளின்ர கல்விச் சுற்றுலா பட்டியலுக்க அலரி மாளிகை எப்பிடி வந்ததெண்டு பலரும் கேட்கினமாம். அதிலயும் அரைவாசிப் பெடி பெட்டையளுக்கு அதில துளியும் விருப்பம் இல்லையாம். இஞ்ச இருந்து வெளிக்கிடேக்க பிளையளுக்கு அலரி மாளிகை பற்றி மூச்சும் விடேல்லையாம்.

அங்க போனாப்பிறகுதானாம் தெரியும். ஆனால் பெரிய வாத்தியார் எல்லா விசயத்தையும் ஏற்பாடு செய்துகொண்டுதானாம் போனவர். நினைவுப் பரிசு, சிங்களத்தில பேச்சு எண்டு எல்லாம் ரெடியாத்தானாம் அவர் போனவர்'' எண்டன்.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த கந்தையர் அந்த பெரியவர் ஏன் (நா)யா (வி)க்கி (மு)க்கி பண்ணிசை பாடினவராம் எண்டு தெரியுமே. அந்தாளின்ர இரண்டு பிள்ளையளுக்கு தன்ர டிப்பாட்மெண்டிலேயே வேலை வாங்கி குடுத்திட்டாராம். அவரே தன்ர பிள்ளையின்ர சோதினைப் பேப்பரத் திருத்தி நல்ல பெறுபேற போட்டு பிறகு வேலையும் போட்டு கொடுத்தவராம். எவ்வளவு பெரிய 'படிச்ச' மனுசன்'' எண்டு மிச்ச விசயம் சொன்னார்.

நான் மிச்சத்தையும் சொன்னன். ''அதெல்லாம் அண்ணை முடிஞ்ச கதை. வாரிசு வரிசையில இன்னமொண்டு நிக்குதாம். அதை விட மருமகள், மருமகன் எண்டும் ஒரு பெரிய பட்டியல் இருக்காம். அவையள் எல்லாற்ரை எதிர்காலத்துக்காகவும் தானாம் அலரிமாளிகையை அந்த மனுசன் அடியளந்தது.''

பெரிய பள்ளிக்கூடத்தில இப்ப என்ன பெரிய பகிடி தெரியுமோ,, கலாசாலையில குடும்ப ஆட்சிய நிறுவ நாட்டில குடும்ப ஆட்சியமைச்சவரிட்ட பேரெல்லாம் எண்டதுதானாம் எண்டு பென்ஷனியர் சொன்னார். அவற்றை மகன் அங்கதானே படிக்கிறான். அவன் வந்து சொல்லி இருப்பான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாய்பாபா உடல்நிலை மோசமடைகிறது அமெ. டாக்டர்கள் விரைந்து வருகை

புட்டபர்த்தி, ஏப். 24

சாய்பாபாவின் உடல் நிலை நேற்று மேலும் மோசமடைந்தது. அவரது உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாக அவரைக் கவனித்து வரும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து சாய்பாபாவுக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர் ஏ.என். சபையா கூறுகையில்:

சாய்பாபாவுக்கு சுவாசக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அவரது கல்லீரல் செயற்படவில்லை என்றும் ரத்த அழுத்தம் தொடர்ந்து குறைவாக இருப்பதாகவும் இது தங்களுக்கு பெரும் கவலையளிப்பதாகவும் டாக்டர் சபையா தெரிவித்தார். அவரது இதயத் துடிப்பு குறைந்து வருவதாகவும் டாக்டர் குறிப்பிட்டார்.

உயிருக்குப் போராடி வரும் சாய் பாபாவுக்கு தற்போது வயது 86. அவரது உயிரைக் காப்பாற்ற டாக்டர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக அமெரிக்காவில் இருந்து சில டாக்டர்கள் வந்து கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பாதுகாப்பு நடவடிக் கைகள் குறித்து ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ஆலோசனை நடத்தியதா கத் தெரிகிறது. ஒரு வேளை ஏதேனும் நடந்தால் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும், சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ஐ)

# கோப்பாய் நீரேரியில் மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

தென்மராட்சி,ஏப்.24

கோப்பாய் வண்ணாத்திப் பாலத்தில் உள்ள நீரேரியில் மீன் பிடிக்கச் சென்றவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

சந்திரபுரம் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வட்டன் வடிவேலு (வயது 74) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை வழமைபோல கோப்பாய் வண்ணாத்திப்பாலத்தில் உள்ள நீரேரியில் மீன்பிடிக்கச் சென்ற இவரைக் காணவில்லையென்று உறவினர்கள் நேற்று மாலை தேடிச் சென்ற வேளை இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் உதவியுடன் இவரது சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் பிரதேச பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

(ஓ-9-207)


## வீடு வாடகைக்கு

12 அறைகளையும் அதனோடு இணைந்த குளியலறை வசதிகளையும் உள்ளடக்கிய சகல வசதிகளையும் கொண்ட விஸ்தீரமான காணியில் அமைந்துள்ள மாடி வீடு யாழ். நகரமத்தியில் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் -விருந்தினர் விடுதி களுக்கும் உகந்தது.

தொடர்புகளுக்கு:0779184603

## கலைமகள் அழகு நிலா Beauty Academy



புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

பிரிவு I: 01.05.2011, பிரிவு II: 03.05.2011

சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்

பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியினை பயிலவிரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்

- ★ Facial (10 வகை)
- ★ Eyebrow Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening (2 வகை)
- ★ Hair Perming
- ★ Hot Oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair Colouring
- ★ Hair Dye
- ★ Pedeicure manicure
- ★ Bleaching (சி-577909)
- ★ நரம்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றுதல்.
- ★ Bridal makeup (6 வகை)
- ★ Wedding Icing

பயிற்சி நேரம்: மு.ப. 10 மணி - பி.ப. 1 மணி வரை

அனுமதிக் கட்டணம்: 1000/-

பயிற்சிக்கான கட்டணத்தை தவணை முறையில் செலுத்தலாம்.

கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773719071

## வீடு வாடகைக்குண்டு

மாநகர சபை எல்லைக்குள் யாழ். புனித பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் மருதடி வீதியில் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு வாகன தரிப்பிட வசதியும் உண்டு.
தனியார்/அரச/அரச சார்பற்ற அலுவலக உத்தியோகத்தர், தொழில் பார்க்கும் பெண்கள், பல்கலைக்கழக மாணவியர் விரும்பத்தக்கது. சிறிய குடும்பத்தினருக்கும் பொருத்தமுடையது. வாடகை நேரில் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு:-0775327636 (3472)

## Dutch (Netherlands),German ,French,English

மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகின்றது.

Netherland தூதரகத்தினால் April லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைய புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டவுள்ளன. ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விஷேட வகுப்புகளும் மாதிரி பரீட்சைகளும் தமிழில் உண்டு.

மாணவர்கள் கவனத்திற்கு:- இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும், Netherland தூதரகத்திற்க்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களுடைய ஆசிரியரை தெரிவு செய்ய முன் வெளிநாட்டிலிருந்து உங்களை Sponsor செய்பவர் மூலம் நீங்கள் தெரிவு செய்யும் ஆசிரியருடன் அந்தந்த நாட்டு மொழியில் கதைத்து அவர் உத்தரவாதம் மிக்கவரா? என்பதை உறுதிப்படுத்தியபின்பு உங்கள் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் பணத்தையும் நேரத்தையும் சேமிக்க கூடியாதாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும்!

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

"Dutch Lanka Academy" # 69- 2/1, Galle Road, Dehiwala. Tel #: 0777 251 332 / 011 271 8811

வெளி மாவட்டத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.* * Condition Apply

## 3D Animation/VFX

[Maya - 3D Max - After Effects]



TV/Film/Add.ஆகிய துறைகளுக்கு ஏற்றவகையில்

இந்தியாவில் மேலதிக கற்கைகளை பூர்த்திசெய்த, TV, திரைத் துறையில் அனுபவம் உள்ள ஆசிரியரினால் நேரடியாகக் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு தொடர்புகொள்க : 0750393776

## இறைச்சிக் கோழி விற்பனை

CSI

வரணிமிஷன் பாம் வரணி

மொத்தமாக-280/=

சில்லறை-300/=

தொடர்புகளுக்கு:0779690939

வெளிவருகின்றது......

தரம் 5 மாணவர்களுக்கான

புலமை வழிகாட்டி

மாதிரி வினாத்தாள்.

வெளியீடு.

NEW WAY ACADEMY

(பத்திரிசியார் கல்லூரி அருகில்) (3472)

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

GOV.Reg.No W/A 76795 T.P: 0774842464, 0213216928, 0779927117

CHESTERFIELD

## LOOKING TO GO TO UK FOR STUDIES

Seminar Conducted By
CHESTERFIELD EDUCATION CONSULTANTS and
INTERNATIONAL SCHOOL OF BUSINESS STUDIES FROM UK

## JOIN US AND WIN A CHANCE FOR A VISIT TO THAILAND

- *Vast Range of Undergraduate and Post-Graduate courses*
- *Affiliated degree courses with top British Universities recognise world wide*
- *high-quality education affordable to you*
- *highly qualified British lecturers*
- *Additional student support service*
- *Three in-takes each year*

Please do not miss these events.

| | |
|---|---|
| 26th April in Jaffna at 3.00 pm | Veerasingham Hall, 12 KKS Road, Jaffna. |
| 28th April in Kandy at 3.00 pm | Thilanka Hotel, Sangamitta Mawatha, Kandy. |
| 30th April in Colombo at 3.00 pm | SSC Cricket Grounds Pavilion entrance from Main Gate, Colombo 7. |

*Further information Please Call* **isbs** *072 236 1075 or 071 531 2593*

## யாழ். மண்ணில்.....

இல. 39,41 கண்டி வீதி, சுண்டிக்குளியில்(Jaffna)

## HOTEL TREAT 000!

TREAT எங்களது! 000! உங்களது!



1) உயர்தர வசதிகள் கொண்ட படுக்கை அறைகள் A/C, T.V, With Cable Connection.
2) 2 Rooms, Hall, Kitchen for day rent.
3) Conference Hall With 50 Seating Capacity.
4) 10 Vehicle Can be Parked inside the Hotel Premises.
5) Food can be arranged acording to your's requirements.
6) Bakery Products.

Tel: 0212220298, 0212220299
M.B- 0770871284, 0779925540.
E.Mail: treatooohotel @ gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தென் இந்திய திருத்தல யாத்திரை



சுற்றுலா செல்லும் இடங்கள், தலங்கள்

01. சென்னை நகர் சுற்றுலா - அண்ணா சதுக்கம், எம்.ஜி.ஆர்.சமாதி மரினா கடற்கரை
02. கபாலீஸ்வரர் ஆலயம்
03. அஷ்டலக்ஷ்மி ஆலயம்
04. மகாவலிபுரம் சிறப்பக் கடற்கரை
05. வடபழனி முருகன் ஆலயம்
06. திருவேற்காடு கருமாரி அம்மன் ஆலயம்
07. காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயம்
08. மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயம்
09. பஞ்சவடு ஆஞ்சநேயர் ஆலயம்
10. பாண்டிச்சேரி
11. சிதம்பரம் நடராஜர் ஆலயம்
12. சீர்காழி சிவன் ஆலயம்
13. திருநல்லாறு சனீஸ்வர ஆலயம்
14. வேளாங்கன்னி மாதா ஆலயம்
15. திருவாரூர் ஆலயம்
16. கும்பகோணம் ஆலயம்
17. மகாமககுளம்
18. சுவாமிமலை (ஆறுபடை வீடு)
19. தஞ்சாவூர் பெரியகோயில்
20. பிள்ளையார் பட்டி ஆலயம்
21. ராமேஸ்வரம் சிவன் ஆலயம்
22. திருச்செந்தூர் முருகன் ஆலயம் (ஆறுபடை வீடு)
23. கன்னியாகுமாரி சுசிந்தர் ஆலயம்
24. கன்னியாகுமாரி அம்மன் ஆலயம்
25. கன்னியாகுமாரி படகு சவாரி
26. கன்னியாகுமாரி திருவள்ளுவர் சிலை
27. கன்னியாகுமாரி விவேகானந்தர் மண்டபம்
28. திருநெல்வேலி
29. குற்றாலருவி
30. திருப்பரங்குன்றம் (ஆறுபடை வீடு)
31. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம்
32. மதுரை அழகன் ஆலயம்
33. பழமுதிர்ச்சோலை, ஆறுபடை வீடு
34. பழனி (ஆறுபடை வீடு)
35. திருச்சி உச்சிப்பிள்ளையார் ஆலயம்
36. ஸ்ரீ ரங்கம் பெருமாள் ஆலயம்
37. சமயபுரம் ஆலயம்
38. திருவண்ணாமலை சிவன் ஆலயம்
39. வேலூர் தங்கக்கோயில்
40. திருப்பதி தேவஸ்தானம்
41. திருத்தணி முருகன் ஆலயம் (ஆறுபடை வீடு)
42. சென்னை ரீ நகர் பொருள் கொள்வனவு (இறுதிநாள்)

(48,19,25)



ஆகிய முக்கிய தலங்களுடன் மொத்தமாக 41 இற்கும் மேற்பட்ட தலங்கள்



A/C - Video Coach,
வாகன சேவை,
தங்குமிட வசதி,
உணவு
உள்ளடங்கலாக...

10 நாள்கள்
9 இரவுகள்

தொடர்புகளுக்கு:
0247390000, 0777857575,0777770029
ஆர்.ஜெகன்- 00919840489425

மேலும் சென்னை நகர் சுற்றுலா, கன்னியாகுமாரி படகு சவாரி குற்றால அருவி குளியல் உட்பட சென்னை முதல் கன்னியாகுமாரி வரை

தமிழகம் முழுவதும் சுற்றுலாப் பயணம்

# லங்கா வோல்டைல்ஸ்

## மகத்தான மலிவு விற்பனை!

40% தள்ளுபடி

ஏராளமான வடிவங்களிலும் அளவுகளிலும் பெறலாம்

ஏப்பிரல் 25 முதல் 30 வரை

- நாராயண செரமிக் பிரிவு, 113, A9, கிளிநொச்சி.
- மின்சார நிலைய வீதி (யாழ் போதனா வைத்தியசாலைக்குப் பின்னால்), யாழ்ப்பாணம்.

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!


## பாதங்களைப் பயமுறுத்தும் கால் ஆணி

பாதங்களைத் தாக்குவதில் பித்தவெடிப்புக்கு அடுத்தபடியாக இருப்பது கால் ஆணி. இது பாதத்தைத் தரையில் வைக்க முடியாத அளவுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும்.

கால் ஆணி என்பது அதிகமான உடல் அழுத்தம் காரணமாக உருவாகிறது. அளவு குறைந்த காலணிகளை அணிவது உட்படப் பல்வேறு அழுத்தங்களால் கால்களில் ஆணி ஏற்பட்டு, பெரும் துன்பத்தைத் தருகிறது. இந்தக் கால் ஆணிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் அவையே பின்னாளில் அல்சராக மாறுவதற்கும் வாய்ப்பு உண்டு.

### கால் ஆணி ஏற்படக் காரணம்

பாதத்தில் சிறு தொப்பளங்கள் போல உண்டாவதைத்தான் கால் ஆணி என்று கூறுகிறார்கள். கால் ஆணி உடையவர்களின் செருப்புகளைப் பயன்படுத்தினால் அதைப் பயன்படுத்துபவர்களுக்கும் கால் ஆணி வர வாய்ப்புள்ளது. காலுக்குப் பொருந்தாத சிறிய அளவு செருப்புகளைப் பயன்படுத்துவதாலும், வெறும் காலில் நடப்பதாலும் கூடக் கால்ஆணி ஏற்படும்.

கால் ஆணி ஏற்பட்டு விட்டால் அதனை உடனடியாகச் சரிப்படுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் கால் முழுவதும் பரவி நடக்க முடியாத நிலைக்குத் தள்ளிவிடும்.

### கால் ஆணிக்கு உரிய சிகிச்சை

கால் ஆணி ஏற்பட்ட உடனேயே உள்ளிப் பூடைக் கசக்கி அதன் சாறைக் காலில் ஆணி இருக்கும் இடங்களில் தடவி வரவும். இரவுப் பொழுதில் பூடைக் கசக்கிக் காலில் வைத்துத் துணியால் கட்டுப் போட்டுவிட்டு காலையில் எடுத்துவிடலாம். இதேபோல் ஒரு வாரம் செய்து வந்தால் கால் ஆணி விலகிவிடும். மேலும், மல்லிகைச் செடியின் இலையை இடித்து அதன் சாறை எடுத்து பாதத்தில் பத்துப் போடுங்கள். பாதத்தில் கால் ஆணி மேலும் பரவாமலும், இருந்த இடம் தெரியாமலும் போகும்.

மஞ்சள் ஒரு துண்டு, வசம்பு ஒரு துண்டு, மருதாணி ஒரு கைப்பிடி அளவு எடுத்து விழுதாய் அரைத்து, கால் ஆணிகள் மீது தொடர்ந்து 21 நாள்கள் வரை பூசிவர, கால் ஆணிகள் அனைத்தும் மறையும்.

## தினமும் முட்டை சாப்பிடலாமா?

முட்டை சைவமா? அசைவமா? என்றொரு கேள்வி நீண்ட நாள்களாக நம்மிடையே உண்டு. சிலர் அதைச் சைவம் என்றும், பலர் அதை அசைவம் என்றும் கூறுகின்றனர். சரி அதை நாம் விட்டு விடுவோம்.

தினந்தோறும் முட்டைகள் சாப்பிடலாமா?

அமெரிக்காவில் நடந்த ஓர் ஆய்வின் மூலம் 14 ஆண்டுகள் தினமும் முட்டை சாப்பிடும் பல ஆயிரம் நபர்களைத் தொடர்ந்து கண்காணித்து வந்துள்ளனர். இந்த ஆய்வின் மூலம் இவர்களுக்கு உடலில் இதய நோய்க்கான அறிகுறியே இல்லை என்பது தெரியவந்துள்ளது. சத்துணவான முட்டையில் உள்ள பொருள்கள் இதயநோயைக் குணப்படுத்துவதோடு அதிக அளவு கொலஸ்ரோல் இல்லாமல் பாதுகாத்துக் கொள்கிறது. இதனால், முட்டை சாப்பிட்டவர்களுக்கு கொலஸ்ரோல் அதிகரிக்கவில்லை. அமெரிக்காவின் முட்டை சத்துணவு மையமும், ஹார்வார்டு கல்லூரி ஆப் பளிக் ஹெல்த்தும் கடந்த 14 ஆண்டுகளாக முட்டை உணவு பற்றி ஆராய்ந்தன. அதில்தான் இந்த உண்மைகள் வெளிவந்தன. முட்டையில் கொலஸ்ரோல் இருப்பது உண்மை! ஆனால், அதை அளவுடன் சாப்பிட்டால், இதயத்துக்கு எந்த விதமான கெடுதலையும் செய்யாது எனத் தெரிவித்துள்ளது. அளவான உணவு தயாரித்து அதன்படி சாப்பிடுகிறவர்கள் தினமும் முட்டையை ஒதுக்க வேண்டாம். முட்டையில் தீய கொலஸ்ரோலுடன் நல்ல கொலஸ்ரோல் அளவும், இதே அளவு சக்தி வாய்ந்த தரத்துடன் இருக்கின்றன. எனவே, தீய கொலஸ்ரோல் இரத்தத்தில் சேராது. இத்துடன் இதயத்துக்கு பாதுகாப்பான போலிக் அமிலம் மற்றும் விற்றமின்களும், நச்சு முறிவு மருந்துகளும், கொழுப்புச் செறிவில்லாத கொழுப்புகளும் முட்டையில் உள்ளன என்கிறார் டாக்டர் டெனால்ட் மெக்மைரா.

1976 ஆம் ஆண்டு முதல் பதினொரு அமெரிக்க மாநிலங்களில் தினமும் முட்டை சாப்பிட்டு வந்த தாதியர்களின் உடல்நிலை கவனிக்கபட்டு குறிப்புகள் சேர்க்கப்பட்டன. இந்த ஆய்வு 2 வருடம் நடைபெற்றது.

1986 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க பல் டாக்டர்கள், கண் வைத்தியர்கள், கால்நடை வைத்தியர்கள் தினமும் முட்டை சாப்பிட்டனர். இவர்களுக்கு கொலஸ்ரோல் அளவு, 12 ஆண்டு கள் அதிகரிக்கவில்லை. பக்கவாத நோய் அபாயமும் ஏற் படவில்லை.

80 ஆயிரம் தாதியர்களின் உடல் நலம் பற்றிய 14 ஆண்டு கால மருத்துவக் குறிப்பேடுகள், 37 ஆயிரம் ஆண்களின் உடல் நலக்கோளாறு பற்றிய எட்டு வருட மருத்துவ குறிப்பேடுகள் தெரிவிக்கும் உறுதியான தகவல்கள். தினமும் ஒரு முட்டை சாப்பிடலாம். அதுவும் பயமில்லாமல் சாப்பிடலாம் என்பதுதான்.

சாதாரண அவித்த முட்டையில்தான் இவ்வளவு நன்மைகள். இதில் வெண்ணெய், பன்றிக் கறி, பாம் ஆயில் போன்றவை சேர்த்துச் சாப்பிட்டால் கெடுதல் தான். நீரிழிவு நோயாளி கள் தினமும் முட்டை சாப்பிடக் கூடாது. இது அவர்களுக்குக் கெடுதல் உண் டாக்கும். வைத்திய யோசனைபடி வாரம் ஒரு முட்டை சாப்பிட லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரத்த செல்கள் இதய செல்களாக

இரத்த செல்களைத் துடிக்கும் இதய செல்களாக மாற்றும் புதிய முறையை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்தப் புதிய முறை வைரஸ் இல்லாத புதிய பிரபஞ்ச முறையாக அறியப்படுகிறது.

புதிய இதய செல் ஆய்வினை ஜான்ஸ் ஹாப்கின்ஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த முறையில் இதயச் செல்களை உருவாக்க அதிகம் செலவினம் ஆவதில்லை என்று கூறுகின்றனர்.

உலக அளவில் இதனைப் பயன்படுத்த முடியும். புதிய முறையில் உருவாக்கப்படும் இதய செல்கள் 100 சதவீத செயற்திறன் கொண்டது என ஆய்வில் தெரியவந்துள்ளது. ஜான் ஹாப்கின்ஸ் செல் பொறியியல் மற்றும் கிமல் புற்று நோய் விஞ்ஞானிகளே இந்தப் புதிய செல் முறையைக் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வு குறித்து ஜான் ஹாப்தின்ஸ் தனியார் நிறுவனத்தின் உதவிப் பேராசிரியர் எலியஸ் ஜாமிபிடிஸ் விளக்கி உள்ளார். ஆதாரச் செல்களை இதயச் செல்களாக மாற்ற வைரஸ் இல்லாத முறை கடைபிடிக் கப்பட்டுள்ளது. இதில் வெற்றியும் கிடைத்துள்ளது.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்தின்**
**புத்தம்புதிய கிளை இப்போது சாவகச்சேரியில்**

இல. 138, கண்டி வீதி,(A9) சாவகச்சேரிக்கு வருகை தந்து
நாளைய எதிர்காலத்தை இன்றே அனுபவியுங்கள்.

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........
## 24.04.2011 முதல் 30.04.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்
உறவினர்கள் சிலர் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். உதிரி வருமானங்களைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அடுக்கடுக்காகப் பல வேலைகளைச் செய்வீர்கள். சிறிய விடயங்களுக்குக் கூடச் சிலரிடம் கோபப்பட்டு எரிந்து விழலாம். தந்தையுடன் கருத்து மோதல் ஏற்படலாம். பிள்ளைகள் வழியிலும், குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றவும், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கவும், உடல் நலத்தைப் பேணவும், இளைய உடன் பிறப்புகள், சகோதரிகள், பங்காளிகள், வீடு, கட்டடப் பராமரிப்பு, நிலம், பூமியை சீரமைத்தல் போன்ற வகைகளிலும் கணிசமாகச் செலவாகலாம். மற்றவர்களிடம் உங்களின் பெருமையைக் காட்ட வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்து விட்டுப் பின்னர் வருத்தம் அடைவீர்கள். வழக்கு களில் வெற்றி கிட்டும். தொழில் ரீதியான ஆதாயம் அதிகரிக்கும்.

### இடபம்
பிள்ளைகள் வழியில் கணிசமான பணச் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் குடிகொள்ளும். நெடுநாளைய இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றித் திருப்தி அடைவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பெற்றோர் வழியில் செலவுகள், சிரமங்களை எதிர்கொள்ளலாம். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் கூடும். பணிபுரிவோர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கலாம். எதிலும் கவனம் அவசியம். தண்டச் செலவு நேரும்.

### மிதுனம்
ஆதாயமற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். ஆலய வழிபாடுகளில், ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். உடல் ரீதியான சிறு உபா தைகளால் உற்சாகம் குறையலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. எதிர்பாராத வகையில் சில நல்ல காரியங்கள் நடக்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். பணிபுரியும் பெண்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். பழைய வாகனங்கள் சிலவற்றை மாற்றி சிலர் புதிய வாகனங்கள் வாங்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், உதவிகரமாக இருப்பர். அவர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். சகோதரர்கள், பங்காளிகளால் நன்மை அடையலாம். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். இருந்தாலும், பணிபுரிவோர் மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். பணவரவுகளைப் பெறலாம்.

### கடகம்
சில விடயங்களில் துணிச்சலாக முடிவெடுத்து, மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில் ரீதியான போட்டிகள் குறைந்து ஏற்றம் பெறுவீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான வகையில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். முகவர் தொழில் புரிவோர் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். மாற்று மதத்தினர் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளால் ஆதாயம் பெறலாம். தந்தை வழி உதவி கிட்டும். பிள்ளைகள் வழியிலோ, வேறு வழியிலோ திடீர் செலவு நேரும். பணம் வரும்.

### சிங்கம்
வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிலும் தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்பி வரலாம். பல மணி நேரமாகும் என நினைத்த சில காரியங்கள் சுலபமாக முடிவுக்கு வரலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். நீண்ட நாள்களாக பார்க்காத நண்பர்கள் சிலரைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டும். முகவர் தொழில் புரிவோர் முன்னேற்றம் காணலாம். பழைய பொருள்களை மாற்றிப் புதிய பொருள்களை வாங்கலாம். தந்தை வழியில் திடீர் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதிலும் இழுபறிகள் காணப்படும். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் திருப்தி இருக்காது. கடன் பிரச்சினைகளிலும், பொலிஸ் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். அலைச்சல், திரிச்சல் உண்டு. உறவினர்களுக்காக, நண்பர்களுக்காக செலவு செய்யலாம். திடீர் பயணங்கள் செல்லலாம். குழப்பம் தடுமாற்றம் நேரும்.

### கன்னி
பெண்களால் சில நன்மைகள் அடையலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கும். குடும்பத்தினர் சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதால் மன அமைதி பாதிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையும். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். மறதியால் அவதியுண்டு. உறவினர்கள் மத்தியிலும், தொழில் ரீதியான வகையிலும் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகமாக செயற்பட வைக்கும். பிள்ளைகளின், குடும்பத்தினரின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். தொழில் ரீதியான பயணங்கள், அலைச்சல்கள் கூடும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். கணவன்-மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள் வகையில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்கள் தள்ளிப் போகலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பணவரவுகளைப் பெறலாம். அலைச்சல், திரிச்சல், தண்டச் செலவு நேரும்.

### துலாம்
திடீர்ச் செலவுகளால் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். பிறரிடம் கைமாத்து வாங்கும் சூழ்நிலை உருவாகும். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். புது உத்வேகம், தெம்புடன் செயற்படுவீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். சிலரிடம் கைமாத்தாக, கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். பெண்களால் இனிய அனுபவங்களைப் பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகளால் ஆதாயம் பெறலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். இழுபறியாக இருந்த கடன் மிகுதி ஒன்றைத் தீர்ப்பீர்கள். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வருமானம் அதிகரிக்கும். சகோதரர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமை அடைவீர்கள். தொழில் முன்னேற்றம் கூடும். பணிபுரிவோர் புதிய பொறுப்புகளை ஏற்கும் சூழ்நிலை உருவாகும். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. இருந்தாலும், உங்களின் கோபம், வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடக்கலாம். வாகனங்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் வழியில் செலவு உண்டாகும்.

### விருச்சிகம்
எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். கைமாத்தாக, கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போலத் தோன்றினாலும், இறுதியில் சாதகமாக நடக்கலாம். பல நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். தேவையான பணத்தை எந்த வகையிலாவது புரட்டிக் கொள்வீர்கள். நீண்ட தூரப் பயணங்கள், வெளிநாட்டுப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் நீங்கி, அவர்கள் மூலம் ஆதாயம், நிம்மதி பெறலாம். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்விற்கு வரும். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்களால் சிரமங்களைச் சந்திக்கலாம். அவர்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யாமல் கையை விரிக்கலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.

### தனுசு
திட்டமிட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உங்களுக்குப் பிடித்த சில பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்பீர்கள். சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கலைஞர்கள் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். வியாபாரிகள் இருப்பு சரக்கு விற்பனை மூலம் கூடுதல் ஆதாயம் பெறலாம். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியான அலைக்கழிப்புகள், சிரமங்கள், வேலைப்பளு தொடரும். வழக்கு விவகாரங்களில் நல்ல திருப்பங்களைக் காணலாம். கடந்த காலத்தில், பிரச்சினையாக இருந்த சில விடயங்கள் முடிவுக்கு வரும். தாயார் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சிலர் வீடு மாறும், இடம் மாறும் சூழ்நிலை உருவாகும். வீம்புக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியான அலைச்சல் கூடும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள்.

### மகரம்
எதிர்பாராத சந்திப்பு நிகழும். சில வேலையாக வெளியூர் பயணம் செல்லலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களால் சந்தோஷம் உண்டு. திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றித் திட்டமிடாத காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுகளைப் பெற்றலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உறவுப் பெண்கள், சகோதரிகள், பெண் பிள்ளைகள் வழியில் உதவி கிடைக்கலாம். நீண்ட நாள்களாகப் பார்க்காத அவர்களில் சிலரைப் பார்க்கலாம். பழைய வாகனங்களை மாற்றிப் புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட் டங்களில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். விவசாயிகள் விளைபொருள்கள் விற்பனையால் கூடுதல் வருமானம் பெறலாம். பொலிஸ் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. கலைத்துறை யினர் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். தொழில் ரீதியாகப் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளுக்கு தந்தை வகையிலும், பணிபுரிவோருக்கு அதிகாரிகள் வகையிலும் தொல்லைகள் உரு வாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை.

### கும்பம்
எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். எதிர்பாராத தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். சிலர் உங்களின் மனம் புண்படும் வகையில் பேசலாம். வெளியூர் பயணம் செல்லலாம். எதிர்பாராத வகையில் சில சம்பவங்கள் நடக்கலாம்.. சில பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. தேவையானதைப் புரட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். பெண்கள், பயணங்கள், விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு போன்ற நல்ல பலன்களைக் காணலாம். கலைத்துறையினர் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். தடைபட்டுக் கொண்டே வந்த சில காரியங்கள் திடீரென நடக்கலாம். தந்தை வழியில் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். மருத்துவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். சூடான பேச்சுக்களை, குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உடன் பிறப்புக்களால் சிரமம் உண்டாகலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள் இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். சுகமான அனுபவம் உண்டு. கடன்கள் வசூலாகும்.

### மீனம்
ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். சிலருடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்களிடம் கடுமையாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். கணவன்-மனைவி உறவில் சிறு உரசல்கள் உருவாகலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான வகையில் தொல்லைகளே அன்றி, ஆறுதல் இல்லை. மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுவீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பிறர் பொறாமைப்படும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். அதே நேரத்தில், உடல் ரீதியாக அவ்வப்போது சிறிய உபாதைகள் உருவாகித் தொந்தரவு கொடுக்கலாம். அனுபவம் இல்லாத விடயங்களில் தலையிட வேண்டாம். நம்பிக்கை இல்லாத நபர்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். பக்தி நாட்டம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MRF

"நான் MRF டயரினால்
75,000 கி.மீ.
பயணம் செய்தேன்"



"நான் பஜாஜ் மோட்டார் சைக்கிளை வாங்கும் போது அதற்கு இரு MRF டயர்களே பொருத்தப்பட்டிருந்தது. அதில் பிற்பக்க டயரை 55,000 கி.மீ. ஓட்டிய பிறகே மாற்றினேன். அதே போன்று மோட்டார் சைக்கிளை வாங்கும் போது பொருத்தப்பட்டு வந்த முன்பக்க டயரில் கிட்டத்தட்ட 75,000 கி.மீ. பயணம் செய்தேன். உண்மையாகவே ஆசுகு டயர் சக்தியில் மிகவும் உயர்ந்தது. இலகுவில் டயரில் "பச்" ஏற்படாது. நான் உத்தரவாதத்துடன் கூறுவது அதிக நாட்கள் அதிக தூரம் பயணிக்க வேண்டுமாயின் MRF டயரை பொருத்திக்கொள்ளுங்கள்."

ராஜா பாலசூரிய
இல.70,
டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை,
புவக்பிட்டிய.



மேலும் இலட்சக் கணக்கான திருப்பியடைந்த வாடிக்கையாளர்கள் MRF முச்சக்கர வண்டி டயர் மற்றும் MRF மோட்டார் சைக்கிள் டயர் பற்றி இவ்வாறு தெரிவிப்பது MRF டயரிலுள்ள உலகில் வேறேந்த டயரிற்கும் சளைக்காத சிறப்பியல்பினாலே ஆகும்.

MRF
மோட்டார் சைக்கிள் டயர் மற்றும் முச்சக்கரவண்டி டயர்
சாதாரண டயரை விட
3 மடங்கு தூரம்!
விலை: ரூபா 1750/- இலிருந்து

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677

# அத்திப் பழத்தின் மகிமை

அத்திப்பழம் உணவை விரைவில் சமிபாடடையச் செய்வதோடு சுறுசுறுப்பைத்தந்து, ஈரல், நுரையீரலிலுள்ள தடுப்புகளையும் நீக்குகிறது. அத்திப் பழத்தை உண்ணுவதால் கால் விரல்களில் உண்டாகும் ஒருவித நோயையும் வராமல் தடுக்கமுடியும். அத்தோடு வாய்த்துர் நாற்றம் நீங்கும் தலைமுடியும் நீளமாக வளர உதவுகிறது.

1. தினசரி 2 பழங்களைச் சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்,

2 மலச்சிக்கலை நீக்க உணவுக்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம்,

3. நாள்பட்ட மலச்சிக்கலைக் குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.

4. போதைப் பழக்கம் மற்றும் இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப்பழங்களை வினிகரில் ஒருவாரம் வரை ஊற வைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒருவேளை சாப்பிடலாம்.

5.தினசரி இரண்டு அத்திப்பழங்களைச் சாப்பிட்டு வந்தால் உடல் கவர்ச்சிகரமாகும். இதில் முழு அளவு ஊட்டச்சத்து இருக்கின்றது.

விஞ்ஞானிகள் அத்திப் பழத்தை ஆராய்ச்சி செய்து பார்த்தபோது இதில் புரோட்டின், சீனிச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்து ஆகியன அதிக அளவில் இருப்பதாகவும், மற்றைய பழங்களைவிட அத்திப்பழத்தில் இந்தச் சத்துக்கள் நாலு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் கண்டறிந்தனர். இதைத் தவிர விற்றமின் ஏ, விற்றமின் சி அதிக அளவிலும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பழத்தைப் பொதுவாக உடற் பலவீனத்திலும், உடற் சுகயீனத்திலும் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள். பதப்படுத்தப்பட்ட அத்திப்பழங்கள் மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றன. இதைச் சீமை அத்திப்பழம் என்று கூறுவர்.

சீமை அத்திப்பழம் வெண்குஷ்டத்தைக் குணமாக்குகிறது. அரை கிராம் காட்டு அத்திப்பழத்தைத் தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும். அதைத் தூளாக்கிப் பன்னீரில் கலந்து வெண் புள்ளிகள் மீது பூசலாம்.

புதிய வருடம் வீதம் பெறுமதி

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்ச்சி | வ.வ.வீ |
|---|---|---|---|---|
| 1 மாதம் | - | - | 9.50% | 9.92% |
| 3 மாதங்கள் | - | - | 10.50% | 10.92% |
| 6 மாதங்கள் | - | - | 11.00% | 11.30% |
| 1 வருடம் | 12.00% | 12.68% | 12.10% | 12.10% |
| 2 வருடங்கள் | 12.00% | 12.68% | 13.00% | 12.25% |
| 3 வருடங்கள் | 12.00% | 12.68% | 13.00% | 11.60% |

முத்த பிரஜைகளுக்கு ஒரு வருடத்திற்கு மேலதிகமாக வருடாந்தம் 0.5%
வட்டி வீதம் அறிவிக்கப்படாமல் மாறுதலுக்குட்படலாம்.
வ.வ.வீ - வருடாந்த வருமான வீதம்

பாட்லீட் பினான்ஸ், புதுவருட பரிசொன்றை உங்களுக்கு வருடம் முழுவதிலும் வெகுமதியளிக்கும் வகையில் வழங்குகிறது. நீங்கள் அருகிலுள்ள பாட்லீட் கிளை அலுவலகத்தில் நிலையான வைப்பொன்றை ஆரம்பித்தால் அதன் மூலம் ஒரு வருடத்திற்கான கூடிய, நிலையான வட்டி வீதத்தை பெற்றுக் கொள்ளலாம். விரையுங்கள், மட்டுப்படுத்திய வாய்ப்புக்களே உள்ளன. முடிவு திகதி ஏப்ரல் 30.

| வவுனியா | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | களுத்துறை | மாத்தறை | எம்பிலிப்பிட்டிய | நீர்கொழும்பு | பண்டாரவளை | பொலன்னறுவ | பலாங்கொட | ஹொரன | காலி | ஹம்பந்தோட்டை | பாணந்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0773 425 113 | 0773 464 399 | 0771 096 995 | 0777 427 281 | 077 3043873 | 0773 296 195 | 0772 620 662 | 0773 043 874 | 0772 929 576 | 0772 013904 | 0777776012 | 0777557044 | 0772442226 | 0773740662 |

| கொழும்பு | சஹன் - 0772 384 880 | மயூரன் - 0773 522 916 |
|---|---|---|

BARTLEET GROUP
Strength of a Century
நிதி நிறுவனங்கள் 1988ன் சட்ட இல. 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையால் பதிவு செய்யப்பட்டது.

BARTLEET FINANCE BBB- (RAM)*
2வது மாடி, பாட்லீட் ஹவுஸ், 65, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
பக்ஸ்: 011 5333494 மின்னஞ்சல்: fd@bartleet.com
இணையதளம்: www.bartleetfinance.com
* RAM - மலேசிய கணக்கீட்டு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எடையை குறைப்பது மூளைக்கு சிறந்தது

உடல் எடையைக் குறைப்பது உடல் ஆராக்கியத்துக்கும், தோற்றத்துக்கும் மட்டுமின்றி மூளையின் ஆரோக்கியத்துக்கும் சிறந்தது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உடல் எடையைக் கணிசமான அளவு குறைப்பது என்பது ஞாபக சக்தி மற்றும் ஒரு விடயத்தில் தீவிரக் கவனம் செலுத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கென 150 பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்கள் எல்லோரும் 21 கல்(ஒரு கல்=11 இறாத்தல்) எடைக்கு மேல் கொண்டவர்கள். ஆரோக்கியமான மக்களோடு இவர்கள் ஒப்பிடப்பட்டனர். இதில் எடை கூடியவர்களுள் நான்கில் ஒரு பங்கினர் ஞாபக சக்தி சோதனையில் மிகக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். கற்கும், ஆற்றல் குறைவானவர்களை ஒத்ததாகவே இவர்களின் ஞாபக சக்தி ஆற்றல் அமைந்திருந்தது. இவர்களுள் பலருக்கு மேலதிக சுகாதாரப் பிரச்சினையும் காணப்பட்டது. மேலும் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, உறக்கமின்மை என்பன இந்தச் சுகாதாரப் பிரச்சினைகளுள் சிலவாகும். ஆரம்பக் கட்ட சோதனைகளின் பின் ஆய்வில் பங்கேற்றவர்களுள் மூன்றில் இரண்டு பங்கினர் வாயுக் கோளாறுக்கான சத்திர சிகிச்சை செய்து கொண்டு தமது தொப்பையின் அளவைக் குறைத்துக் கொண்டனர்.

12 வாரங்களின் பின் இவர்கள் ஞாபக சக்தி உட்பட இன்னும் பல ஆற்றலில் முன்னரிலும் பார்க்க சிறந்து காணப்பட்டனர். ஆனால் இந்த ஆய்வில் கலந்து கொண்ட பின்னரும் எடை குறைப்பில் எந்த ஆர்வமும் காட்டாதவர்களின் நிலை தொடர்ந்து மோசமடைந்ததையும் அவதானிக்க முடிந்தது.

எமது மண்ணிற்கு உரித்தான பாரம்பரியமிக்க தொழில்நுட்ப உரிமை

TAFE
முன்னேற்றத்திற்கான நம்பிக்கை



அன்று *MF* 240 தொழில்நுட்பத்தில் இலங்கை மண்ணின் விளைச்சலைப் பெருக்கியதோடு, இன்றும் அதே *MF* 240 தொழில்நுட்பத்துடன் "ட:.பே" (TAFE) டிரக்டர். எமது வம்சத்தினரின் பரம்பரை நம்பிக்கையைக் கொண்டு உங்கள் வாழ்க்கையையும் செழிப்பாக்கிடுங்கள். அசல் "ட:.பே" (TAFE) டிரக்டரை பிறவுண்ஸ் இடமிருந்துப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Browns Agriculture

Brown & Company PLC
பிறவுண்ஸ் விவசாய பிரிவு,
481, டி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
0112 697 111

தொடர்புகளுக்கு : வடக்கு/வடமத்தியம் - நிஸ்சங்க - 0773457986, கிழக்கு - உத்தீப - 0773457987, வடமேல்/மத்தியம் - இந்திக - 0773457988, தெற்கு/ஊவா - சந்துன் - 0773457982

வாழ்க்கைச் சுமையை சுமக்கும்
டிமோபட்டா

TATA



64,100
வீட்டிற்கு கொண்டு செல்லுங்கள்

டிமோ - பாட்டா
வருடப்பிறப்பின்

குறைந்த செலவில் - மிகுந்த இலாபம்
லீசிங் சக்தியினால் ஏற்படும் முன்னேற்றம்

நாட்டைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் - உதவியுடன் மகிழ்ச்சியும் - அவசரமாக அருகிலுள்ள கிளைக்கு வாருங்கள் பிரதான அலுவலகங்கள் - 0777 573799

மாத்தறை - 0777 688712
பலங்கொட - 0777 579891
களுத்துறை - 0777 427281
பொலொன்னறுவை - 0772 929576
எம்பிலிபிட்டிய - 0773 296195
வவுனியா - 0773 425113
நீர்கொழும்பு - 0772 447401
காலி - 0777 557044
பண்டாரவலை - 0773 043874
ஹொரண - 0777 776012
யாழ்ப்பாணம் - 0773 464399
ஹம்பன்தொட்டை - 0772 442226
மட்டக்களப்பு - 0771 096995
பானந்துறை - 0773 740662

dimo TECHNOLOGY
அபார ஆற்றல்
வரையறுக்கப்பட்ட
டீசல் மற்றும் மோட்டார் பொறியியலாளர்
பொதுக் கம்பனி
அழையுங்கள் - 0114 369 419

- குறைந்த எரிபொருள் செலவில் அதிக தூரம்
- சேவை அங்கத்தவர்கள் நாடு பூராகவும்

BARTLEET FINANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org